ஸ்ரீ சங்கீத பத்திரிகை

தொகுதி ௩ (3)

வைகாசி. 1929, NOV

JL
Y592ண,ஆ N29CH
N29.3.5
144441.

Registered No. M. 1514

# செங்குந்த மித்திரன்

No. 21 MAY 1929 MADRAS

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.

தொகுதி - ௩] | சுக்கில௵ - வைகாசிமீ | [பகுதி - ரு

உள்ளடக்கம்


| | |
|---|---|
| பத்திரிகாசிரியர் முன்னுரை .... | கஎங |
| செங்குந்தர் கல்விநிதிச் சீட்டு .... | கஎரு |
| ஆராய்ச்சிப் பகுதி : தொடர்மொழி விளக்கம் | கஎஎ |
| பொது விஷயங்கள் : பொதுநல உணர்ச்சி ... | கஎஅ |
| தந்தையின் கடமை .... | கஅ௦ |
| அறிவியல்பகுதி: நாம் வசிக்கும் வாயு சமுத்திரம் | கஅஉ |
| தொழிற் பகுதி : நம்மவர்கள் கைத்தொழிலில் முன்னேறுவது எப்படி ? ... | கஅச |
| சமயப் பகுதி : செங்குந்தரும் சிவதீக்ஷையும் | கஅரு |
| உபதேச மொழிகள் .... | கஅசு |
| நாவல் பகுதி : வெறுப்பு விருப்பானது .... | கசுக |
| சுகாதாரப் பகுதி : குடும்ப வைத்தியம் .... | ககூஎ |
| கிளைச்சங்கங்களின் மாதிரிச் சட்டதிட்டங்கள் | ககூஅ |
| செங்குந்தர் கிளர்ச்சி .... | உ௦௦ |
| நிரூபங்கள் .... | உ௦ரு |
| வர்த்தமானங்கள் ... | உ௦அ |
| கவர்ன்மெண்ட் நெசவுச்சாலை அறிவிப்பு .... | உ௦கூ |
| தலைச்சங்கத்தின் வேனிற்கால விடுமுறைபிரசாரம் | உகக |
| செங்குந்த மித்திரன் பஞ்சாங்கம் .... | உகஉ |


தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

நெ. 31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

## விளம்பரங்கள்

# 'செங்குந்தமித்திரன் புத்தகசாலை'

**நல்ல புத்தகங்கள் !** — **நம்பிக்கையான விலைகள் !**

இது வெளியூர்களிலுள்ள செங்குந்த நேயர்களுக்குத் தேவையான புத்தகங்களை வாங்கி வி. பி. தபாலில் அனுப்புவதற்கெனவே ஏற்பட்டுள்ளது. இவ்விடம் தமிழிலும் ஆங்கிலத்திலும் அகராதிகள், புராணங்கள், நவீனக்கதைப் புத்தகங்கள், பிரபந்தங்கள், வைதிகநூல்கள், பாடபுத்தகங்கள் முதலியவற்றின் திருத்தமான பதிப்புக்கள் அழகான கட்டடங்களில்கிடைக்கும். தேவையான புத்தகங்களுக்கு ஆர்டர் அனுப்புக. ஆர்டர் அனுப்புவதோடு அதன் மதிப்பின் கால்பாகத்தை முன்பணமாக மணியார்டர் செய்தனுப்புக. மிகுதி நிற்கும் ரூபாயைத் தபால் பாகிங் செலவோடு வி. பி. போஸ்டில் புத்தகமனுப்பி வாங்கிக்கொள்ளுவோம். முன்பணமில்லாத ஆர்டர்கள் கவனிக்கப்படமாட்டா.

இவ்வியாபாரத்தில் வரும் லாபமனைத்தும் நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தார் ஏழைச் செங்குந்த மாணவரின் கல்வி சம்பந்தமாகச் செய்யும் தருமங்களுக்கு உதவுமாகையால், புதிய புத்தகங்களை வாங்க விரும்பும் செங்குந்த நேயர்கள் அபிமான சிந்தையுடன் நமது 'செங்குந்தமித்திரன் புத்தகசாலை'க்கே ஆர்டர் அனுப்பவேண்டிக்கொள்ளுகிறோம்.

ஈ. வே. சிங்காரவேலு முதலியார், பி.ஏ.,
**மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபிஸ்,**
200, தம்புசெட்டித் தெரு. சென்னை.

---

## செங்குந்த மித்திரன்


## காலண்டர்

அநேக அசௌகரியங்களாலும், சொற்ப நண்பர்களே, காலண்டர் வேண்டுமென்று கேட்பதாலும் இப்போது அதிகநாட்களாகி விட்டதாலும், காலண்டர் போடச் சாத்தியமில்லை. காலண்டரை எதிர்பார்த்திருந்த அன்பர்களுக்கு எமது வருத்தத்தைத் தெரிவிக்கிறோம். இதுவரை ஸ்டாம்பு அனுப்பியுள்ள நண்பர்களுக்கு அவற்றைத் திருப்பி அனுப்புகிறோம்.

பத்திரிகாசிரியர்.

---

**எங்கள் விசேஷக் குறைந்த விலை விற்பனை**




**14 காரட் ரோல்டு கோல்டு புதுமாடல் கைக்கெடியாரங்கள்**

இதிற்கண்டபடி எந்த [illegible] வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம்போல் இருக்கும். ஒவ்வொரு கெடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச் சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். 5-வருஷம் உத்தரவாதம். ரூ. 6-10-0. வி.பி. வேறு.

**எம். ஜே. ஈஸ்வரி அண்டு கம்பனி,**
சௌகார்பேட் போஸ்ட், மதருஸ்.

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

[பத்திரிகாசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.]

| தொகுதி - ௯ | சுக்கிலவருஷம் - வைகாசிமீ | பகுதி - ௫ |
|---|---|---|


முருகன் துணை

கண்ணிமதி புனைந்தசடைக் கனியேமுக்கண் கரும்பேஎன் கண்ணேமெய்க் கருணைவாழ்வே
புண்ணியநன் னிலையுடையோ ருளத்தில்வாய்க்கும் புத்தமுதே ஆனந்தபோகமே சீர்
எண்ணியமெய்த் தவர்க்கெல்லாம் எளிதிலீந்த என்னாசே அறுமுகத்தெய்வ[illegible]
திண்ணியவென் மனமுருக்கிக் குருவாயென்னைச் சிறுகாலை யாட்கொண்ட தேவதேவே.

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### தலைச்சங்கத்தின் புது வருஷத்துப் பிரசாரம்

கடந்த மாதத்திய சஞ்சிகையில் குறிப்பிட்டபடி, நமது தலைச்சங்கமானது தென்னாட்டு ஜில்லாக்கள் தோறும் அதிதீவிரமான பிரசாரஞ் செய்யத் தொடங்கிவிட்டது. இப் பிரசாரத்திற்குத் துணையாக நின்று தமக்கேற்படும் அசௌகரியங்கள் எவற்றையுங் கவனியாமல், தத்தம் சொந்த ஜில்லாக்களில் மட்டுமல்லாமல் வெளி ஜில்லாக்களுக்குஞ் சென்று, வெகு சிரத்தையுடன் உழைக்கப் பல அறிவாளிகளும் குலாபிமானிகளும் முன் வந்திருக்கின்றனர். அவரவர்களின் விருப்பத்தையனுசரித்தும், நமது சங்கத்தின் தேவைகளைக் கவனித்தும் கீழ்க் குறிப்பிட்டுள்ள ஏற்பாட்டின்படி நமது கௌரவப் பிரசாரகர்கள் பிரிந்து சென்றிருக்கின்றனர்.—

#### திருநெல்வேலி ஜில்லா.

தெ. ப. கு. ஆறுமுக முதலியார்
சி. ப ஆறுமுக முதலியார்
ரா. வேலாயுத முதலியார்
சி. கயினர் முதலியார்
பி. ஏ. கணபதி முதலியார் பி.ஏ,
பி. செ. மாணிக்கவாசக முதலியார்.

#### இராமநாதபுரம் ஜில்லா.

அ. கு. சி. சிவசுப்பிரமணிய முதலியார்
அ. கு சி. குழந்தைவேல் முதலியார்
ம. ப. ரா. இருளாண்டி முதலியார்
இ முனியப்ப முதலியார்
கருப்பையா பிள்ளை
பி. செ. மாணிக்கவாசக முதலியார்
வீ. இரத்தின முதலியார், பி.ஏ ,பி.எல்.

#### மதுரை ஜில்லா

வீ. இரத்தின முதலியார், பி.ஏ., பி.எல்.
வ. சுந்தரபாண்டிய முதலியார்
எஸ் மாணிக்க முதலியார்
பி. வி. முத்துக்கருப்ப முதலியார்
கெ. வி. இராமசாமி முதலியார்

#### திருச்சிராப்பள்ளி ஜில்லா

சொ. கந்தசாமி முதலியார்
வீ. இரத்தின முதலியார், பி.ஏ ,பி.எல்,
உ. மாரிமுத்து முதலியார்

#### தஞ்சாவூர் ஜில்லா

சொ. கந்தசாமி முதலியார்
A. S. முத்தையா முதலியார், பி.ஏ.
வீ. இரத்தின முதலியார் பி.ஏ., பி.எல்.

### தென் ஆற்காடு ஜில்லா

தி. அ. சண்முக முதலியார்
வ. கந்தசாமி முதலியார்
சொ. கந்தசாமி முதலியார்
க. இராமலிங்க முதலியார்

### வட ஆற்காடு ஜில்லா

தி. அ. சண்முக முதலியார்
சை. அ. ஆலாலசுந்தர முதலியார்
பி. சி. கந்தசாமி முதலியார்
பி. ந. கந்தசாமி முதலியார்

### செங்கற்பட்டு ஜில்லா

ம. த. சாமிநாத முதலியார்
ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.
பி. செ. மாணிக்கவாசக முதலியார்
மா. அ. கனகசபை முதலியார்
தி. அ. சண்முக முதலியார்
சொ. கந்தசாமி முதலியார்

### சேலம், கோயம்பத்தூர், மலையாளம் ஜில்லாக்கள்

V. S. சங்கரசுப்பிரமணிய முதலியார் பி.ஏ., பி.எல்.
C. பன்னிருகைப் பெருமாள் முதலியார் : பி.ஏ., பி.எல்.
S. பழனியாண்டி முதலியார்
T. R. கந்தப்ப முதலியார்
வ. மு. மொட்டையப்ப முதலியார்
கு. முத்துக்குமாரசாமி முதலியார்

இவர்கள் நிறைவேற்றப் புறப்பட்டிருக்கும் வேலைகளாவன :—

1. ஆங்காங்கே நம்மவரிடையே உபந்நியாச வாயிலாக நல்லறிவையும், உலகானுபவத்தையும், முன்னேற்ற உணர்ச்சியையும் புகுத்துதல்.

2. ஆங்காங்கே உள்ள கட்சிப் பிளவுகளை விலக்கி ஒற்றுமைப் படுத்தல்

3. இதற்குச் சாதகமாக நம்மவர் வதியும் கிராமங்கள் தோறும் சங்கங்கள் நிறுவி, அவற்றை நமது தலை சங்கத்தோடு இணைத்தல். (இவற்றிற்குரிய மாதிரித் திட்டங்களை மற்றோரிடத்தில் காண்க)

4. செங்குந்த மித்திரனுக்குப் புதுச் சந்தாதாரர்கள் சேர்த்துக் கொண்டு, புதுச் சந்தாக்களையும் பாக்கி நிற்கும் சந்தாக்களையும் வசூலித்தல்.

5. நமது தலைச் சங்கத்தின் ஆதரவில் ஏற்படுத்தப் பெற்றிருக்கும் செங்குந்தர் கல்விநிதிக்கு நன்கொடை வசூலித்தல்.

6. தலைச் சங்கத்திற்கு மகமை, உண்டி, ஊர்வரி, நற்சடங்குச் கட்டணம் முதலிய சாசுவதமான வரும்படிகளை ஏற்படுத்தல்.

7. செங்குந்தர் கல்விநிதிக்கென ஏற்பட்டுள்ள சீட்டு டிக்கட்டுகளை விற்றல் முதலியன.

இத்தொண்டுகளை இயற்ற நமது பிரசாரகர்கள் நம்மவர் கிராமங்தோறும் செல்லும்போது அவ்வவ்விடங்களில் அவர்களுக்கு வேண்டிய ஒத்தாசையை அந்தந்தக் கிராமத்தினர் செய்யப் பின் வாங்கமாட்டார்கள் என்பது எமதுறுதி. பிரசாரகர்களுக்குப் புலனாகாதுள்ள இடங்களை அவர்களுக்குத் தெரியப்படுத்தி அங்கே அவர்களை வரவழைத்தலும் அவ்விடங்களிலுள்ள குலாபிமானிகளின் கடமையாகும்.

#### கல்விநிதிச் சீட்டு.

மேற்குறிப்பிட்டுள்ள செங்குந்தர் கல்விநிதிச் சீட்டைப் பற்றிய விவரங்களை அடுத்த மாதத்தில் கண்டு கொள்க. இச்சீட்டு வெற்றியுடன் நடைபெறத் துணைசெய்வது நம்மவர் பெருங் கடனாகும்.

ம. ச.

## செங்குந்தர் கல்வி நிதி.

இக் கல்வி நிதி நமது முதலாவது மகாநாட்டின்கண்
தென்னிந்திய செங்குந்த மகாஜனசங்கத்தின் ஆதரவில்
நம்மவர் கல்வி யபிவிருத்திக்காக ஏற்படுத்தப்பட்டது.
இதற்கு அன்பர்கள் மகாநாட்டின்கண் நிறைவேறிய தீர்மானத்தின்படி

1. மகமை ஏற்பாடு செய்யவும்,
2. உண்டி வசூலித்து அனுப்பவும்,
3. சடங்குகளில் கட்டணம் செலுத்தவும்,
4. ஊர்ப்பொதுப் பணங்களிலிருந்து பங்கு தரவும்,
5. நன்கொடை அளிக்கவும்

வேண்டிக்கொள்ளப் பெறுகின்றனர்.

ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.
பி. செ. மாணிக்கவாசக முதலியார்.
தலைச்சங்க அமைச்சர்கள்.

☞ மேற்படி தரும நிதிக்கு நமது தலைச்சங்கத்தின் ஆதரவில் ஒரு அதிர்ஷ்டச்சீட்டு போடப்பட்டிருக்கிறது. இதன் விவரத்தை அடுத்த பக்கத்திலும் தனித் துண்டுப் பிரசுரங்களிலும் அன்பர்கள் அறிந்து கொள்ளலாம்.



உ

முருகன் துணை.

"கல்வியினூங் கில்லை சிற்றுயிர்க் குற்ற துணை"

# தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின்

ஆதரவில் நடைபெறும்

# செங்குந்தர் கல்விநிதிச் சீட்டு.

### சீட்டுப் போடவேண்டிய அவசியமும் நோக்கமும்

சமூக முன்னேற்றத்திற்கும் தேச முன்னேற்றத்திற்கும் கல்வி இன்றியமையாததென்பது யாவருமறிந்ததே. இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசங்கள் மற்றெல்லாத் தேசங்களினும் சிறந்து திகழ்வதற்குக் காரணம் அத்தேச மக்களின் கல்வியறிவுத் தேர்ச்சியே. நம் நாட்டில் நூற்றுக்குப் பத்துப் பேரும் எழுதப் படிக்கத் தெரிந்தவரல்லர். அதிலும் நம்குல மக்களில் படித்தவர் தொகை பிறர் எள்ளி நகையாடுதற் கிடமான சொற்ப எண்ணிக்கையே. இவ்விழுக்கை நீக்குதற்கும், நம்மவர் இராஜீய, தேசீய, கைத்தொழில், வியாபார விஷயங்கள் எல்லாவற்றிலும் பிரமுகர்களாவதற்கும் கல்வியில் தேர்ச்சி பெறுதல் அவசியம். போராட்டமும் போட்டியும் நிறைந்த இக்காலத்தில் நம்மவர் வியாபாரத்திலாகட்டும், கைத்தொழிலிலாகட்டும், மற்றும் எத்துறையிலாகட்டும் அப்போதப்போது கண்டு பிடிக்கப்படும் நூதன முறைகளை அறிந்து அவற்றைக் கையாண்டால்தான் பலத்துடன் நிற்க முடியும். இதற்குக் கல்வி மிகவும் அவசியம். ஆரம்பப் படிப்பு, கலாசாலை உயர்தரப் படிப்பு, கல்லூரிப் படிப்பு, மற்றும் வியாபாரம், வைத்தியம், போதனு முறை, சட்டம், கைத்தொழில் (நெசவு), என்ஜினீரிங் முதலிய துறைகளிலும் நம் குல மாணுக்கர்கள் தேர்ச்சிபெறலவசியம்.

அங்ஙனம் தேர்ச்சி பெறுவதற்குப் பண ஒத்தாசை இன்றியமையாதது. சாசுவதமான உபகாரச் சம்பள நிதி யொன்று ஏற்படுத்தி அதன் வட்டி வருவாயிலிருந்து நம் இனத்து மாணுக்கர்களுள் தக்கவர்களெல்லோருக்கும் உதவி செய்தல் வேண்டும். இந்தியிலிருந்து வெளிநாட்டுச் சர்வகலாசாலைப் பயிற்சிக்கும், கைத்தொழிற் கல்விக்கும் புத்தி கூர்மையும் ஊக்கமுமுள்ள மாணுக்கர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புவதற்கு வேண்டிய அளவு வருவாய் ஏற்படுதல் அவசியம். பரம ஏழைகளாகிய சில புத்தி கூர்மையான செங்குந்த மாணுக்கர்களுக்கு உபகாரச் சம்பளமேயன்றி உண்டி, உடை, இருப்பிடங்களையும் இலவசமாகத் தந்துதவுவதும் அவசியமே. அதற்கொரு விடுதியினை இராஜதானி நகராகிய சென்னையில் ஏற்படுத்த நம் சங்கம் முயன்று வருகிறது. இதற்கும் ஒரு பெருநிதி அவசியமென்பது அன்பர்கள் அறிந்ததே.

### நிருவாக சபை.

இதனைக் கருதியே சென்ற விபவ ௵ தை ௴ 7, 8 தேதிகளில் ஈரோட்டில் கூடிய தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாட்டில் செங்குந்தர் கல்விநிதிக்குப் பொருள் திரட்டுதற்குக் கூறிய மார்க்கங்களில் "சீட்டு" ஒன்று ஆரம்பித்து அதில் பெருந்தொகை மிச்சப்படுத்துதல் வேண்டுமெனத் தீர்மானமானது. இதை முன்னிட்டுத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் நிருவாக சபையார் 1-5-29-ல் கூடிய தமது கூட்டத்தில் கீழ்க்கண்ட கனவான்கள் சேர்ந்த சபையின் மேல்பார்வையில் 'செங்குந்தர் கல்விநிதிச் சீட்டு' ஒன்று நடத்தத் தீர்மானித்திருக்கிறார்கள்.

#### தலைவர்.

திரு. ஆ. வே. முத்தைய முதலியார் அவர்கள், பி.ஏ. பி.எல்., புதுவை.

#### காரியதரிசிகள்.

திரு. வீ. ரத்தின முதலியார் அவர்கள், பி.ஏ., பி.எல்., அட்வகேட், சென்னை.

திரு. ஈ. வே. சிங்காரவேலு முதலியார் அவர்கள், பி.ஏ.

#### பொக்கிஷதாரர்கள்.

திரு. ம. சண்முகசுந்தர முதலியார் அவர்கள், எம்.ஏ., எல்.டி.,

திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்கள்.

#### அங்கத்தினர்கள்.

திரு. ம. சாமிநாத முதலியார் அவர்கள், காஞ்சிபுரம்.
திரு. தி. நா. சபாபதி முதலியார் அவர்கள், திருவாரூர்.
திரு. தெ. ப. கு. ஆறுமுக முதலியார் அவர்கள், தென்காசி.
திரு. வா. செ. செங்கோட்டையா முதலியார் அவர்கள், கோயமுத்தூர்.

திரு. தி. ரா. கந்தப்ப முதலியார் அவர்கள், திருச்செங்கோடு.

திரு. கு. முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள், கொல்லங்கோடு.

திரு. மா. வே. பீமராஜா முதலியார் அவர்கள், குடியாத்தம்.

திரு. மா. வேலாயுத முதலியார் அவர்கள், குடியாத்தம்.

திரு. சி. பொ. இரத்தினசபாபதி முதலியார் அவர்கள், பி.ஏ., பி.எல்., திருப்பாதிரிப்புலியூர்.

திரு. சு. சாலை முதலியார் அவர்கள், மதுரை.

திரு. பி. வேலாயுத முதலியார் அவர்கள், கோட்டாறு

திரு. இராஜேஸ்வர முதலியார் அவர்கள், சிலோன்.

திரு. அ. பழனியாண்டி முதலியார் அவர்கள், இரங்கூன்.

திரு. அமிர்தலிங்க முதலியார் அவர்கள், ஜோஹானஸ்பர்க், தென் ஆபிரிக்கா.

### செங்குந்தர் கல்விநிதிச் சீட்டின் விபரம்.

டிக்கட் ஒன்றுக்கு எட்டணு (0-8-0) வீதம் 1 லக்ஷம் ரூபாய் வசூல் செய்து, அச்சுக்கூலி, சிப்பந்திச் சம்பளம், பிரயாணச் செலவு முதலியவற்றிற்காக ரூ. 15,000 போக, மீதி ரூ. 85,000-த்தில் ரூ. 60,000 செங்குந்தர் கல்விநிதிக்காக வைத்துக்கொண்டு, மிகுதியுள்ள ரூ. 25,000-த்தைச் சீட்டுக்கள் வாங்கிய நண்பர்களுக்குச் சீட்டுக் குலுக்கிக் கீழ்க்கண்டபடி பிரைசுகளாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| (1) | 1-வது பிரைஸ் 1-க்கு | ரூ. 5000 | ஆக | ரூ. 5000 |
| (2) | 2-வது ,, ,, | ,, 2500 | ,, | 2500 |
| (3) | 3-வது ,, ,, | ,, 1000 | ,, | 1000 |
| (4) | 4-வது ,, ,, | ,, 500 | ,, | 500 |
| (5) | 5-க்கு | ,, 200 | ,, | 1000 |
| (6) | 10 ,, | ,, 100 | ,, | 1000 |
| (7) | 20 ,, | ,, 50 | ,, | 1000 |
| (8) | 40 ,, | ,, 25 | ,, | 1000 |
| (9) | 100 ,, | ,, 15 | ,, | 1500 |
| (10) | 300 ,, | ,, 10 | ,, | 3000 |
| (11) | 600 ,, | ,, 5 | ,, | 3000 |
| (12) | 1500 ,, | ,, 3 | ,, | 4500 |
| | | | மொத்தத் தொகை | ரூ. 25,000 |

ஒரு டிக்கட்டின் விலை எட்டணுவாக 21 டிக்கட்டுகளடங்கிய ஒரு புத்தகத்தை விற்கும் நபர் ரூ. 10 அனுப்பிவிட்டு 1 டிக்கட்டைக் கமிஷனுக்காக எடுத்துக்கொள்ளலாம். 20 டிக்கட்டுக்குக் குறைந்து விற்கிறவர்களுக் கமிஷன் கிடையாது.

### கல்விநிதிச் சீட்டுக்கள் வாங்குவோர் கவனிக்க வேண்டிய விஷயங்கள்.

மை கல்விநிதிக் கமிட்டியார் ஏற்பாட்டின்படிச் சீட்டுச் சம்பந்தமான கணக்கு, ரிக்கார்டு முதலியவை ஜாக்கிரதையாய் வைக்கப்பட்டுவருகின்றன. டிக்கட் வாங்கியவர் எவரேனும்கணக்குப் பார்க்க விரும்பினுல் ஆபீஸ் நேரத்தில் தேவையானபோது பார்த்துக் கொள்ளலாம்.

டிக்கட்டிலுள்ள ஒவ்வொரு இடத்தையும் பூர்த்தியாக எழுதி அதன் ஒரு பாகத்தைப் பணம் கொடுத்தவர் பெற்றுக்கொள்ள வேண்டும். மற்ெருரு பாகத்தையும் பணத்தையும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பி விடவேண்டும். டிக்கட் புத்தகங்கள் தேவையானவர்கள் மை கமிட்டிக் காரியதரிசிக்கு அல்லது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கக் காரியதரிசிக்கு எழுதியாவது, அல்லது ஆங்காங்குப் பிரசாரம் செய்துவரும் நமது தலைச்சங்கப் பிரசாரகர்கள் மூலமாவது பெற்றுக்கொள்ளலாம். மை கல்விநிதிக் கமிட்டிக்குப் பணம் சேராத டிக்கட்டுக்கள் குலுக்கப் பெரும் சீட்டுக்களோடு எவ்விதத்திலும் சேர்க்கப்படமாட்டா. டிக்கட்டுப் பெற்றவர்கள் தங்கள் நெம்பர் கல்விநிதிச் சீட்டில் சேர்ந்திருக்கிற விபரம் தெரிய வேண்டுமானுல் ரிப்ளை கார்டில் தங்கள் டிக்கட்டு நெம்பரையும் குறித்தனுப்பித் தெரிந்துகொள்ள வேண்டும்.

### கல்விநிதிச் சீட்டு எடுத்தல்.

1929ஹு அக்டோபர்மீ 6ட மேற்படி கமிட்டி மெம்பர்கள், பொதுஜனங்கள் ஆகியோர் முன்னிலையில் சீட்டுக் குலுக்கிப் பிரைஸ் எடுக்கப்படும். சீட்டுக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பூராத்தொகை ஒரு லக்ஷ ரூபாயும் வசூலாகாது குறையுமானுல் விகிதாசாரப்படிப் பிரைஸ்கள் குறைத்தே கொடுக்கப்படும். எல்லாத் தொகைகளும், டிக்கட்டுகளும் 1929ஹு செப்டம்பர்மீ 20உக்குள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு வந்து சேர்ந்துவிட வேண்டும்.

### பிரைஸ் வந்தவர்களுக்கு அறிவிக்கும் விதம்.

சீட்டு எடுத்தானவுடன் முடிவு பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும். பிரைஸ் வந்த முதல் 20 நபர்களுக்கு அவர்கள் செலவில் தந்தி கொடுக்கப்படும். மற்றவர்களுக்குத் தபால் மூலம் அவர்கள் செலவில் தெரிவிக்கப்படும். பிரைஸ் பெற்றவர்கள் சீட்டுப் போட்ட ஒரு மாதத்திற்குள் தங்களிடமுள்ள ரசீதில் கையெழுத்திட்டு அனுப்பிப் பணத்தை நேராகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ பெற்றுக்கொள்ள வேண்டியது.

ஒவ்வொருவரும் நம்மவருள் கல்வியினை வளர்ப்பதனையே தங்கள் முக்கியக் கடமைகளுள் ஒன்றாகக் கருதிப் பொது நன்மைக்கான இந்நிதியினைத் தவறாது ஆதரிக்க வேண்டுகிறோம்.

**ம. சண்முகசுந்தர முதலியார், எம் ஏ., எல்.டி.,**
**பீ. சே. மாணிக்கவாசக முதலியார்,**

அமைச்சர்கள்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்,
சென்னை. 3—5—29.



## ஆராய்ச்சிப் பகுதி

### தொடர்மொழி விளக்கம்.

(மித்திரன் தொகுதி 3, 141-ம் பக்கத் தொடர்ச்சி.)

**ஆலகாலவிடம்:**—இது தெய்வீகஞ் சிறந்து விளங்கும் நம்பரத நாட்டின் இந்து நன்மக்கள் பல்லோராலும் வழங்கப்படும் பண்டைத் தமிழ்த்தொடர் மொழிகளி லொன்று. இஃது "கொடிய யுகாந்தகாலத்தைப்போல விருண்டு யாவரையும் கொல்லும்படித் தோன்றிய நஞ்சு" என்னும் பொருள்பட்டு, தேவாசுரர்கள் நரை, திரை, மூப்புச் சாக்கா டொழித்தலை வேண்டி யமுதம் பெறுவான், திருப்பாற்கடலைக் கடைந்த செய்கையையும், கண்ணுதற் பெருமான் கடல் வாய்த்தோன்றிய நஞ்சை யுண்டு காளகண்டரான கதையையும், உலகினர்க் குணர்த்துவதொரு தொடர்மொழியா மென்க. இதனை நந்தமிழ் நாட்டார் மிகவும் கொடிய துஷ்டத்தனத்தையுடைய ஒருவனது செய்கையை விவரிக்குமிடத்து "அப்பா! அவனு! ஆலகாலவிஷமாயிற்றே, நம்பலாமா அவனை! ஆலகாலவிடத்தையும் நம்பலாம், ஆற்றையும் பெருங்காற்றையும் நம்பலா" மென்கின்றனர். தூர்க்கிருத்தியமுடைய வொருவனைச் சேர்க்கக்கூடாது என்று புகுந்த விடத்து, "ஆலகாலவிடமாயிற்றே, அவனைச் சேர்க்கலாமா?" என்று எச்சரிக்கின்றனர். தவிர, கொடிய செய்கையையுந் தன்மையையு முடைய எந்தப் பதார்த்தத்திற்கும் (வஸ்துவுக்கும்) ஆலகால விஷத்தை யுவமானிக்கின்றனர். ஆனுலித்தகைய வரிய சந்தர்ப்பங்களில் பிரயோகிக்கப்படுகின்ற இத்தொடர்மொழியானது முதன் முதல் யாவரால் எது காரணம்பற்றி யுண்டாயது? இதன் பொருளுங் கருத்துமென்னை? இது எதுமுதல் உலகத்தாரால் அநுஷ்டானத்துக்குக் கொண்டு வரப்பட்டது? இது சம்மந்தமான சரித்திரங்கள் யாவை? என்பனவாதிகளைக் குறித்து, ஊன்றிப் பார்த்தறிந்தனர் மிகச்சிலரேயாமென்க. எனவே இத்தொடர் மொழியைக் குறித்தீண்டாராய்ச்சி செய்யப்புகுவோமாக.

முற்காலத்திலே தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் கொடிய யுத்தம் நேரிட, அவர்கள் ஒருவர்க்கொருவர் போர்புரிந்து இருதிறத்தவரிலும் அநேகர் இறந்துபோவது கண்டு யோசித்து இனி நாம் இறப்பதைத் தவிர்க்கின்ற அமுதத்தைப் பெறவேண்டு மென்று கருதிச் சத்தியலோகஞ் சென்று, கமலாசனனுகிய பிரமனைக் கண்டு வணங்கி, "தலைவ! யாங்க ளிறவாது நெடுநாள் போர் புரியக் கருதினோமாதலின் பாற்கடலைக் கடைந்து அமுதளிக்கவேண்டு மென்று பணிவுடன் வேண்ட, பதுமன், திருமாலிடஞ் சென்று தேவாசுரர்களின் விருப்பை யறிவிக்க, விஷ்ணுமூர்த்தி, அவர் வேண்டுகோட் கிணங்கி "அவ்வாறே யாகுக" என்று அவர்களையழைத்துக்கொண்டு திருப்பாற்கடலை யடைந்து மந்தரமலையை மத்தாகவும், சந்திரனைத் தூணுகவும், அட்டமாநாகங்களிலொன்றாய வாசுகியை நாணுகவும், அமைத்துத் தேவர்கள் ஒரு புறமும் அசுரர்களொரு புறமுமாக விருக்கத் திருப்பாற்கடலைக் கடைந்தார்கள். அவ்வாறு கடையும் பொழுது மந்தரமலையானது கடலிலாழ, திருமால் கூர்ம (ஆமை) வடிவமேற்று அதனைத் தாழாமல், அதன் அடியையும் முடியையும் முதுகினுலும் கைகளாலும் பற்றித் தாங்கி நிலை நிறுத்தினர். பின்பு சுராசுரர்கள் முன்போலவே பாற்கடலைக் கடைந்தார்கள். அப்பொழுது வாசுகி யென்னும் அப்பாம்பின் வாயினும் சமுத்திரத்திலும் இருந்து ஆலாலமென்னுங் கொடிய விடமானது தோன்றி, யுகாந்தகாலத்தைப்போல இருண்டு, அனைவரையுங் கொல்லத் தொடங்கியபொழுது, விஷ்ணுவானவர் இவ்வாபத்தினின்றும் நீக்கித் தேவர்களைக் காக்கவேண்டு மென்னு மெண்ணமுடையவராய் அவ்விஷத்தைச் சமீபித்தடக்க, அதன்கொடிய வேகத்தால் தமது வெண்ணிறமாகிய மேனி கருகிக் கரியவனென்னும் பெயர் பெற்றார்.

பிரமனுந் தனது மேனியின் பொன்னிறம் நீங்கிப் புகைநிறம் பெற்றான். பின்பு விஷ்ணுவானவர் அவ்வாலகாலவிடத்தின் கொடுமைக் காற்றாது வருத்தமுற்றுத் தேவர்களோடு திருக்கைலாய மடைந்து, அவர்களனைவரையும் ஒரு புறத்தே நிறுத்தி, திருநந்திதேவரிடத்தில் அநுமதி பெற்றுக்கொண்டு, பிரமனோடு உள்ளே புகுந்து, சிவபெருமானது திருமுன்னே நின்று, "எம்பெருமானே! யாங்கள் தேவரீரது திரு

வருளாக்கறை யின்றித் திருப்பாற்கடலைக் கடைந்ததனு லுண்டாகிய விடவேகத்தால் வருந்தி யடைந்தோ மாதலால், அக்கொடிய ஆலகாலவிடத்தை யடக்கி எங்களைக் காத்தருளவேண்டு" மென்றிரந்து நிற்கக் கருணைநிதியாகிய நம்பெருமான் "ஆலகாலவிடமா! அஞ்சலீர் நீவிர் அஞ்சலீர்" என்று அருட்புரிந்து தமது சமீபத்தில் நின்ற அணுக்கத் தொண்டராம் சுந்தரரைப் பார்த்து "ஏ சுந்தரம்! வ்வாலகால விடத்தி னுற்றலை யடக்கி யதனை நம் முன் கொண்டு வருவாயாக!" வென்று பணித்தருள அவ்விதமே யவர் சென்று அவ்விஷத்தைத் தமதுள்ளங்கையிற் றிரட்டிப் பெருமானிடமளிக்க அவர் அதனை வாங்கித் தமது திருக்கரத்து ஏற்று உண்டனர். அப்பொழுது அவ் விஷமானது கண்டத்தளவு செல்லும் பொழுது திருமாலயனுதி தேவர்கள் யாவரும் சிவபெருமானை வணங்கி "எம்பெருமானே! தேவரீர் எங்கள் பொருட்டாகச் செய்யவிட மயின்று எங்கள் உயிரைக் காத்தருளியதற்குச் சான்றாக அவ்விடத்தைக் கண்டத்திலேயமைத்தருளல் வேண்டும்" என்று பிரார்த்திக்க அவ்வாறே பெருமான் அந்நஞ்சை ஒளி நீலமணிபோன்று கண்டத்தில் நிறுத்தி யமைத்தருளினர். அதனுலவருக்கு நீலகண்டர், சீகண்டர், கறைமிடற்றண்ணல் முதலிய பல திருநாமங்கள் வழங்குவதாயிற்று. விஷாபஹரண மூர்த்தி யெனவும் பெயர்பெற்றனர். பின்பு திருமலாதி தேவர்கள் சிவபெருமானை வணங்கித் துதித்துத் திருவருள் பெற்றுக் கடலைக் கடைந்து அதனிடமாக அமுதம் பெற்றுண்டு, இறவாவின்பப் பெருவாழ்வடைந்தன ரென்பது சரித்திரம். ஆகையான், முதற்கண் திருமூர்த்திகளி லொருவராய் விஷ்ணுமூர்த்தியினுலேயே "ஆலகாலவிடம்" எனவும், இரண்டாவதாக எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளாஞ் சிவபெருமானுலே "ஆலகால விடம்" எனவும் வழங்கப்பெறுறதென்ப. எனவே இத்தொடர்மொழியானது தேவர்கள் திருப்பாற் கடல் கடைந்து அமுதமுண்ட காலந்தொட்டே நந்தண்டமிழ் நாட்டில் அனுஷ்டானத்துக்கு வந்து வழங்கிவரலாயிற் றென்பது வெளிந்தறியக் கிடக்கின்றது.

(தொடரும்)

வை ச. இராமலிங்க முதலியார்,
துணைத்தலைவர், சைவசித்தாந்த செங்குந்தர் சமாஜம்,
காஞ்சிபுரம்.

## பொது விஷயங்கள்

### பொதுநல உணர்ச்சி
### (Social Conscience)

உணர்ச்சி இருவகைப்படும். ஒன்று சுயநல உணர்ச்சி, மற்றொன்று பொதுநல உணர்ச்சி. சுயநல உணர்ச்சியாவது ஒருவகை தற்காப்பு நோக்கமே யாகும். அதாவது தன்னை இன்னல்களிலிருந்து காத்துக்கொள்வதற்கோ அல்லது பெருமைப் படுத்திக் கொள்வதற்கோ மனத்தில் எழும் எண்ணமாகும். பொதுநல உணர்ச்சி அப்படிப்பட்டதல்ல ; பொது நன்மைக்குப் பாடுபட எண்ணுவதாகும்

உதாரணமாக, தன் அண்டைவீடு தீப்பற்றி எரியுமானுல் அதை அணைக்க ஆதரிப்படுவது அண்டை வீட்டுக்காரனைக் காக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டு செய்வதல்ல. மற்று, தன் வீடு தீப்பிடியாதிருக்க வேண்டும் என்ற நோக்கமேயாகும். தனக்குச் சம்பந்தமில்லா இடத்தில் தீப்பிடித் தெரிய அதை அணைக்க முன்வருவது பொதுநல எண்ணத்தின் தூண்டுகோலாகும்.

பொதுநல உணர்ச்சியைக் கொண்டுள்ளவர்களோ மனித வர்க்கத்தைச் சார்ந்தவர்களென்று கூறுவது பிழையாகாது. இத்தன்மைய உணர்ச்சி தான் மற்றப் பிராணிகளுக் கில்லை என்னலாம். முதன் முதல் சுயநல உணர்ச்சியே மனிதனுக் கிருந்ததென்றும் பின் நாகரிகம் முதிர முதிர அன்னியரையும் கவனிக்கும் தன்மை அவனுக்கு ஏற்பட்டதென்றும் ஒரு ஆங்கில ஆசிரியர் கூறுகிறார். பொதுநல உணர்ச்சி மனிதனுகிய ஒவ்வொருவனிடத்தும் இருக்க வேண்டியது மிக அவசியம். கோடிக்கணக்கான தன் இனத்தவர்களுக்கு நீண்ட காலம் உரிய இன்பத்தை அளிக்கும்படித் தன்னை நடத்திக்கொள்ள அது மிக முக்கியமாகும். பொதுநலத்தைக் கருதக் கருதத் தான் ஒரு மனிதன் எளிதில் ஆன்ம லாபத்தையோ மற்று எவ்வித லாபத்தையோ, அடைய முடியும்.



அவ்விதப் பொதுநல உணர்ச்சி ஜன சமூகத்தினிடையே அதிகமாகப் பரவப் பரவப் பலவகைக் கொடிய பிணிகளும் தலை எடுக்காமல் அழிந்து போகும். எப்படி எனில் : அதனுல் சுகாதாரத்தைப் பற்றிப் பிறருக்குப் போதிக்க நாம் முன் வருவோம். அன்றியும் பொதுஜன நன்மையைக் கவனிக்காவிடில் காலரா, க்ஷயம், குஷ்டம் முதலிய கொடிய வியாதிகள் ஆயிரக்கணக்கான ஜனங்களை வருத்த இடமுண்டு. இவ்விதக் கொடிய நோய் கண்டோர்க்கென தனி சிகிச்சை இடங்கள் ஏற்படுத்துவதற்குப் பொதுநல உணர்ச்சியே காரணம். அச்சிகிச்சை இடங்களுக்கு நோய் கண்டோரை அவர்களைச் சார்ந்தார் அனுப்புவதும் அத்தன்மையதே செல்வவான்கள் அநேகர் தங்கள் பெருமைக்காகப் பொருள்களை வீணை விரயமாக்குகிறார்கள். அத்தன்மையோர் பொதுநலத்தைக் கருதி ஏழை ஜனங்களை ஆதரிப்பார்களேயானல் வியாதிகள் பல தலை எடுக்கா. அநேக ஏழை மக்கள் தங்கள் ஏழ்மைத்தனத்தினுல் தங்க இடமில்லாது, சாக்கடை ஓரங்களிலும் புழுதி நிறைந்த மூலைகளிலும் வசிக்கின்றனர். அப்படிப்பட்டவர்களுக்குத் தங்க வசதியான இடம் அமைத்துத் தருதலால் பொது நன்மை மிகக் கவனிக்கப்படுகிறது. மூடத்தனத்தினுல் தீய பழக்கங்களுக்கு ஆளாகும் ஏழை மக்கள் அநேகர். அவர்கள் மூலம் வியாதிகள் அநேகம் பரவுகின்றன. அப்படிப்பட்டவர்களுக்கு நல்லறிவு போதிக்க ஏற்பாடு செய்வதும் பொதுநலத்தைக் கவனிக்கும் நற்குணத்தாலேயாம். கொடிய நோய்களைத் தவிர்க்க ஏற்படுத்தியிருக்கும் ஆஸ்பத்திரிகளை உபயோகிக்க ஊர் குடிகளுக்குப் பொதுநல உணர்ச்சி வேண்டும். ஏனெனில், அநேகர் நோய் கண்டோரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட நேருமோ என்ற பயத்தினுல் அவர்களை வீட்டில் பிறருக்குத் தெரியவொட்டாது அடைத்து விடுகிறார்கள். அவர்கள் அப்படி அடைத்து வைப்பதினுல் பிறருக்கு உண்டாகும் தீங்குகள் எண்ணில. அவர்கள் சிறிது பொதுநலத்தைக் கருதுவார்களேயானுல் தாங்கள் அப்படிச் செய்வது பெருங்குற்றமென்று தாங்களே உணருவார்கள் சுருங்கக் கூறின், நாம் செய்யும் எவ்விதக் காரியமாயினும் அது பிறருக்கு, மனிதனுக்கோ, மாட்டிற்கோ, மற்றெந்தப் பிராணிக்கோ இன்னல் விளைவிப்பதா யிருத்தல் கூடாது. அதுவே பொதுநல உணர்ச்சியின் சீரிய கொள்கையாகும்.

பொதுநல உணர்ச்சியினுல் இன்னும் அநேகம் நன்மைகள் ஏற்படும். சிறுவர்களுக்கும் எழுத்து வாசனையில்லா மாந்தர்களுக்கும் கல்வி கற்பித்து அறிவூட்டுவதும் பொதுநல நோக்கத்தினுல் எழும் சிறந்த செய்கையே ஆகும். பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவதனுலும், ஆங்காங்குப் பிரசங்கம் செய்வதனுலும் கல்வியைப் பரப்பலாம். சிறந்த கட்டுரைகள் அமைந்த பத்திரிகைகளை நடத்தி வருவதும் கல்வியையும் ஜனசமூகத்தினிடையே ஓங்கச் செய்யும் ஒரு மார்க்கமாகும். இவ்விதமாகக் கல்வியை அபிவிருத்தி பண்ண வேண்டுமென்ற எண்ணம் சிலரிடையே மட்டுமிருந்தால் போதாது. ஏனெனில், பள்ளிக்கூடம் ஏற்படுத்துவதையோ பத்திரிகைகள் நடத்துவதையோ ஒரு சில தனவந்தர்கள் மேற்கொண்டால், அப்பள்ளிக்கூடங்களிற்குத் தங்கள் பிள்ளைகளை அனுப்பவும் பத்திரிகைகளை வாங்கவும் குடிகள் முன் வராவிடில் பயனில்லை. பள்ளிக்கூடத்திற்குப் பையன்கள் சேராவிடில் பள்ளிக்கூடம் நடவாது என்பது தெரிந்த விஷயமே. அதே மாதிரியே நல்ல பத்திரிகைகளை ஜனங்கள் வாங்காவிடினும் அவை நடைபெறு என்பது திண்ணம். எவ்வளவிற்கெவ்வளவு ஒரு பத்திரிகைக்குச் சந்தாதாரர்கள் சேருகின்றனரோ அவ்வளவிற் கவ்வளவு அப்பத்திரிகை மேன்மையுடன் விளங்கி ஜனங்களுக்கு நன்மையைப் பயக்கும். உதாரணமாக, சொற்ப சந்தாதாரர்கள் "செங்குந்த மித்திரன்" என்ற நமது மாத வெளியீட்டிற்குஇருந்தபோது அப்பத்திரிகை உருவத்தில் சிறியதாயும் சில அரிய விஷயங்கள் அடங்கினதாயும் இருந்தது. இப்பொழுது 4000 சந்தாதாரர்களைக் கொண்டதும் 'மித்திரன்' உருவத்தில் பெருகி நூதன அறிய விஷயங்களை மிக்குக் கொண்டு விளங்குகிறது. இன்னும் "செங்குந்த மித்திரனுக்கு" ஆயிரக்கணக்கான சந்தா நேயர்கள் சேருவார்களேயானுல் அது பன் மடங்கு மேன்மை பெறும், அதனுல் பத்திரிகைகளை ஓங்கச் செய்ய வேண்டுமென்ற பொதுநல எண்ணம் கொண்டேனும், சில பத்திரிகைகளுக்குச் சந்தாதாரர்களாகச் சேர்வது சிறந்த குணம் ஆகும்.

ஆகவே சுயநலத்தை மட்டும் கருதிக் குறுகிய எண்ணம் கொண்டிராமல் பொது நலத்தையும் சமூகநலத்தையும் முக்கியமாகக் கவனித்து ஒவ்வொருவரும் மாணிடரைப்போல் ஒழுகுவதினுல் நன்மையே உண்டாம்; சுகமே எங்கும் நிலவும்.

M. P. தியாகராஜன்,
இராஜதானிக் கல்லூரி, சென்னை,

## தந்தையின் கடமை.

“பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த மக்கட்பேறல்ல பிற” என்ற அருமைத் திருவள்ளுவர் வாக்கிற் கிணங்க, யாவரும் மக்கட்பேற்றையே விரும்பி நிற்கின்றனர். நீண்டகாலமாக மக்கட்பே றின்றி வருந்தும் ஒருவர் பலவிதமான தானதருமங்களைச் செய்தும், கோயில்கட்குச் சென்றும், தவம் பல புரிந்தும் மக்கட்பேற்றையே நாடுகின்றனர். இன்னொருக்கு ஒரு பெண் மகவு பிறந்தால், அதில் வெறுப்பும், ஆண் மகவு பிறந்தால் அதில் விருப்பும் உண்டாதல் இயல்பு. பெண் மகவையும் ஆண் மகவைப்போல் கருதுகின்ற இயல்பு நம்மவர்களிடத்தில் இல்லை. பெற்றோர் ஒரு குழந்தை பிறந்ததும், ஆனந்தக் கடலில் ஆழ்கின்றனர். ஐந்தாவது வயது வரையிலும் பிள்ளையிடத்தில் கொஞ்சிக் குலாவி விளையாடுகின்றனர். அதன் பின் கல்வி கற்பிக்க வேண்டிய ஏற்பாடுகள் நடக்கின்றன. இதில் பட்சபாதமாகவே மக்களை நடத்துகின்றனர். ஆண்மகவுக்காயின், சீர் சிறப்போடு கல்வி ஆரம்பம் நிகழ்கின்றது. பெண் மகவுக்காயின், அவ்விதம்இன்றிப் பள்ளிக்கனுப்பி விடுகின்றனர். பெண்மகவுக்குக் கல்வி கற்பிக்கின்ற தன்மை இப்போதுதான் பெற்றோர்களிடத்தில் உதித்திருக்கின்றது. முன் காலத்தில் அதுவும் இல்லை; மகளுக்குக் கல்வி பயிற்றுவதில் ஒருவித பயனுமில்லை என்று வாளாவிருந்தனர். மகனுக்கே வேண்டிய சிறப்போடு கல்வி ஆரம்பிக்கப் படுகின்றது.

ஒரு தந்தையின் கடமை பிள்ளை பெறுவதும், வளர்ப்பதும், செல்வம் தேடி வைப்பதும் அன்று. தன் அருமை மக்களைத் தகுந்தவாறு கல்வியில் முன்னேற்றுவிப்பதே யாம். முற்கூறிய குறள் வெண்பாவின் பொருளை நன்கு ஆராய்ந்தால் தெரியும். “அறிவறிந்த மக்கட்பேறல்ல பிற” என்றார். இதற்கு உரையாசிரியர் “அறிய வேண்டுவன அறிதற்குரிய மக்களைப் பெறுதலல்லது பிறபேறுகளை ” என்றார். ஆகவே ஒரு தந்தை தன் அரிய மக்களை அவையத்து முந்தியிருக்கச் செய்ய வேண்டுவதே அவரது இன்றியமையாக் கடமையாம். இரு கண்களையும் எத்துணை அருமையுடையவாகப் பாருட்டுகின்றாரோ அத்துணை அருமையுடையவராகத் தன் பிள்ளைகளையும் பாராட்ட வேண்டும். ஆண், பெண் என்ற பகுப்பின்றி இருதிறத்தாருக்கும் ஒருவாறே கல்வி கற்பித்தல் நலம்.

சில தந்தைமார்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் போதிய செல்வம் படைத்து வைத்துவிட்டதாக எண்ணி, அவர்கட்கு உற்ற துணையா யமைந்த கல்வியைப்பற்றி ஒரு சிறிதும் கவலை கொள்ளாதிருக்கின்றனர். கண்ணில்லாக் குழவி திக்கு அறியாது செல்வதுபோல கல்வியில்லாப் பிள்ளையும் தன் தந்தை தேடி வைத்த அரும்பெருஞ் செல்வத்தைத் துய்க்க அறியாது பொது மகளிர் வீடடைந்து அவர் கொடுக்கும் இன்பமே பேரின்பம் எனக் கருதித் தன் சொத்தை விரயஞ் செய்கின்றான். பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்த தந்தை இதைக் கண்ணுறின் அவர் அடையும் இன்னலுக்கோர் அளவுண்டோ? ஏக்கமுற்று இறக்கவும் நேரிடுமன்றோ? இஃது தந்தையின் குற்றமேயன்றி அவர் மகனின் குற்றம் என்று எண்ணுதல் சாலுமோ? தன் அரும் புதல்வனுக்கு உற்ற துணையாயிருக்கும் கல்விச் செல்வத்தைத் தேடி வைத்திருப்பாராயின் அதனை அவனால் அழிக்கலாகுமோ? அதன் பயனை அனுபவித்து அனுபவித்து இடையறா இன்பக் கடலில் அழுந்துவனன்றோ! தந்தையரே, இது யாருடைய குற்றம் என்பதைச் சற்று ஆராய்மின். ஒவ்வொரு தந்தையும் இதைப்பற்றி நாடோறும் சிந்தனை செய்வாராயின், அவர் செய்த குற்றமென்பது தெளிவாம். இத்தகைய பெரும்பழிக்கு ஆளாகாமல் வாழவேண்டுவது ஒவ்வொருவரின் கடமையுமாகும். (கல்வி ஆண் பெண் இரு பாலருக்கும் வேண்டினும் கல்வியின்றிச் செல்வத்தை அழிப்பது ஆணே யாதலால் சிறப்பாக ஆண் கல்வியைப்பற்றிக் கூறுகின்றேன்.

ஒரு தந்தை தன் மக்கட்குப் பெரிய மாளிகை கட்டி வைத்துவிட்டதாகவும், கவலையின்றி காலங்கழிப்பதற்குப் போதிய நிலச் சொத்து தேடிவிட்டதாகவும், பெரிய வியாபாரத் துறையில் ஈடுபட்டிருப்பதாகவும் எண்ணி மகிழ்வதற்கு இடமுண்டு. இஃதெல்லாம் நீரில் தோன்றி மறைகின்ற குமிழிக்குச் சமானமாகும். இவ்வரும் பெரும் பாரத்தை வகிப்பதற்குத் தகுந்த தூண் வேண்டாவோ? பெரிய சுமையைச் சிறிய தூண் தாங்குமோ? கல்வித் தூண் இல்லாத ஒருவனிடத்தில் இப்பாரம் எத்துணை வலிபெறும் என்பதை ஒவ்வொரு தந்தையும் நன்கு கவனித்தல் வேண்டும். பாரத்தைத் தாங்க இயலாத தூண் வளையவோ முறியவோ ஏற்படும். அத்தன்மைபோலக் கல்வி இல்லாக் கணி மகனும் சுமக்கமாட்டாது மு...



...ந்து விழுதல் ஒரு தலை. என் அன்பிற்குரிய தந்தைமார்களே! “தந்தை மகற்காற்று நன்றி யவையத்து முந்தியிருப்பச் செயல்” என்ற தமிழ்மறைக் கிணங்க அறிவில் மக்களை மேம்படுத்துவதே உங்களது அருபெருங் கடன் என்பதை மறவாதீர்கள். “ பிச்சை புகினும் கற்கை நன்றே ” “வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும், கீழ்ப்பா லொருவன் கற்பின், மேற்பா லொருவன் அவன் கட்படுமே” என்ற நுண்ணிய புலவோர்களின் பொன்போன்ற சொற்களை மனதில் பதிய வையுங்கள்.

படிப்பெல்லாம் பணந்தேடுவதின் பொருட்டே என்று எண்ணவேண்டாம். ஆங்கிலப் படிப்பு அமைந்த உத்தியோகத்திற்கே என்று எண்ணவேண்டாம். படிப்பினால் மணமுண்டு; மதிப்புண்டு என்பதை எண்ணி மக்களைப் படிப்பியுங்கள். உத்தியோகத்திற்குப் படித்துவிட்டு வேலை கிடையாததினால் வருந்தாதீர்கள். அருமையாகப்பெற்று எடுத்த புதல்வர்களுக்குக் கல்விச் செல்வத்தைத் தேடுங்கள். அதோடு கூடப் பொருட் செல்வமும் தேடுங்கள். ‘ கல்வியே கருந் தனம் ’ என்பதை மறவாதீர்கள்.

“ இல்லத்திற்குரிய தெது?” “என்னுடைய இல்லாள்” என்று தருமர் கூறிய விடையை ஆராய்ந்து பாருங்கள். இல்லாள் என்று கூறாது, என்னுடைய இல்லாள் என்றார். இல்லாளுக்கும் எண்ணும் எழுத்தும் தெரிந்திருக்க வேண்டும் என்பது வெளிப்படை. கிறிஸ்தவத் தாய்மார்களுக்கும் நமது தாய்மார்களுக்கும் உள்ள வேறுபாட்டைக் கவனியுங்கள். அவர்களில் பெரும்பான்மையோர் கல்வி கற்றவர்களாகவே காணப்படுகின்றனர். இவர்களில் கல்லாதவர்களே பெரும்பான்மையோர். அவர்கள் தமிழ் எழுதவும் வாசிக்கவும் கணக்குப் பார்க்கவும் 7-வது வகுப்புவரையும் படித்துத் தேர்ச்சி அடைந்திருக்கின்றார்கள். அதனால் அவர்கள் மக்களுக்கும் ஓய்வுநேரங்களில் சொல்லிக் கொடுத்துக் கல்வி கற்பிக்கின்றார்கள். நம்மவர்களில் ஓய்வு நேரங்களில் வீண் வழக்குக்களும், வேண்டாத வார்த்தைகளுமே பழக்க மாகின்றன. பெண் பாலாருக்கு அதிகப் படிப்புக் கொடுக்காவிட்டாலும் உரிய பருவம் வருகிற வரையும் தமிழ்ப்படிப்புச் சொல்லிக் கொடுப்பது நலம். அதனால் அவர்களுக்குப் பிறக்கிற பிள்ளைகளும் நல்லவர்களாகவே தோன்றுவார்கள். விசனம் தோன்றிய நேரத்தில், படித்தவர்களாயின், நல்ல புத்தகங்களை எடுத்து வாசிக்க மனம் செல்லும். அல்லது விசனத்திலேயே மூழ்கிக் கவலைக்குள்ளாவார்கள். மாமி மருமகளுக்குள் சண்டை வருவதானால், (இல்லாத வீடு மிகவும் சுருக்கம்) படித்த மருமகள் மாமியோடு வழக்கிடாது புத்தகத்தைப் படித்துக் கவலையைத் தீர்த்துக்கொள்ளுவாள். தந்தைமார்களே! உங்கள் பெண் மக்களையும் ஆண் மக்களைப் போலவே கருதிச் சிறிது கல்வியாவது பயிற்றுவித்தல் பெரும் பயன் அளிக்கும். உங்களுக்கும் புதியதொரு மகிழ்ச்சி உண்டாகும்.

இத்தனைகாலம் தூங்கினதுபோக இனியாவது விழித்துக் கல்வியைக் கைப்பொருளாகக் கொண்டு கற்பிக்க முன் வாருங்கள்.

A. S. முத்தையா முதலியார்,
கோட்டாறு.

---

### விகடம்

“பெரிய மூக்குகள் மூளை அதிக மிருப்பதைக் காட்டுகின்றன. நாசித் துவாரங்கள் விசாலமாயிருந்தால் நீடாயுளும் தேகாரோக்கியமும் உடையவன் என்பதைக் காட்டுகின்றது” என்று ஒருவர் உபந்யசித்தார்.

அப்பொழுது திடீரென கூட்டத்திலிருந்த ஒரு வாலிபன் எழுந்து “வாஸ்தவம். மூக்கு பெரிதாயிருப்பதால் ஏற்படும் விகாரத்திற்கு இவ்வளவு நன்மைகளும் ஈடு செய்யாதே” என்று வருந்திக் கூறினனும்.

* * *

சென்னையில் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஒரு நாட்டுப் புறத்தான் சென்று தன் கடிகாரம் கைரஸ்தாவில் தொலைந்துவிட்டதாகக் கூறினன். அதற்கு அவர்கள் ஒன்றுவிடாமல் பரிசோதிப்பதாகக் கூறினர். மறுநாள் அந்நாட்டுப்புறத்தான் இரண்டொரு தெருக்களின் வழியாகச் சென்றபோது ரோட்டு ரிபேர் செய்வதைப் பார்த்து “போலீசார் தாங்கள் வாக்களித்தபடிக் கஷ்டப்பட்டு ஒவ்வொரு கல்லையும் விடாது புரட்டிப் பார்க்கின்றனர். கடிகாரம் அகப்படாவிட்டால் அது அவர்களுடைய தப்பல்ல” என்று நண்பனுடன் ஆச்சரியத்துடன் கூறினன்.

* * *

வாங்குவோன்:—இது உயர்ந்த சேப்டி வைத்திப் பெட்டியா?

வர்த்தகன்:—ஆம், இதிலிருந்து எதையாவது கொளுத்துவதற்கு முன்னமே இது அவிந்துபோவதால் இதனால் யாதொரு ஆபத்துமே கிடையாது.

# அறிவியற் பகுதி

## நாம் வசிக்கும் வாயு சமுத்திரம்

நாம் ஒரு குளக்கரையிலாவது ஆற்றங்கரையிலாவது அமைதியாக உட்கார்ந்து, ஆழ்ந்து தெளிந்த நீரைக் கவனித்துப் பார்ப்போமாயின், அழகிய மீன்கள் இங்குமங்கும் ஓடிக் கொண்டிருப்பதைக் காண்போம். யோசித்துப் பார்ப்போர்க்கு மீன்கள் அலைகளாலும் நீரோட்டத்தாலும் மோதப்பட்டு ஏதோ (நீர் எனப்படும்) ஒரு வஸ்துவினுள் வசித்துக் கொண்டிருக்க நாம் மாத்திரம் பூமியின் மேல் வெட்ட வெளியில் ஏன் வசித்து வரவேண்டும் என்ற சந்தேகம் உண்டாகாம லிராது. ஆனால் உண்மை உணர்ந்தோர் நாம் மீன்களைப்போல் நீரில்லாவிட்டாலும் அலைகளும், புயல்களும் அடிக்கடி அடித்துக் கொண்டிருக்கும் ஏதோ வேறொரு பொருளினுள் வசித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை அறிவர். அந்தப் பொருளைத் தான் நாம் காற்று என்கிறோம். நாம் அதனுள்ளேயே எப்போதும் வசித்துக் கொண்டிருப்பதனாலும், அது நம் கண்களுக்குப் புலனாகாதிருப்பதனாலும், அதை நாம் சாதாரணமாய் உணர்வதில்லை.

நாம் நீருக்கு வெளியே இருந்து அதைக் கண்ணால் பார்க்கக் கூடிய சக்தியோடும் இருக்கிறபடியால், நீரையும் அதில் வசிக்கும் பிராணிகளையும் உணருகிறோம். அதுபோலவே காற்றையும் பார்க்கக் கூடிய கணகளோடு பூமிக்கு மேலே வெகு தூரத்திலிருந்து ஒரு மனிதன் நோக்குகிறானென்று வைத்துக் கொள்வோமாயின், அவனுக்கு என்ன தோன்றும்? ஆற்றினுள் மீன் முதலியவை இங்குமங்கும் நீந்திக் கொண்டிருக்கும் நீரை நாம் காண்பது போல் தன்னுள்ளே பக்ஷிகள் பறந்து கொண்டும், அடியில் மனிதர்களும் மிருகங்களும் உலாவிக் கொண்டும் இருக்கும் வாயு சமுத்திரம் நமது பூமியைச் சூழ்ந்திருப்பதாய் அவனுக்குத் தோன்றும். ஆயினும் மீன்களை நாம் நீர் நிலைகளின் மேற் பரப்பிலுங்கூடப் பார்ப்பது போல் மனிதர்களையாவது மேலே வெகுதூரம் பறந்து செல்லக்கூடிய பறவைகளையாவது வாயு சமுத்திரத்தின் மேற்பரப்பில் அவன் பார்க்க முடியாது. ஏனெனில் மிக உயரமாய்ப் பறக்கக் கூடிய பக்ஷிகளும் பூமியிலிருந்து 5 மைலுக்கு மேல் பறப்பதில்லை வாயு மண்டலமோ பூமிக்கு மேல் 100 மைல் தூரம் வரையில் உயர்ந்திருக்கிறது. ஆகையால், நம் அக்கடலின் அடிப்பாகத்திலேயே வசிக்கும் ஜெந்துக்களாயிருக்கிறோம்.

நாம் வாயு சமுத்திரத்திற்கு அப்பாலிருந்து நம்மைப் பார்ப்பதாக வைத்துக்கொண்ட மனிதன், கடல் ஆறுகளில் மீன்களைப் பிடிப்பது போல் நம்மைப் பிடித்து வாயுக்கடலுக்கு அப்புறத்தே வைப்பானாயின் நாம் மூச்செறிந்து, நீரினின்று அப்புறப்படுத்தப்பட்ட மீன்களைப் போல் இறந்து போவோமென்பது திண்ணம்.

இன்னும் அநேக விசித்திரமான காரியங்கள் நம்முடைய வாயு சமுத்திரத்தில் நடந்துகொண்டிருப்பதையும் அவன் காண்பான். அதாவது சிறு காற்று புயல் என்று சொல்லப்படும் பல காற்றுக்களையும், காற்றோட்டங்களையும், மேகங்களென்று சொல்லப்படும் நெருங்கிய மூடுபனி ஆங்காங்கு ஒன்றுகூடிக் கலைவதையும், அவற்றினின்று மழை, ஆலங்கட்டி, உறைபனி முதலியவை பூமியில் பெய்வதையும், மின்னலென்று சொல்லப்படும் பிரகாசமான ஒளி சில சமயங்களில் வாயு சமுத்திரத்தில் குறுக்கே பாய்வதையும் அழகிய வானவில், வடக்கே தோன்றும் துருவ நக்ஷத்திரம் முதலியவற்றையும் விளக்கமாய்க் காண்பான். ஆகாயத்தில் வெகு தூரத்தில் தோன்றும் நக்ஷத்திரங்களின் வீழ்ச்சி அவனுக்குப் பூமிக்குச் சமீபத்தில் நிகழ்வதாகத் தோன்றும்.

### காற்றென்பது என்ன?

இனிக் காற்று அல்லது வாயுவென்பது என்ன என்பதைப்பற்றி ஆராய்வோம். ஒரு காலத்தில் காற்று பலவகையாகப் பிரிக்க முடியாத ஓரே தன்மையான பொருள் என்று எண்ணியிருந்தார்கள். ஆனால் இப்போது காற்றானது, ஏதாவதொன்று எரிவதனால் கெட்டுப் (செலவழிந்து) போகக்கூடிய பிராணவாயு (Oxygen) 1, பிராண வாயுவின் வேகத்தை மிதமாக்கக் கூடிய நார்த்தஜனி வாயு (Nitrogen) 2 ஆகிய இருவகையான வாயுக்களால் ஆக்கப்பட்டிருக்கிறது என அறிவு நூல் ஆராய்ச்சிக்காரர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அது எவ்வாறெனில் நாமும் பின்வருமாறு ஆராய்ந்து பார்ப்போம்.



மணிபோன்ற உருவமுடைய ஒரு கண்ணாடி ஜாடியை எடுத்து அதன் கழுத்தண்டையுள்ள வாயை ஒரு கார்க்கினால் கெட்டியாய் மூடி அதைத் தண்ணீர் நிறைந்த ஒரு அகன்ற தட்டின் மத்தியில் கவிழ்த்து வைப்போமாயின் அப்போது அக்கண்ணாடி ஜாடிக்குள் கொஞ்சம் தனியே பிரிக்கப்பட்டு நிற்கிறதல்லவா? அந்தக் காற்றில் ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறுபட்ட குணமுடைய இருவகையான வாயுக்கள் கலந்திருப்பதைப் பிரத்தியக்ஷத்தில் பிரித்துக்காட்ட வேண்டுமானால் கண்ணாடி ஜாடிக்குள் அகப்பட்டுள்ள நீரில் ஒரு சிறு தீப்பாஷாணத் துண்டை ஒரு சிறு தட்டின்மேல் வைத்து மிதக்கவிட்டுக் கொளுத்தி விடுவோமாயின் ஜாடிக் காற்றில் கலந்திருக்கும் இரு வாயுக்களுள் ஒன்றாகிய பிராணவாயு தீப்பாஷாணத் துண்டு எரிவதனால் கெட்டுப் (செலவழிந்து) போய்விடுகிறது. அதாவது ஜாடியிலுள்ள பிராணவாயு தீப்பாஷாணம் எரிவதனால் உபயோகப் படுத்தப்பட்டு விடுகிறது. அப்போது தீப்பாஷாணம் ஜாடிக்குள் எரிய எரிய ஒருவிதமான வெண்புகை நிறைகிறது. அப்புகைக்கு அக்கினிப் பாஷாணத் திராவகம் என்று பெயர். அது அக்கினிப் பாஷாணம், பிராணவாயு ஆகிய இரண்டின் கலப்பினால் ஆக்கப்பட்டிருக்கிறது. இங்கு ஷை பாஷாணத்தையும் காற்றின் ஓர் கூறாகிய பிராணவாயுவையும் இயற்கைச் சக்தியானது கூட்டி வைக்கிறது.

பிறகு, அக்கினிப் பாஷாணத் திராவகமாகிய அப்புகையானது சர்க்கரையைப்போல் நீரில் கரைந்து அல்லது கலந்து சில நிமிஷங்களுக்குள் மறைந்துபோய் விடுகிறது. உடனே தட்டிலுள்ள நீர் ஜாடிக்குள் மேலேறுகிறது நீர் அவ்வாறு ஏறுவதற்குக் காரணம் என்ன? நாம் என்ன செய்திருக்கிறோமென்று யோசித்துப் பாருங்கள். முதலில் பிராண வாயுவும் நார்த்தஜனி வாயுவும் கலந்த காற்று, ஜாடிக்குள் நிறைந்திருந்தது. பின்னர் தீப்பாஷாணம் காற்றின் ஒரு கூறாகிய பிராண வாயுவை உபயோகப்படுத்தி எரிந்து வெண்புகை யுண்டாக்கிற்று. பிறகு அப்புகை நீரில் கலந்துவிட்டது. அதனால் இப்போது மிகுதியாய் ஜாடியிலிருப்பது நார்த்தஜனி வாயுமாத்திரமே யாகையால் முன் பிராணவாயு கொண்டிருந்த இடத்தை நீர் சென்று நிரப்பிக் கொள்ளுகிறது. அதனால் தான் ஜாடியில் நீர் ஏறுகிறது.

இப்போது ஜாடியில் பிராணவாயு கொஞ்சங்கூட இல்லை என்று சுலபமாய் நிரூபிக்கலாம். ஜாடியின் கழுத்தை மூடிக்கொண்டிருக்கும் கார்க்கை எடுத்து ஒரு வர்த்தியைக் கொளுத்தி ஜாடிக்குள் விடுவோமாயின் அதில் பிராணவாயு இருந்தால் வர்த்தி அவியாது எரியவேண்டும். ஆனால் அது எரியாது அவிந்துபோகிறது. இதனால் ஜாடியிலிருந்த பிராணவாயு முழுதும் தீப்பாஷாணத்தினால் உபயோகப் படுத்தப்பட்டு எரிந்து சொரூபம் மாறிவிட்டது. இந்தப் பரீக்ஷையை நாம் ஜாக்கிரதையாகச் செய்வோமானால் சாதாரணமாகக் காற்றில் ஒரு பங்கு பிராணவாயுவும் நான்கு பங்கு நார்த்தஜனி வாயுவும் இருக்கின்றனவென்றும், மந்த குணமுடைய நார்த்தஜனி வாயுவின் இடையிடையே பிராணவாயுவின் அணுக்கள் கலந்து சிதறுண்டு கிடக்கின்றனவென்றும தெரியவரும்.

இத்தகைய பிராண வாயுவின் அணுக்களைத்தான் நாம் சுவாசிக்கும்போது உபயோகிக்கிறோம். பரீக்ஷையில் மேலே காட்டிய ஜாடியில் தீப்பாஷாணத்திற்குப் பதிலாக ஒரு சுண்டெலியை விடுவோமாயின் அப்போதும் கொஞ்சநேரம் பொறுத்து நீர் ஏறத்தான் செய்யும். ஏனெனில் ஜாடியிலுள்ள காற்றிலிருக்கும் பிராணவாயுவை சுண்டெலி ஸ்வாசத்தால் உட்கொண்டு கரியமிலவாயுவை வெளியே விடும். அக்கரியமிலவாயுவும் நீரில் கலந்து போகும் குணமுடையது. ஜாடியிலுள்ள பிராணவாயு முழுதும் சுண்டெலியால் உபயோகப்படுத்தப்பட்ட பிறகு சுண்டெலி இறந்துபோய்விடும்.

இதனால் எல்லாப்பக்கங்களிலும் மூடப்பட்டு வெளிக்காற்று உள்ளே நுழையாதபடி அடைத்துள்ள அறைகளில் வசிப்பதும், துணியால் முகத்தை மூடிக்கொண்டு உறங்குவதும் எவ்வளவு அறியாமை என்பது இப்போது நன்கு விளங்குகிறதல்லவா? அறையிலுள்ள பிராணவாயு நம்முடைய சுவாசத்தால் உபயோகப் படுத்தப்பட்ட பிறகு சுவாசிப்பதற்குப் பிராண

வாயு இல்லாமற் போகிறது. அஃதேயன்றி நாம் ஸ்வாசித்தால் உட்கொண்ட காற்று வெளியே வரும்போது முற்றும் மாறுபட்டு கரியமில வாயுவென்று சொல்லப்படும் ஒருவித கெட்ட புகைபோன்ற வாயுவாக வருகிறது. அது நம் கண்களுக்குப் புலப்படாது. பின்னர் நாம் உட்கொள்ளுவதற்குச் சுத்தமான பிராணவாயுவில்லாமையால் விஷத்தன்மையுள்ள கரியமில வாயுவையே உட்கொள்ள வேண்டியிருக்கிறது. இதனால் நம்முடைய தேக சுகம் கெட்டு நோய்கள் உண்டாகின்றன.

மா. அ. கனகசபை முதலியார்.

## தொழிற் பகுதி

### நம்மவர்கள் கைத்தொழிலில் முன்னேறுவது எப்படி?

செங்குந்த குலாபிமானிகளே! நம்மக்கள் படும் பாட்டை நன்கு கவனித்து அவர்களை எவ்வாறு முன்னிலைமைக்குக் கொண்டுவருவது என்னும் பெரிய விஷயத்தைப் பற்றி நாம் ஒவ்வொருவரும் சிந்திக்கக் கடமைப் பட்டுள்ளோம். சென்ற காலமெல்லாம் போக, இனியாவது ஒரு கணமேனும் தாமதியாது நம்மக்கள் படும் துன்பத்தைக் கண்ணுறக் கண்டு துன்பத்தினின்றும் நீங்கும் வழியைத் தேட முன்வரவேண்டும். தொழிலாளர்களின் நிலைமையைப் பார்க்கும்போது மிகவும் பரிதபிக்கத் தக்கதொன்றாகவே கருதற்கு இடமுண்டு. காலையில் 7 அல்லது 8-மணி முதல் மாலையில் 5 அல்லது 6-மணிவரையும் வேலை செய்தாலும் தகுந்தபலன் பெறுவதற்கு இல்லை. ஒருவன் தான் அறுவாக்கியதுணியை விற்கக் கொண்டுபோகும்போது, அவன் படும் இன்னலுக்கு அளவுண்டோ? துணி நெய்து அறுக்கிற வருத்தத்தைவிட மிகுந்த வருத்தம் அடைகின்றான். "துணி வேண்டாம், வேண்டாம்" என்று சொல்வாரைக் தவிர 'வேண்டும், வேண்டும்" என்று சொல்வாரைக் காணேன். ஒரு நாகரோ அல்லது ஒரு வியாபாரியோ அதைப் பெறும்போது தொழிலாளிக்குக் காசு சரியாகக் கிடைப்பதுகூட / கஷ்டமாக இருக்கின்றது. 8 அல்லது 10 அணா ஒருநாள் வேலைக்கு கிடைப்பது அருமை. இதைக்கொண்டு அவன் வீட்டிலுள்ளவர்களைத் திருப்திப்படுத்தி எங்ஙனம் மீதம்வைக்கமுடியும். அந்தோ! பரிதாபம்.

நெய்ததுணியை விற்பதற்கு இடமின்றி ஓயாக்கவலையில் அழுந்துகின்றான். அறுவாக்கிய துணி விற்பனையாகும் என்றுள்ள துணிவு வருமானால், கவலையின்றிக் காலங்கழிக்க முடியும். இந்நிலைமையில் தொழிலாளர்கள் இருக்க, அவர்கள்மேல் ஒரு கருணையுமின்றி இருப்போமாயின் நம்மக்கள் ஈடேறுவது கஷ்டம். 'பலதுளிப் பெருவெள்ளம்' என்ற பான்மைக்கேற்ப எல்லாரும் சிறிது முயற்சிக்கவேண்டும்.

நம்மவர்கள் இருக்கின்ற ஒவ்வோரிடத்திலும் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தவேண்டும். பங்கு ஒன்றுக்குப் பத்து ரூபாயோ அல்லது இருபது ரூபாயோ ஏற்படுத்தி இடத்திற்குத் தகுந்தபடியும் தறிகளுக்குத் தகுந்தபடியும் பங்குகள் சேர்க்கவேண்டும். அறுவாக்கிய துணிகளை இச்சங்கத்தில் வாங்கி விற்பனை செய்ய வேண்டும். இவ்விதமாக யாவரும் சேர்ந்து ஒத்துழைத்தால்தான் நம்மவர்களுக்குச் சிறிது கஷ்டம் நீங்குமே தவிர மற்றப்படி ஒருக்காலும் நீங்காது. ஏழைகளுக்குப் பாடுபடுவதே இறைவனுக்கும் திருப்தியாம். அவர்கள் சோற்றுக்குத் திண்டாட, நம்மில் சிலர் மிகுந்த ஆடம்பரத்தோடு உண்ணுவதும் உறங்குவதும் ஏற்றதன்று. ஒவ்வொருவரும் தன்னால் இயன்ற அளவு வேண்டிய உதவி அவர்களுக்குச் செய்து நன்னிலைமைக்குக் கொண்டு வரவேண்டும். ஏராளமான பொருள் உள்ளவர்கள் ஏழைகளை முன்னுக்குக் கொண்டு வருவதற்காக சிறிது பொருள் செலவழிக்கவேண்டும்.

"பிறக்கும் பொழுது கொடுவந்ததில்லை பிறந்து மண்மேல், இறக்கும்பொழுது கொடுபோவதில்லை இடைநடுவிற், குறிக்கும் இச்செல்வம் சிவன் தந்ததென்று கொடுக்கறியாது, இறக்கும் குலாமருக்கு என்ன சொல்வேன் கச்சியேகம்பனே" என்றார் பட்டினத்தடிகள். இத்தகைய செல்வத்தைப் பிறருக்கும் கொடுத்துத்



தானும் அனுபவிப்பதே சிறந்ததாகும். "அற்றார் அழி பசிதீர்த்தல் அஃதொருவன், பெற்றான் பொருள் வைப்புழி" என்றார் வள்ளுவனாரும். இவ்விதம் நல்ல பயனை அளிக்கக்கூடிய செல்வம் நிலை நிற்கும்.

பொருளாளர்கள் தங்கள் பொருள் மிகுதியைக் கல்யாண தடபுடலிலும், கோயில் கட்டுவதிலும், இன்னும் பலவித தானகருமங்களிலும் செலவழித்து வெளிக் காண்பிக்கின்றார்கள். பலபேர் அறியப் பொருள் நல்குகின்ற இயல்பு இன்னார்களிடத்தில் காணப்படுகின்றது. 100ரூபாய் ஏழைகளுக்காகச் செலவழிக்கஎண்ணம் வராத பிரபுக்கள் தங்கள் வீட்டுக் கலியாணத்திற்கு 1000கணக்காகப் பொருள் வீணாக விரயம் செய்கின்றார்கள்; பின் ஏமாறி விடுகின்றார்கள். இத்தகைய வீண்செலவு செய்கிறவர்கள் தங்கள் பொருளை நமது மக்கள் விஷயமாகச் செலவழிப்பார்களாயின், நமது மரபு முன்னிலும் பதின்மடங்கு சிறப்புறும் என்பதற்கு ஐயமுண்டோ?

நமது மரபில் உதித்த பெரும்பான்மையோர் பட்டினியாலும் பசியாலும்வருந்தமுற அதைச் சிறிதும் கவனியாது, கோயில் கட்டுவதிலும் குளம் வெட்டுவதிலும், திருவிழா நடத்துவதிலும் வீணாகப் பொருள் செலவழிக்கின்றனர். இவ்விதம் செய்வதைக்குற்றமாகக் கருதவில்லை ஆனால் முதன் முதல் செய்யவேண்டுவது நமது மக்களை முன்னேற்றுவது. அந்தக் கடனைச் செலுத்தாது வேறுகடன்களைச் செய்வது வீண் என்பதே எனது கொள்கை. பேய்க்கொடை நடத்துவதற்காக நம்மவர்கள் இருக்கின்ற ஒவ்வொரு ஊரிலும் ஆள்வீதம் வரிப்போட்டு மிகவும் உற்சாகத்தோடும் சந்தோஷத்தோடும் நடத்துகின்றார்கள், கல்விக்காகவும் கைத்தொழிலுக்காகவும் வரிப்போட்டுசெய்வதாக ஓரிடத்திலும் கண்டிலேன். போட்டி போட்டுச் சில இடங்களில் கொடை நடத்துகின்றார்கள். ஊர்வழக்குக்களுக்கும் வேண்டிய பொருளை வக்கீலுக்கும் குமஸ்தாக்களுக்கும் கோர்ட்டுக்களுக்கும் கொண்டு கொடுக்கிறார்கள். இந்த விஷயத்திற்கும் வரிபோடுகிறார்கள். அந்தோ! பரிதாபம் பரிதாபம். ஓரிடத்திலாவது நம் மக்களைச் சீர்ப்படுத்துவதற்கு வேண்டிய வழி ஏற்படுத்தினதாக இல்லை.

கடவுளுக்கு நாம் எல்லோரும் குழந்தைகள். எல்லோரும்இன்புற்றிருக்கவே அவர் எண்ணுவர். ஒருவருக்கொருவர் உதவி செய்யவேண்டும் என்பதே அவரது கொள்கை. ஒருவருக்கொருவர் சண்டையிட்டுப்பொருளை அனாவசியமாகச்செலவழிப்பது அவருக்குப்பெரிதும் வருத்தத்தை உண்டுபண்ணும். நாம் எல்லோரும் அன்போடு இன்பமாக வாழ்வதே கடவுளுக்குச் செய்யும் பேருதவியாகும். இதைத் தவிரக் கோயிலில் பழம் தேங்காய் கொண்டு போதல், சிறப்பு நடத்தல் முதலிய சீர்கள் அவருக்கு ஒரு நாளும் திருப்தியை உண்டுபண்ணா.

அன்பர்களே! செங்குந்த மக்களே! ஏழைகளுக்காகப் பாடுபட முன் வாருங்கள். உங்கள் பொருளில் கொஞ்சம் அவர்களுக்காக ஒதுக்கி வையுங்கள். மக்களை எல்லா விஷயத்திலும் முன்னேற்றுவதே கடவுள் விரும்பும் விருப்பமாகும். அவருக்கு வேறுவிதமான கைம்மாறு வேண்டியதில்லை. உங்களைச் சேர்ந்தவர்களைக் கைதூக்கிவிட்டால், அதுவே உங்களை வீடுய்க்கும் நெறியாகும்.

A. S. முத்தையா முதலியார், பி.ஏ.,
கோட்டாறு

---

### விகடம்

ஒரு கடையின் பக்கமாக ஒரு பையன் வேகமா ஓடிக்கொண்டிருந்தபோது அங்கு வைத்திருந்த நெபோலியன் உருவத்தின்மீது கால்பட்டதால் அது விழுந்து அதன் கைகளில் ஒன்று ஒடிந்து விட்டது. அப்பொழுது கடைக்காரன் ஓடி வந்து "இனி இது எதற்குபயோகம்? இதை வைத்துக்கொண்டு என்ன செய்யபோகிறேன்?" என்று முனிவுடன் கூறினான். உடனே பையன் "ஏன், சார்! ஒரு கண்ணையும் கொள்ளையாக்கிவிட்டு நெல்சன் என்று சொல்லும்" என்று கூறினான்.

(நெல்சனுக்கு ஒரு கண்ணும் ஒரு கையும் கிடையாது)

* * *

ஒரு போலீஸ்காரன் அனாவசியமாக ஒரு மோட்டாரை 5 நிமிடம் நிற்க வைத்துவிட்டான். மோட்டார் ஓட்டும் சிறுவன் கோபித்து "ஏன் இவ்வளவு நேரம் என்னை நிறுத்தினீர்? இதற்கு முன் நீர் இவ்வேலை பார்த்ததில்லையா?" என்றான்.

"மன்னிக்கவும், நிறுத்தாமல் மோட்டாரை ஓட்டிக்கொண்டிருப்பதற்குப் போதிய பலமற்ற சிறுவன் என்று நான் நினைத்தேன்" என்று அவன் கூறினான்.

## சமயப் பகுதி

## செங்குந்தரும் சிவதீக்கையும்

முன்தொடர்ச்சி

### செங்குந்தர்கள் சிவதீக்கை பெறுதலின் அவசியம்

நங்குந்தர்கள் சிவ சந்ததியாரென்ப தும், கந்தன் கனிஷ்டர்களென்பதும் யாவரும் அறிந்ததே. நங்குலத் தலைவர்களாகிய வீர வாகுதேவர் முதலிய ஒன்பதின்மரும் அன்னார் கால்வழித் தோன்றல்களாய ஆண்டவன் ஒளி பார்த்துத் தொளாயிரவரும் சிவதீக்கை என்று நித்தியகரும சைவானுஷ்டானங்களை நியமமு டன் கைக்கொண்டு ஒழுகி வந்தனரென்பது

தவச் சிந்தனையுள்ள தக்கோரின் மிக்கவர் தாரணியில்
பவச்சிந் தனைசற்றும் பண்ணறியாமலே பாதகமா
மவச்சிந் தனையொரு போதுமெண்ணார் நிதமத்திசந்தி
சிவச்சிந் தனைமற வாதவராகுமிச் செங்குந்தரே.

......................பிறபகற்றுங்
குருவாசகத்தை, மறவாவருங் குவலயத்தே
திருவாசகஞ்சொலொருவாசகத்தருஞ் செங்குந்தரே.

கடம்பணியும் தேவைகைக்கொள்வர் சிவாகமங் கைக்
[கொள்வர் செங்குந்தரே.

சிவ, மிக்கான சைவ விதிவளர்ப்போர்.

ஈசிலதார், சிவசமயப் பரிபாலனராகுமிச் செக்குந்
[தரே

மனைத்திலுள்ளே
யொரு நூற்றுக்கோடி பஞ்சாக்கரந் தன்னினமுச்
சரித்தே
திரு நூற்றெணக்கமணி நீறணிகுவர் செங்குந்தரே.

எனப் புகழ்ந்து கூறப்பட்ட ஆன்றோர் திருவாக்குக்களின் அறியக் கிடக்கின்றது. தவிர, நம் முன்னோர்கள் சமயப்பற்றும் நித்திய கருமானுஷ்டானவொழுக்கமுங் கைக்கொண்ட புண்ணிய சீலர்களிடத்தும், உண்மைச் சிவன டியார்களிடத்தும் எவ்வளவோ பிரீதியுடைய வர்களாய், அவர்களிடம் மிக்க மரியாதையா யொழுகிவந்தனர். சிவவேடமே மெய்ப்பொரு ளெனக் கொண்ட கொள்கையினை வாய்க்கப் பெற்றவரென்பதை,

"காவித்து மின்மணி நீறணிந்தே கன்வர்காண்
குறினும்
கோவித் திடாரந்த வேடமே பொருளெனக்
கும்பிவோர்"

என வரும் மூத்தோர் முதுமொழி வாசகத்தா னுணர்க.

"உருக்கொடு பணியாதாரை
யுளத்திலுஞ் செழுத்தை யுன்னிப்
பெருக்கொடு தவனீற்றைப்
பேணியே பணியாதாரைத்
தருக்கொடு நின்றுகண்ணீர்
ததும்பமுன் னோடாதாரைத்
திருக்கோயில் வலம் வாராரைச்
சினத்தொடு பொருஞ்செங்குந்தம்"

என வரும் ஈட்டி எழுபது பிரபந்தப் பாசுரத் தான், நம் பண்டையோர், சிவசின்ன மணிந்து சிவநாம முச்சரியா மதியிலிகளையும் திருக்கோ யில் வலம் வந்து இறைவனை வணங்கி வழி படக் கூசும் புல்லியர்களையும் வெறுத்துக்கண்டி த்து, அவர்களுறவு கலவாமலெப்படி விலகி யிருந்தார்களென்பது புலனாகின்றது. இதனா லிவர்கள் தெய்வ பக்தியும் குரு பக்தியும் அடி யார் பக்தியும் ஒருங்கே வாய்ந்தவர்களாய் நித் திய கருமானுஷ்டான சிவதீக்கை யுடையவர் களாய் விளங்கி யிருந்தார்களென்பது வெளிப் படை. ஆகையால் "தந்தையறிவு மகனறிவு" என்பதற்கேற்ப, அன்னார் கான்முளைகளாய நஞ் செங்குந்த குலமக்களும் சிவதீக்கை பெற்றுச் சைவானுஷ்டானங்களைக் கைக்கொள்ள வேண் டுமென்பது முறை. தவிர, நஞ்சிவனையுங் குகப்பெருமானையும் வழிபடு கடவுளாய்க் கொண்டு சைவர்களா யொழுகும் நம்மவர்கள், சைவ நூல்களிற்கூறப்பட்டதும், பாசமூன்றை யுந் தவிர்ப்பதும், மேலானதும், சைவசமயத் துக்குரியதுமான இச்சிவதீக்கையைப் பெறுத லவசிய மென்பது சொல்லாமலே விளங்கும். சிவதீக்கையின்றிச் செய்யப்படுஞ் சிவபுண்ணிய ங்கள் பயன்படாதென்றும் பொருள் தொனிக்க

"புண்ணமாஞ் சிவபுண்ணியந் தேசிகர்
சங்கண் வாக்குபதேச மதின்றியே
இங்கியற் றினிரும் பயனிலையாம்
மங்குவென்னு மான்புகலாகமம்"



சிவ புண்ணியத் தெளிவு கூறுமாற்றால் சிவதீக் கை பெற வேண்டியதின் அவசியமும் காரண மும் நன்கு விளங்குகின்றது. சமய தீக்ஷை பெறுதவன் சமயத்தில் அசைவனாகவே கருதப் படுகிறான். தீக்ஷையின்றாற்றான் மோக்ஷம். எவ் வித ஆச்சிரமங்களினாலும் மோக்ஷமில்லை மன வழுக்கு நீங்கப்பெற்று அத்துவ சுத்தியடைந்தா லொழிய மோக்ஷத்துக்கு வழி கிடையாது. ஆதலின் மனத்தூய்மை யளிக்குமிச்சிவதீக்கை யின்றி முத்தியடைய விரும்பும் மாந்தர், கோலின்றி நடக்கவிரும்பிய குருடர்போல்வர். அது ஒருவன் தோணியின்றிக் கடலைக் கடக் கத் தொடங்கியதை யொக்கும்.

"வேதமார்க்கத்தின் முக்கியமாக விளங்கிடப்
பட்ட நஞ்சிவனை
யதில் முத்தி கொடுப்பவன்"

என்று சூதசங்கிதை கூறுதலின் அவ்வின்ப முத் தியை யடைதற்குச் சிவதீக்கை பெற்று சிவ நாமத்தை சந்ததமு முச்சரித்துத் திருவருட் செல்வத்தை யடைந்தா லொழிய பிறவிப் பெருங்கடல் கடந்து முத்தியங்கரை சேர்தலரி தெனப் புலப்படுகின்றது.

"பிறவிப்பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்"

என்ற திருக்குறள் வாக்கியத்தின்படி மோக்ஷ தாதாவாகிய சிவகுகப் பெருமானை வழிபட்டு அவன் திருவருட்டுணையானே மோக்ஷமடைதல் கூடுமாதலின், அப்பெருமான் திருவருளைக் கும் நம்பாலுற, அவனால் மொழியப்பட்ட வேத சிவாகமங்களில் கூறப்பட்ட சிவதீக்கையைப் பெறுதலத்தியாவசிய மென்பதுஇதுகாறுங்கூறி யவாற்றான் உள்ளங்கை நெல்லிபோல் தெள்ளி தினறியக் கிடக்கின்றது.

### மூவகைத் தீக்கைகளும் அவைகள் செங்குந் தருக் குரியவென்பதும்.

மேலே கூறப்பட்ட இவ்வுயரிய சிவதீக்கை யானது வேத சிவாகமங்களில் கூறப்பட்டபடிப் பௌதிகி, நைஷ்டிகி எனவும், சர்பேக்ஷை, நிரா பேக்ஷை எனவும், பல்வேறு பாகுபாடுடைத் தாய், இவற்றினுட் பிரிவாய் லௌகிகி, அலௌ கிகி எனவும், பின்னும் சபீஜை, நிர்ப்பீஜை எனவும், அவற்றுள் உட்பிரிவினையுடையதாய் சாதிகாரை, நிரதிகாரை எனவும் பல்வேறு பாகுபாடுகளும், உட்பிரிவுகளும், கிரியைகளு மாய் விளங்குகின்றது. இவற்றின் முறைகளும் மந்திரங்களும் சமயாசிரியர்பாற் (தீக்ஷாகுரு) கேட்டு நன்கு தெளிக. இவண் பொதுவாய் விவரிக்குமிடத்து இத்தீக்ஷையானது சமய தீக் கை, விசேட தீக்கை, நிருவாண தீக்கை என மூவகைப்படும். இதனை

"தரித்துச் சமய விசேட நிருவாணந்
தெரிந்தபடி நித்தியமுஞ் செய்."

என்னுஞ் சைவசமய நெறியானுணர்க. இவை கள் மூன்றும் பக்தி, சிரத்தை, வைராக்கிய ஒழுக்கமுடை ஞான சீலர்களுக்கும், ஆசாரி யராதற்குரிய பரம்பரையில் வந்தோர்களுக்கும் செய்விக்கப்படும். இம்மூவகை தீக்ஷைகளையும் நியமப்படி யடைந்து அனுஷ்டித்து ஆசாரியா பிடேகஞ் செய்விக்கப்பட்ட பின்னரே ஒருவன் ஆசாரியஸ்தானத்தை யடைந்து தன் மாணாக் கர்களுக்குச் சிவதீக்கை செய்யும் ஆற்றலுடை யவனாகிறான் (அதிகாரம்). இப்படி ஆசாரிய ஸ்தானத்தை மேற்கொண்ட குருவானவர் தம் மையடைந்த ஆன்மாக்களின் (மாணாக்கர் களின்) பக்குவத்திற்கேற்ப, ஆணவாதி மும் மலங்களையும் போக்கி, திருப்பெருகு சிவஞா னத்தை யூட்டி, சிவனையுள்ளுறக் கண்டானந் திக்குமாறு செய்விக்கப்படும். தீக்ஷைகள் சாம் பவி தீக்கை, சக்தி தீக்கை, மாந்திர தீக்கை, யென மூவகைய. இதில் சாம்பவி தீக்கை யென்பது ஆசாரியன் தனது திருநோக்கு முத லியவற்றால் மாணாக்கனது பாசத்தைச் சோதி த்தலாம் இதற்குப் பிரமாணம் வாயுசங்கிதை

"குருவேர் பெறுநோக்காலவன் கோதில் பரிசத்தால்
அரிதாமவன் வாக்காலுறு மாபாசத்தை யறுக்கும்
பொருவில் சிவனுணையிகப் பொருந்து மதுதன்னை
விரியாகம நூல்சாம்பவி தீக்கையென விளம்பும்."

சத்தி தீக்கை யென்பது குண்டலம், மண்டலம் அக்கினி நெய், சுருக்குச் சுருவ முதலியன வெல்லாம் மனத்தாற் கற்பித்துக் கொண்டு விதிப்படி யகத்தே ஆகுதி முதலிய கிரியை செய்து மாணாக்கனது பாசத்தைக் கெடுத்த லாம். இதற்குப் பிரமாணம் சைவசமய நெறி,

"சத்திமனத்தாற் புரிகை, சாம்பவி ஞானக் கணினாற்
சுத்தி செயலென்றே துணி."

மாந்திர தீக்கை யென்பது குண்டத்தையும் மண்டலத்தையும் புறத்தேயிட்டு விதிப்படி

புறம்பே யாகுதி முதலிய கிரியை செய்து மாணாக்கனது மலத்தைக் குன்றும்படி செய்வதாம். இதற்குப் பிரமாணம் வாயு சங்கிதை,

"செந்தீயினை வளர்த்தேயறிகழ் மண்டலம்பரப்பி
கந்தாது செய்தீக்கை யதுநவின் மந்திரதீக்கை [கும்
புந்தித்தெளி வில்லோருக்கும் புகன் ஞானமிலோர்க்
பந்தங்கெடச் செய்தீக்கைமற்றிதுவாமெம்புகர்வார்."

இனி இச்சிவதீக்ஷையின் பெருமையாதிகளை விரிக்கிற் பெருகுமாகையா லிதனை விடுத்து, இம்மூவகை தீக்ஷைகளும் நங்குலத்தவர்களுக்கெவ்வகையி லுரித்தென்பதைப்பற்றி யீண்டாராய்வாம். முசுமுகனிடமிருந்து நீங்கி வீரவாகு தேவர்களொன்பதின்மரும் கந்தமாதனஞ் செய்கையில் அன்னார்களின் வழித்தோன்றல்களாய ஆண்டவமார் ஓராயிரத்துத் தொளாயிர முதலியார்களும் தங்கள் தந்தையர்கள் பிரிவினைக்காக நெஞ்சங்கவலுற, வீரவாகு தேவர் அவர்களை நோக்கி "மைந்தர்காள்! நீவிர் கவலற்க, நங்குலப்பெருங் கடவுளாகிய முருகக் கடவுள் சீர்காழிப் பதியில் ஆளுடைய பிள்ளையாரெனத் திருவவதாரஞ் செய்து ஸ்தலங்கள் தோறும் தமிழ் மறையோதிவரும் நாளில் காஞ்சிபுரம் வந்துஉங்களைச்சீர்திருத்தம்செய்வார்." என உறுதிமொழி தந்தவண்ணம் ஆளுடைய பிள்ளையார் கச்சிம்பதியடைந்து தம் பெயரால் பிள்ளையார் பாளயமெனவொரு நகரங்கண்டு, திருஞானசம்மந்தர் மேடையென ஒரு நீதிமன்றம் ஸ்தாபித்து, நம்மவர்களிடை நேரும் வழக்காதிகளைக் காஞ்சிபுரம் மகாநாட்டுக் கூட்டங்கூடி அம்மேடைமீதிருந்து பேசி சிக்கறுத்துக் கொள்ளுகிறதென்று வகுத்து இன்னும் குலவிருத்தி, கல்வியபிவிருத்தி, சமயானுஷ்டானம் முதலிய அநேக சீர்திருத்தங்களைச் செய்து, நம் செங்குந்தர்கள் அன்னிய ஜாதிக் குருக்களிடம் தீக்ஷைபெறுதல் கூடாதெனக் கண்டித்துத் தாமே குருவாயிருந்து செங்குந்தர்களுக்கெல்லாந் தீக்ஷை செய்வித்து, அப்போது ஒழுக்கசீலர்களாயும் கல்வியறிவு வாய்ந்தவர்களாயுமிருந்த சிலருக்குச் சமயதீக்ஷை விசேடதீக்ஷை நிருவாண தீக்ஷை என மூவகைத் தீக்ஷைகளையும் புரிவித்து, நான்காவதாக ஆசாரியபிடேகமுஞ் செய்வித்து ஞானோபதேசம் புரிந்து நம்மினத்தவர்களுக்கெல்லாங் குருவாக நியமித்துச் சிவதீக்ஷையும் ஞானோபதேசமுஞ் செய்துவரும்படி ஏற்படுத்தி, கச்சியாள வந்த வள்ளலாராதீனம் முதலிய பல குரு பரம்பரையினர்களை ஸ்தாபித்து நம்மவர்களெல்லாஞ் சிவதீக்ஷை பெற்றுச் நித்தியானுஷ்டான சீலர்களாய் சைவ நன்னெறியில் வாழவேண்டுமென்று வரையறுத்தருளினார்கள். ஆதலினிம் மூவகை தீக்ஷைகளும் நம்மவர்களுக்குரிய தென்பதொருதலை. நம்மாளுடைய பிள்ளையாரா லப்போது ஆசாரியபிடேகஞ் செய்விக்கப்பட்டவர்களின் வம்ச பரம்பரையில் வந்த கச்சியாளவந்த வள்ளலா ராதீனம், திருவாலங்காடு கார்க்கோடக மடலாபத்தாராதீனம், திருவழுவூர் வேதநாயக மடாலயத்தாராதீனம், திருப்பெண்ணாகடம் மெய்கண்டாராதீனம், முதலிய குரு பரம்பரையினர்கள் இப்போதும் பாரம்பரியமாய் நம்மவர்களுக்குச் சிவதீக்ஷை புரிந்து வருவதும் இக்கூற்றை நன்குவலியுறுத்தும். திருக்கை வழக்கப் பிரபந்தத்திலும்

"உத்தரசை வத்தீக்கை யோடேசம யாவதியாம்
முத்திறத்தீக் கைப்பரவம் முத்திரைக்கை"

எனக் காணப்படுதலினாலும்; செங்குந்தர் மாலையென்னுஞ் சீரிய நூலிலும்

"மூவகைத் தீக்கையுட்டந்தை சமயமுயன்றளிப்பத்
தாவில்விசேட நிருவாணந்தங் குலத்தந்தணர்கை
பாவபிடேகத்தர் பன்முறையாய்ந்து பரிந்தளிப்பத்
தேவருமெச்சப் பெற்றோங்கி நிற்பார்களிச்
செங்குந்தரே."

எனும் பாசுரம் விளங்குகின்றமையாலும், நங்குலமக்களுக்கு மேற்கண்ட மூவகைத் தீக்ஷைகளும், சைவசமய நித்திய கருமானுஷ்டானங்களும் மிகவுரிமையுடையவென்பது உள்ளங்கை நெல்லியாமன்றோ? தவிர,

"பண்டைமதன்னைப் பரனிடம் பெறப்பண்ணுறு
நற்
றொண்டினிலைமைக் கிடுமெல்லை யான்கையுஞ்
சூழுமொன்பான்
எண்டனிநாட் டுறைகைக்கோளருக் கிருந்
தீக்கைசெயுந்
திண்டியை யொப்பவர்யாருஞ் செங்குந்த
சிலாக்கியரே."

என்னுமான்றோருமைத் திருவாக்காலும்,

"சமையவிசேட நிருவாணதீக்கை தரித்தறுட
னையபிடேகமும் பெற்றங்கவர் குலதாரியராய்
இமையமுதற்கொடு சேதுவரைக்கு மினிதுறைந்து
சிமையவினச்செனயாண்டும் விளங்குவர்
செங்குந்தரே."





என்னுஞ் சீரிய முதுமொழியாலும், நங்குலமணிகளுக்கு மூவகைத் தீக்ஷைகளும், நான்காவதாய ஆசாரியபிடேகமும் பெற்றுக் குருபீடமாக விருந்து, சமய தீக்ஷையாதிகளைப் பரிபாகமுற்றஆன்மாக்களுக்குச் செய்விக்கவும், நித்திய கரும சைவானுஷ்டானஞ் சிவதீக்ஷை யிவைகளை விதிமுறை நங்குல நாரியர்களால் அனுக்கிரகிக்கப்பெற்று சிவத்தியானம், சிவோபாசனை புரிவதற்கும் உரித்தானவர்கள் என்பது நன்கு புலனாகின்றது. "தந்தை பொருள் மைந்தர்க்குள்" என்னும் முதுமொழிப்படிச் சிவ பரம்பரையினாதல் பற்றிச் சிவ மூல மந்திரங்களும் சிவாகமவிதி யொழுக்கங்களும் சைவானுஷ்டானாதி கிரியைகளும் நம் செங்குந்தர்களுக்கு ஏனையரைக் காட்டிலும் மிகவுரிமை யுடையவென்பது தொன்னூலாராய்ச்சிகளிற் காணப்படுவதோருண்மையா மென்க. இனி, சிவ தீக்ஷை பெறுவோரடையும் பலனாதியவைகளைப் பற்றியொரு சிறிதாராய்ந்து நம் வியாசத்தை முடிப்பாம்.

(தொடரும்)

வை. ச. இராமலிங்க முதலியார்,
துணைத்தலைவர், சைவசித்தாந்த செங்குந்தர் சமாஜம்,
காஞ்சிபுரம்.

## உபதேசமொழிகள்

நல்லோரைக் காண்பது அருமையன்று. அவர்கள் ஆபத்துக் காலத்தில தானேவந்து உனக்கு உதவி புரிவர். உடனே அவர்களை நாடு—கிரானிகல் (Chronicle).

* * *

யூனிவர்சிடியின் உயர்தரப் படிப்பாளனாக இருந்து திடீரென உத்தியோகந் தேடியலையும் தொழிலாளனாக மாறுவது நகைப்புக்கிடமாகவே இருக்கின்றது—இந்தியன் நியூஸ்.

* * *

மிகவும் அவமானகரமான முடிவில் கொண்டு போய்விடுமென முதலில் நினைத்த சில காரியங்கள் கடைசியில் பெருத்த நன்மதிப்புக்கிடமாக முடிகின்றன.

* * *

ராமகிருஷ்ணாஸ்ரமத்தில் அன்னதானம் புரிவது சிறப்புடைத்தென்றாலும் ஏழைகளை இவ்வகைத் தானங்கள் சோம்பேறிகளாக்குகின்றனவாதலின் இதனினும் தொழில்தானம் புரிவது (ஏழைகட்குத் தொழில் கற்பித்தல்) மிகவும் சிறப்புடைத்து.—மகாத்மா காந்தி.

* * *

23-3-29உ ஹைதராபாத் ஆஸ்பேனு சர்வகலாசாலைப் பட்டமளிப்புவிழா நடைபெற்றபோது நவாப் ஸர் அமின்ஜங் பகதூர் செய்த உபந்யாசத்தின் சாரம்: "நான் எதையும் செய்கையில் காட்டவேண்டுமென்னும் தத்துவத்தை உறுதியாக நம்புகின்றவன். ஒருவன் வாழ்க்கைக்கு இதுவே நற்செய்தி. அறிவும் செய்கையும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிக்கமுடியாத இரட்டைப்பேறு. செயலுக்கு முற்பட்டதும், அதற்குத் துணை புரிவதும் அறிவேயாகும். ஒருவனுடைய இன்பவாழ்க்கை அவனது நற்குணங்களைப் பார்த்தும் நற்குணங்கள் அவனது அறிவைப் பொறுத்து முள்ளன.

புத்தகங்களைப் படித்தலால் மட்டும் உண்மை அறிவு தோன்றிவிடாது. புத்தக வறிவு நமது வாழ்க்கைக்குப் போதியது மன்று. ஆயினும் உண்மை யறிவு பெறுவதற்கு அஸ்திவாரமாகும் உண்மை யறிவே ஒருவன் வாழ்க்கையைத் தூய்மைப் படுத்துவது; அவனைத் தீமையினின்றும் விளக்குவது; நன்னெறிப் புகுத்துவது; ஆபத்தினின்றும் காப்பது; வறுமைச் சேற்றினின்றும் எடுத்து செல்வச் சிங்காரவனத்தில் சேர்ப்பது.

இவ்வுண்மை யறிவை ஒருவன் வாழ்நாளனைத்துங் கற்றுக்கொள்ளுகின்றான். தனது நிலையினையும், தன்னைச் சூழ்ந்து நிகழும் அரிய சம்பவங்களையும் கவனமாய்க் கற்றறிந்தும், பிறமக்களின் குணகுணங்களைக் கற்றும், பிறருடைய அனுபவத்தையும் தனது அனுபவத்தையும் ஒப்பிட்டுணர்ந்தும்இவ்வறிவைப் பெறுகின்றான்.

பண்டைக்கால இலக்கண இலக்கியங்களோடு தற்கால இலக்கியங்களையும் நன்கு கற்றுத் தினந்தோறும் கண்டுபிடிக்கப்படும் பல அதிசயங்களுடன் நெருங்கிய சம்பந்தம் வைத்துக்கொள்ள

வேண்டும். தங்களைச் சுற்றியுள்ள சமூக, அரசியல் இயக்கங்களிலும் நெருங்கிப் பழகி அறிவினை வளர்த்தல்வேண்டும். இம்மையிலும் மறுமையிலும் இன்பந்தருவது அறிவேயாம்.

வாழ்க்கையில் வெற்றிபெற விரும்புகின்ற ஒருவனிடம் முதலில் உழைக்க வேண்டுமென்ற ஆவலும், பின்னர் விடாமுயற்சியும் இறுதியாக கிரகிக்குந் தன்மையும் இருத்தல் வேண்டும்.''

* * *

கஷ்டமும் துன்பமுமே இன்பத்துக்குக் காரணம். இன்பமுந் துன்பமும் ஒன்றோடொன்று இணைந்தவை. இன்பமே சில சமயங்களில் துன்பமாக மாறுவதுண்டு.

* * *

மனிதர்கட்கு ஆசைகள் பலவெனினும் துன்பத்தைத் தடுத்து இன்பம்பெற வேண்டுமென்பதே இவற்றின் முடிவு. ஆசைகள் குறைவதற்கேற்ப ஆநந்தம் பெருகிவரும். இதனாலேயே ஆசையைக் குறைக்க வேண்டுமென பௌத்தசமயம் வற்புறுத்துகின்றது.

(ஒவ்வொரு சமயமும் இதனை வற்புறுத்துகின்றது. சைவசமயத்திலும்

ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்
ஆசைப் படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட ஆநந்த மாமே.—திருமந்திரம்

என்று கூறியுள்ள அரிய திருமந்திரத்தை நோக்கின் இதன் உண்மை புலப்படும்.)

நீங்கள் ஆடம்பரமற்ற வாழ்க்கையினையும்' தனித்த சிந்தனையினையும், உயரிய நோக்கங்களையும் கொண்டு உயர் நிலைக்கு வருவீராக.

* * *

இந்தியாவின் சமூகநிலை திருத்தி யமைக்கப்பட்டால்தான் பிற்காலத்தில் இந்தியா மேன்மை பெறக் கூடுமென்றும், ஆங்கிலப் பெண்கட்கும் இந்தியப் பெண்கட்கும் ஒரு பொது உறவு ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும், இந்தியாவின் வருங்காலச் சிறப்பு இந்தியப் பெண்களின் முயற்சியினாலேயே ஏற்பட வேண்டுமென்றும் நான் உறுதி கூறுவேன்—லேடி சைமன்.

* * *

இரண்டாவது யாதவகுல மகாநாட்டில் தலைமைவகித்த திரு. S. சௌந்தரராஜன் பெண்மக்களின் நிலையைக்குறித்துப் பேசியதின்சாரம்:—
பெண்மக்கள் வீட்டுவேலைகளைக் கவனிப்பதோடு இல்வாழ்க்கைக் குரிய வருவாயில் சரிபாதியைத் தமதுழைப்பால் சம்பாதிக்கவேண்டியவர்களாயு முள்ளனர். பெண்மக்கள் இவ்விரு பொறுப்பேற்றுத் துன்புறுகின்றனர். அதனால் அவர்களது இயற்கை நலன் குன்றிவிடுகிறது. அவர்கள் இன்புறச் சந்தர்ப்பமோ சாதனமோ அளிக்கப்படவில்லை. ஏனைய பெண்மக்கள் இன்பக்கடலுள் மூழ்கி நிற்கையில் நமது பெண்கள்மட்டும் இன்பங் கொள்ளற்கேற்ற இனிய சாதனங்களின்றித் துன்புறுவது கண்டும் இரக்கமற்றவர்களா வசைகின்றோம். இயற்கை யழகையும், இன்பவாழ்வையும் வர்ணித்த பழைய நூலாசிரியர்கட்கு எடுத்துக் காட்டாயிலங்கிய நம் மாதர்கள் இந்நாளில் கண்ணீர் விட்டுக்கலங்கி வாடுகின்றனர். கல்வி பயிலவும், அறிவு வளர்ச்சி பெறவும் யாதொரு சாதனமுமில்லை. மற்றப்பெண்களோ சமூகத்துறை தாண்டி அரசியற்றுறையிலும் ஆதிக்கம்பெற்று வருகின்றனர்.

* * *

---

## பொழுது போக்கு,
## எழுத்துமாறிய வார்த்தைகள்.

1. ஆயுங் குரங்கன் செந்தமிள் ஓத மாறுங் குரித்தி
2. விமுழ் நீயமுத வார்த்தை யாடுக
3. நஞ்சித்த மகா அன்பெடு குறு நடையில் நாடுககா
4. ஜில்சேலஜே வைகுந்தர்க்கு செங்கோலாம்
5. பலே குன்னவம்ச தெய்வம் நலபாதி
6. மந்தோன் தோறுங் கிங்கிங்கவிகளைக் கற்றுச் சா.

மேலே ஆறு எழுத்துமாறிய வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக "மோச்சங் கலைதங்குக" என்பது எழுத்துமாறிய வாக்கியம். இதற்குத் "தலைச்சங்க மோககுக" என்பது சரியான வாக்கியம். இதே மாதிரி சரியான வாக்கியங்களமைத்து இரண்டணா தபால் முத்திரையோடு "செங்குந்த மித்திரன் பொழுது போக்கு" 200, தம்பு செட்டித் தெரு, சென்னை என்ற விலாசத்திற்கு மேமீ 30-ம் தேதிக்குள் அனுப்பவேண்டும். செங்குந்த மித்திரன் சந்தாதாரர்மட்டும் விடை எழுதலாம். சரியான விடைகளை யெல்லாம் குலுக்கி எடுத்து முதல் ப்ரைஸ் விழுந்தவருக்கு ஒரு வெள்ளி மெடலும் இரண்டாவது ப்ரைஸ் வந்தவருக்கு ஒரு சிறந்த புத்தகமும் பரிசளிக்கப்படும்.



# நாவல் பகுதி

## வெறுப்பு விருப்பானது

விபவ வருஷம் தைமாதம் பிறந்த இரண்டாம் நாள் மாலை சுமார் 5-மணி யிருக்கும். சூரியனும் ஓய்வெடுத்துக் கொள்ளுபவன் போற் குடதிசையிற் படிந்தான். வானமும் அத்திக்கிற் செந்நிறங் காட்டிற்று தென்றலும் இனிமையாக வீசிற்று. அத்தருணம் அழகிய மதில்களால் சூழப்பெற்ற பாங்க பங்களா ஒன்றின் முற்புறத்தில் போடப்பட்டிருந்த ஒரு நீண்ட இரும்பு நாற்காலியில் ஒரு பெரியார் சாய்ந்திருந்தார். சற்று உள் புறத்தில் அமைந்த வீடு 2 அடுக்கு மெத்தையுள்ளதாகவும் காற்று வெளிச்சம் முதலிய நிரம்பப் படுவதற்கு வசதியுடையதாகவும் பொதுவில் ஒழுங்காகவும் கட்டப்பட்டிருந்தது. முற்றத்தினிரு பக்கங்களிலும் கடவுட் பூஜைக்குதவும் நறுமண மலர் பூக்கும் மரஞ்செடிகளிருந்தன. மத்தியில் அழகாகக் கட்டப்பட்டிருந்த ஒரு துளசி மாடத்தில் இருந்த அடர்ந்த துளசிச் செடிகள் பலபக்கங்களிலும் ஆடுவது, அம்மை விஷ ஜுரம் முதலிய தொத்து வியாதிகளை அவ்வீட்டினை யணுகாதபடி விரட்டுவது போலிருந்தது. அங்கிருந்த அழகிய செடிகள் ஆரோக்கியமான காற்றை வீசின. வீட்டின் ஒரு பக்கத்தில் தனியறை யொன்றில் யாரோ வாசிக்கும் சப்தம் கேட்டது. நாற்காலியி லுட்கார்ந்திருந்தவரது உடம்பின் மேலணி ஒரு சிறு குட்டையே. அவருக்கு வயது 40 இருக்கலாம். உச்சியில் ஒரு தம்பிடி யளவு தவிர மற்றப் பாகங்களில் நன்கு க்ஷௌரம் செய்யப்பட்டிருந்த அவர் சிரசும், மார்பில் தவழ்ந்த உருத்திராக்க மாலையும், நெற்றி, மார்பு கைகள் ஆகியவற்றில் வெளேரெனத் திகழ்ந்த திருநீறும் அவரது பக்தியினையும் வைதீகத்தையும் விளக்கின. அவரது முகம் ஆலோசனையையும் கவலையையும் காட்டிற்று.

கால் மணிக்குப் பின் வீட்டினுள்ளிருந்து சுமார் 20 வயதுடைய ஒரு வாலிபர் கையிலோராங்கிலப் புத்தகத்துடன் தெருப்பக்கம் வந்தார். அவரது கிராப்புத்தலை ஒழுங்காகச் சீவப்பட்டிருந்தது. உடம்பில் அரைக்கை ஜிப்பாவும், காலில் மல் நிஜாரும், பாதங்களில் அழகிய செருப்பும்அணிந்திருந்தார். அவர் மேற்கூறிய பெரியா ருட்கார்ந்திருந்த நாற்காலியைக் கடந்து சுமார் 2 அடிகள் சென்றதும் 'உஸ்' என்ற பெருமூச்சு கேட்டுத் திரும்பிப் பார்த்தார். பெரியாரை அணுகினார். அவர் பக்கலில் அடக்கத்துடன் நின்று "என் தந்தையே, என்ன கவலை?" என்று வினயமாய் வினவினார். தந்தை இரண்டொரு நிமிஷம் வாளா இருந்து பின் தம் தலையை மெதுவாகத் தூக்கி வாலிபரது முகத்தில் தமது பார்வையைச் செலுத்தினார். அவரது முகத்தில் விசனம் அதிகரிக்கக் கோபமும் குடிபுக்கது. அவர் தம் மகனை நோக்கி, "நான் எவ்வளவு சொல்லியும் நீ கேட்கவில்லையல்லவா? 'தந்தை சொன்மிக்க மந்திரமில்லை' என்பதை மறந்தனையோ? நன்றியற்றவனே, என் வார்த்தையை மதியாத நீ என் மகனன்று என் முன்னின்றும் விலகு" எனக் கடுத்துக் கூறினார். வாலிபரும் "அப்பா, தங்கள் வார்த்தையை இதுவரையிலாகிலும் நான் மீறியிருக்கிறேனா? இந்த விஷயத்திலும் தங்களிஷ்டத்தைக் கெடுக்க எனக்கு மனமில்லையாயினும் அது அவசியமாயுளதே. யான் என் செய்வேன்? நாங்களோ யோசியுங்கள்" என்று வணக்கத்துட னுரைத்தார். உடனே அவர் தந்தை "சரிசரி; உன் இஷ்டப்படி நட." என்று கோபித்துக் கூற, வாலிபரும் மெதுவாக நடந்து பங்களாவின் ஒரு பக்கத்துக்குச் சென்றார்.

நற்சிவ முதலியாரென்னும் அப்பெரியார் குசக்குடி என்னுமவ்வூரில் கண்ணிய வாழ்க்கை நடத்தும் செங்குந்தர். நூல் ஜவுளி வர்த்தகத்தில், நாணயங்காட்டி அதில் வளமைபூண்டு, சில லக்ஷங்கள் சேகரித்தவர்; தம் பெயருக்கேற்பச் சீல நடத்தையும் அறிஞரிடத் தடக்கமும் கொண்டவர். தமிழ்ப் புராண இதிகாசங்களைக் கற்றுணர்ந்தவர்; ஆங்கிலம் கல்லாதவர். முதலியார் தினமும் முருகப்பெருமானை அந்திகாலை அன்புடன் புந்தியுள் வைப்பார். ஆனால் அவர் முதிர்ந்த வைதீகர். அவரும், அவர் மனைவியாரும், ஆண் பெண்ணாகிய அவர் தம் இருமக்களும் மதிப்புடன் வாழ்ந்து வந்தனர்.

அவரது மகனை சுகுணபூஷணர் பி.ஏ., ஆனர்ஸ் (B.A. Hons.) வகுப்பில் வாசித்து வந்தார். அவர் கல்வியில் கருத்துடையவர்; ஜீவகாருண்யம், பரோபகாரம் முதலிய விரதங்களை மேற்கொண்டவர்; தற்காலக் கல்லூரி மாணவரிடம் சாதாரணமாகக் காணப்படும் தீய பழக்கங்களின் ஈனத்தையும் கெடுதியையும் நன்குணர்ந்து வர் வெறுத்ததன்றித் தமது நண்பரும் அவற்றில் ஈடுபடாதிருக்கும்படியும், ஈடுபட்டவர் விடும்படியும் நல்லுபதேசம் செய்வார்; சீர்திருத்தத்திற் சிரத்தையும், ஆராய்ச்சியில் ஆற்றலுமுடையவர். ஆகவே அவர் மூடப் பழக்கங்களைக் கனவிலும் கையாளாததன்றி அர்த்த மற்ற ஆசாரங்களையும் வைதீக வழக்கங்களையும் அவமதித்தார். தமது தந்தையாரிடம் இணையிலா அன்பும், அடக்கமும், மரியாதையும் அவர் கொண்டிருந்தும் இருவரது நடையுடை பாவனைகளிலு மேற்பட்ட வித்தியாசம் தந்தைக்கு மனக்குறையையுண்டாக்கியது. வைதீகமாகத் தலையை மொட்டையாக வைத்திருந்த தகப்பனார் தமது மகனது கிராப்பை வெறுத்தார். மீசையை க்ஷௌரம் செய்து கொண்டு வேஷ்டியும் சப்பாத்துக் கட்டையும் அணிந்த அவர் தம் மகனது முறுக்கிய மீசையையும் துல்லியமான இஜாரையும் பளபளப்பான பூட்சு முதலிய காலணிகளையும் வெறுத்தது வியப்பன்றே.

நன்னடத்தையிலும், கல்வியிலும், நற்சிந்தையிலும் மிகவும் ஒற்றுமைப்பட்ட தந்தையையும் மகனையும் அர்த்தமற்ற மூடப் பழக்கங்களில் தந்தை கொண்டிருந்த பெரும்பற்றே வேற்றுமைப் படுத்திற்று. இன்னல் பல இழைக்கும் இப்பாழும் பழக்கங்கள் எதற்குப் பிரயோசனம்? நற்குண நற்சீலராய மகனுக்கும் தந்தைக்கும் மனக்கல்மஷம் ஏற்படுத்துவதினும் வேறு கெடுதி யாதுளது? இத்தகைய கேடிழைக்கும் ஆசாரங்கள் அழிந்தாலென்? அவற்றிற்காக நாம் ஏன் மண்டையை உடைத்துக் கொள்ளவேண்டும்? அவற்றுள் நுழைந்து பாராத நற்சீல முதலியார் அவற்றை நம்பிக் கையாண்டார். அவற்றின் பிரயோசனமின்மையை அவருக்கு எடுத்துக் கூறுபவருமிலர். அவரது மகனும் அவற்றைப் பற்றித் தமது தந்தையிடம் வாதிக்க அஞ்சினார். தாமே தமது மகனை ஆங்கிலக் கல்வியில் பயிற்றுவித்தனரேனும் அதனாலேயே தம் மகன் அடியோடு கெட்டு விட்டதாக அவர் எண்ணினார்.

இவ்வாறெரிந்த நெருப்பில் சுகுணபூஷணரது கல்யாண விஷயமாகிய இழுது சேர்ந்தது. நற்சீல முதலியார் தைமாதத்திலேயே தம்மகனுக்கு மணம் முடிக்க வேண்டுமென்று எண்ணங் கொண்டிருந்தார். ஆனால் சுகுணபூஷணரோ, தாம் பரிக்ஷையில் தேறி ஏதோ வருவாய் தேடிக்கொள்ளும் சக்தி பெற்ற பின்னரே கலியாணம் செய்து கொள்ள வேண்டுமென உறுதி கொண்டிருந்தார். தம திரத்தக் கலப்புடைய இடத்திலேயே சம்மந்தஞ் செய்வதினும் உத்தம மில்லையென வெண்ணியிருந்த தந்தை தம் மைத்துனரது பெண்ணையே மருமகளாகக் கொள்ளக் கருதியிருந்தார். கல்வி, நாகரிகங்களின் வாசனையறியா அப்பெண் அழகிலுங் குறைந்தவள். ஆங்கிலக் கல்வியும், ஆராய்ச்சியும் நன்னாகரிகமும் ஒழுங்கும் பெற்றிருந்த சுகுணபூஷணர் அவளை மணக்க வொவ்வாதது சகஜமே. அவர் சதாரணமாக அடிக்கடி செல்லும் தமது கலாசாலைத் தோழன் குகேசனது 15 வயதுடைய தங்கையாகிய சிறிது ஆங்கிலக் கல்வியும், நல்ல தமிழ்ப் பயிற்சியும், சங்கீத ஞானமும், நாகரிகப் பழக்கங்களும் கட்டழகும் ஒருங்கே யமைந்த தேவகுஞ்சரி மீது அவர் மனஞ் சென்றது. அவளும் அவரிடத்து விருப்பங் காட்டியதோடு அவள் பெற்றோரும் தங்குலத்தவரும் நற்குணவானுமான அவர் விரும்பின் தம் மகளைத்தரத் தயாராயிருந்தனர். சுகுணபூஷணருக்கு பி.ஏ. ஆனர்ஸ் வகுப்பின் பரிக்ஷைக் கின்னும் 2½ மாதங்களே இருந்ததால் மணத்தைப்பற்றி யவர் கவனித்தாரில்லை.

இந்தச் சந்தர்ப்பத்திலேயே தந்தைக்கும் மகனுக்கும் மனச்சங்கடம் ஏற்பட்டது. வாழ்க்கையி லீடுபட்டுச் சுக துக்கங்களை அனுபவிப்பவர் வாலிபரே. அத்தகைய வாழ்க்கைக்கு அவரவ ரிஷ்டப்பட்ட துணையைத் தேர்ந்தெடுத்தலைத் தடுத்துத் தாய்தந்தையர் தமதிஷ்டப்படித் தம் பிள்ளைகட்கு மனைவியரைத் தேடுதல் பொருந்துமோ? தனக்கிஷ்டமில்லாப் பெண்ணைத் தன் தாய் தந்தையரின் பலவந்தத்தால் மணப்பவனுக்குத் தன் மனையாளிடத் துண்மையன்பு எங்ஙனம் உதிக்கும்? அவர்கள் எங்ஙனம் வாழ்க்கை வண்டியை இழுப்பது? இஷ்டப்பட்ட வரனை மணக்குமிடத்திலேயே அன்பும் கற்பும் அதிகமாய் வாசஞ்செய்கின்றன.

பின்னும், ஒருவன் வாழ்க்கையை யறியா முன்னமும், மனைவியைத் தேர்ந்தெடுக்கும் பரு



வமும் குடும்பத்தைத் தாங்கும் சக்தியுமடையா முன்னமும் 'வாழ்க்கைப்பாரம்,' 'சமுசார சாகரம், துக்கம்' எனப் பலவாறு வாழ்க்கைக் கஷ்டங்களைக் கூறி வெறுக்கும் தாய் தந்தையர் ஏன் அவனை அத்தகைய வாழ்க்கையில் புகுத்த வேண்டும்? மணமெனும் விலங்கினை ஏன் வாலிபரது காலில் சிறு வயதிலேயே பூட்டவேண்டும்?

அன்புமிக்க தாய் தந்தையரே இங்ஙனஞ் செய்கின்றனர். இதற்குக் காரணம் மதியீனமே. அந்தோ! அறிவையும் அன்பையும் நான்முகன் ஒருங்கே படைத்திலன்கொல். பாட்டன் பாட்டியர் இறக்குமுன் பேரன் பேத்தியர் மணத்தைக் கண்குளிரக் காணவேண்டுமென்று பால் மணமாறு வாயுடைய பசும்பாலகர்க்கும் மணமுடிக்கின்றனர். இந்த மடமைக்கு அளவேது? சிறியார் மணம், நன்கு பழுத்து 'இப்பவோ, பின்னையோ, சற்று நேரத்திலோ' படும் மரங்களாகிய கிழங்களுடைய விளையாட்டுக் கருவியா? அப்படித்தான் அவர்கள் எத்தனை நாட்கள் களிப்பார்கள்?

இளமணத்தின் கெடுதிகள் எட்டிலடங்கா. தங்களுக்கே பிறரது உபசாரம் அவசியமான காலத்தில் மாமியரில்ல மேகும் குழந்தைகள் பிறர்க்குபசாரம் செய்யவேண்டி யிருக்கிறது. அங்கோ நரக வேதனைதான். கால் நீட்டி உட்காரலாகாது; உயரமான இடத்தில் உட்காரலாகாது. வேளை தவறினும் ஆடவருக்குப் பின்னே உண்ணவேண்டும். மாமியரோ, தாங்கள் தங்கள் மாமியரிடம் பட்டவற்றை மறந்து தங்கள் மருமகள்மார் உயிரை வதைக்கின்றனர்; அவர்கள்மீது குற்றங் கண்டு பிடிக்கும் கருவிகளா யிருக்கின்றனர். இங்ஙனமாயின் பெண்களுக்கேன் மாமியாரில்லத்தின்மீது வெறுப்புத் தோன்றாது? அவர்கள் தாய்தந்தையரிடம் செல்வாக்குப் பெற்று அடைந்தது பல நன்மைகள்; கேட்டது பல அன்பு மொழிகள். மாமியர் வீட்டிலோ கேட்பதும் கடுமொழி, அடைவதுங் கெடுதியே.

இன்னும் 2, 3 வயதுள்ள விதவைகள் ஆயிரக்கணக்காக இருப்பது இளமணத்தாலல்லவா? அவர்கள் கதியைச் சரியாய்க் கூறவும் மனம் பதறும். அதனைக் கேட்டால் கன்மலையும் பனிக்கட்டியென உருகும். அவ்வயதிலிருந்தே பார்ப்பனராயின் மொட்டையடித்து விடுகிறார்கள். சாதாரணமாகப் பொட்டிடலாகாது; மலர் சூடலாகாது; ஆபரண மணியலாகாது;— ஏன் அனைத்தையும் கூற வேண்டும்? இவர்கள் பிறந்தது முதல் தாய் தந்தைய ரல்லது மாமன் மாமியரிடமிருந்து தப்பி வான் புகுமளவும், உலகத்தில் நடைபிணங்களாகவே இருக்கநேருகிறது. ஒன்று மறியாத இத்தகைய குழந்தைகட்குத் தக்க பருவத்தே மறுமணஞ் செய்வித்தாலென்? தனது கணவன் முகத்தையு மறியாத பெண்ணின் கற்பை மறுமணம் எங்ஙனங் கெடுக்கும்? இத்தகைய பெண்களை வீட்டிலடைத்து வீண் கட்டுப்பாடுகள் செய்து திலகவதியார்களாக்கக் கருதும் பெற்றோர் எந்த விதத்திலும் அவர்களது கற்பைக் காப்போராக மாட்டார். வெளிக்கட்டுப் பாடுகள் செய்யுமிவர்கள் அவர்களது சிந்தனையையும் சித்தத்தையும் கட்டுப் படுத்த முடியுமோ? அவர்களது மனம் படும் பாட்டை யாரே அறிவர்? இல்லறமாகிய நல்லறத்தின் வாசனையையேனும் அவர்கள் முகர்ந்தார்களில்லையே. பெற்றோர் அல்லது கொண்டார் என்ன செய்தால் தான் அவர்கள் மனம் திருப்தியுறும்? அவர்களைக் கண்டு பெற்றோரும் வயறெரிய வேண்டியிருக்கிறதே. வீட்டிலடைத்து வருத்தினால் அத்தகைய பெண்கள் கட்டை உடைத்துக் கொண்டு செல்வ ரென்பது திண்ணம். அதனால் அவர்கள்மீது குற்றஞ் சாட்டுவது மடமையே. அவர்களை வருத்தாது அவர்க்கிசைந்த வரனைத் தேடி மறுமணமுடிப்பின் அவர்கள் கற்பினுருவங்களாய்த் திகழ்வர். பின்னும், குருட்டு நம்பிக்கையால் இரத்தக் கலப்புள்ள இடத்திலேயே சம்பந்தம் செய்வது குறுகிய நோக்கம் முதலியவற்றை வளர்ப்பதோடு, விசாலமான அறிவு, பரந்த நோக்கம், நல்லழகு முதலியவற்றிற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது. ஒரே ஜாதியிலேயேயுள்ள பல பிரிவுகளில் அவ்வப் பிரிவுக்குள்ளேயே சம்பந்தம் செய்வது இதற்கடுத்தபடியி லிருக்கிறது. போக்கு வரவு வசதிகளற்ற காலத்தில் தூரம் முதலியவற்றால் உண்டான பிரிவுகளை நிமிஷத்துக்குப் பல மைல்கள் தூரம் செல்லக் கூடிய இக்காலத்திலும் மீறிச்செல்ல ஆராய்ச்சியற்ற மனம் தயங்குகிறது.

இவற்றையெல்லாம் யோசிக்கையில் நமது சுகுணபூஷணர் செய்தது மிகவும் உத்தமமெனப் புலனாம். தமது தந்தை இஷ்டம் கெடுமென்பது பற்றித் தமக்கிஷ்டமில்லாப் பெண்

ணை அவர் மணந்தாரெனின் பிற்காலத்தில் அவருக்குச் சந்தோஷ வாழ்க்கை எங்ஙன மேற்படும்? வாழ்க்கை நடத்த வேண்டியவர் அவரா? அவர் தந்தையா?

சுமார் அரைமணி நேரத்திற்குப்பின் வீட்டினுள்ளிருந்து 36 அல்லது 37 வயதுடைய நற்சில முதலியாரது மனைவியார் அவரிடமணுக, இருவரும் சிறிது நேரம் சம்பாஷித்தனர்.

மனைவி:—என்னங்க; ஏன் கவலை?

கணவன்:—சுகுணபூஷணன் தான் ஒருவன் இருக்கிறானே.

மனைவி:—அவனாலா கவலை? அவன் கெட்டவனல்லவே.

கணவன்:—நல்லவன் தான். இப்பொழுது அவன் மண்டையில் அந்தக் கோணை எழுத்துக் கொஞ்சம் ஏறிவிடவில்லையா? இப்பொழுது அவன் முன் சுகுணபூஷணனாகவா இருக்கிறான்?

மனைவி:—ஐயோ, இப்பொழுது மாத்திரமென்ன? என் கண்மணி நல்லவனாயிற்றே ஏன் உங்களுக் கவன்மீது கஷ்டம்?

கணவன்:—உன் தம்பி குருநாதன் பெண்ணை அவனுக்குக் கல்யாணம் செய்துவிடலாமென்று சொன்னேனல்லவா? அது அவனுக்கு ஒப்பவில்லையாம். அப்பெண்ணுக்கு வயது 12 ஆயிற்று. இவனுக்கும் சுமார் 20 ஆகிறது. ஏதோ இந்தத் தைமாதத்திலேயே சந்தோஷமாக நமது இரத்தக்கலப்புள்ள இடத்திலேயே முடித்துவிடலாமென எண்ணினேன். அப்பெண்ணும் அடக்கமாக இருக்கும். நான் இப்படி எண்ணினால் அவன் அதைத்தான் மறுக்கிறான். இன்னும் பரிக்ஷைக்கு இரண்டரை மாதமிருக்கிறதாம். அதற்குப் பின்னுங்கூட ஏதோ வருவாய் தேடிக்கொள்ளும் வரையில் கல்யாண சமாசாரமே வேண்டாமென்கிறான் அப்பெண்ணும் அவனுக்குப் பிடிக்கவில்லையாம். அவன் எல்லாவற்றிலும் மாறிவிட்டான்: கோட்டாம், ஜிஜாராம், பூட்சாம், கிராப்பாம், மீசையாம். என்னக் கலிகாலம்! அப்பன் வார்த்தை குப்பையிலே போகுங் காலந்தானே.

மனைவி:—நமது மகனைப் பற்றி அப்படிக் கூறுதீர். எனக்கும் தம்பி பெண்ணைத் தான் நம் சுகுணபூஷணனுக்குக் கொள்ள வேண்டுமென்று அவா. வயதைப்பற்றி என்ன? உங்களுக்கு 18 வயதிலும் எனக்கு 15 வயதிலும் கல்யாணமாகவில்லையா? சிறுபோதிலேயே விவாகம் செய்தால்தான் அழகாக இருக்கும். நீங்கள் கவலைப்படவேண்டாம். நான் அவனிடம் சொல்லுகிறேன்.

கணவன்:—நீ சொன்னாலும் சரி; உன் பாட்டன் சொன்னாலும் சரி. அவன்தான் பிடிவாதக்காரனாயிற்றே.

இவ்வாறு பேசியிருந்து பின் இருவரும் வீட்டிற்குள் சென்றனர். அவர்களுக்கு வயதைப்பற்றியும் நாகரீக நடத்தைகளைப் பற்றியும் கவலையில்லை. பிள்ளை வைதீகப்பிச்சாயிருந்தால் நல்லவன். மருமகள் அடங்கி, மாமியாருக்கு அடிமையாகி, மாமனாருக்குப் பணியாளாகிச் சட்டிச் சுரண்டினால் நல்லவள். கல்வியும் வேண்டாம், செல்வமும் வேண்டாம். மருமகளென்றால் பரியமென்னும் விலை கொடுத்து, ஆபரணமென்னும் மாலைகள் போட்டு, தாலியென்னும் தும்பாற்கட்டி, வாங்கிவரும் மாடல்லவோ!! மாட்டுப்பெண் என்பது இந்த அர்த்தத்திலும் பொருத்தமாகத்தானிருக்கிறது உலகமே இப்படித்தானிருக்கிறது. சுகுணபூஷணரது பெற்றோரும் அப்பழைய உலகத்து மனிதரயன்றோ? அவர்களது சம்பாஷணையை மறைவில் நின்று கேட்டிருந்த சுகுணபூஷணர் சற்புத்திரராதலால் தாய் தந்தையருக்குக் கஷ்டமுண்டாக்கியதற்காக வருந்தினார்; பின்தேறினார். எதற்கும் அசையாது தம் உறுதியை நிறைவேற்றத் தீர்மானமும் கொண்டார்.

மூன்று நாட்கள் சென்றன. நான்காம் நாளிரவு புகைவண்டியேறி ஈரோட்டை அடைந்தார். அவர் ஈரோடு சென்றதின் காரணம் அவரது தொல்சீர்குல மகாநாடே. கல்வியும், செல்வமும், நல்லறிவும், குலாபிமானமும், பரோபகாரமும், சீர்திருத்தமும் ஒருங்கே பெற்ற அவர் இவைகளெல்லாவற்றையும் பெருக்குவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுழைக்கும் நங்குலத் தலைச்சங்கத்தையும் அதன் பிரயாசையாற் கூடிய மகாநாட்டையும் மறப்பாரா? ஈரோடு மகாநாட்டில் சுகுணபூஷணர் தலைவர்களையும் பெரியோரையும் கண்டு வார்த்தையாடியும், உபந்நியாசங்களால் தமது செவிக்கு விருந்தளித்தும் இரண்டு நாட்களைக் களிப்புடன் கழித்தார்.



மூன்றாம்நாள் (தை 9-ந்தேதி) புகைவண்டித் தொடர் சுகுணபூஷணரைக் குகக்குடியிற் சேர்த்தது. மறுநாள் பகல் 12-மணிக்குப் போஜனசாலைக்குச் சென்றார். அங்குத் தமது தந்தையைக் கண்டார். நற்சில முதலியாரது முகக்குறி சுகுணபூஷணரை ஆச்சரியப்படுத்தியது. அவரது முகத்தில் சிலநாட்களாகக் குடிகொண்டிருந்த கவலை பறந்துவிட்டது. 'நமது மகன் மிகச்சிறந்தவன்' என்னும் எண்ணமாகிய சூரியன்தான் அவரது முகத்தாமரையை மலரச்செய்தது. உடனே முதலியார் தமது மகனையணுகினார்; தமதிருகைகளாலும் அன்போடு மார்புறத் தழுவினார். "என் கண்ணே, நீ எனக்கு அருமையான மகனே. உன்னைப் பெற்றதால் நான் பெரும் பாக்கியத்தையே பெற்றேன். உன்னை மகனாகப் பெறுதற்கு நான் என்னோற்றேன் கொல்? நீ புவையத்து முந்தியிருப்பாயென்பதில் சந்தேகமேயில்லை. உன்னை நான் வீணில் ஏசினேன்" என்று கண்களில் ஆனந்தபாஷ்பம் பொழியக் கூறித் தமது அறிவான மகனை வாழ்த்தினார். சுகுணபூஷணர் ஒன்றும் தோன்றாது திகைத்தார். "அப்பா, தங்களது மனம் திடீரென மாறியது என்ன காரணத்தலோ அறியேன். தாங்கள்தான் விளக்கவேண்டும். தங்களது மனத்தை நோகச்செய்த என்னைத் தாங்கள் தயைகூர்ந்து மன்னிக்கவேண்டுகிறேன்." என்று அன்பின் பிம்பமென நின்று கூறினார்.

பின்பிருவருக்கும் கீழ்வரும் சம்பாஷணை நடந்தது:

தந்தை—தொன்மையுஞ் சீரும் வாய்ந்த நங்குல மகாநாடு சென்ற 7, 8 தேதிகளில் ஈரோட்டில் நடந்ததை நீ அறிவையோ?

மகன்:—அப்பா, அறிவேன். நானுமதற்குச் சென்றிருந்தேன். தாங்களென்னிடத்து மனக்கஷ்டங்கொண்டு பேசாதிருந்ததால் நான் தங்களிடம் விடைபெற அஞ்சினேன்.

தந்தை:—நீ சென்றதைப்பற்றி மிகவும் சந்தோஷம். நானும் அதைக் கண்டுகளிக்கும் பாக்கியம் பெற்றேன். நமக்கு மனச் சங்கடமில்லாதிருந்திருப்பின் நாமிருவரும் ஒன்றாய்ச்சென்று களித்திருக்கலாம். நான் உன்மீது கொண்டிருந்த வெறுப்பினை நமது மகாநாடே மாய்த்தது.

மகன்:—அப்பா, உண்மையே. அந்தச் செங்குந்த நகர்க் காட்சியே கவலையையோட்டும். தங்களுக் கென்மீதிருந்த கவலையும் கஷ்டமும் எப்படி ஒழிந்தன?

தந்தை:—மகாநாட்டிலேயே என்மனம் மாறிவிட்டது. திருவாளர் முத்தையா முதலியாரவர்களாகிய நங்குல மகாத்மா அவர்களது முடிவுரையை நீ கேட்டிருப்பாய். அதனுடைய சக்தியை என்னென்று கூறுவது. நிச்சப்தமான இரவில் அவரது நல்லுபதேசம் என்மனத்தில் உருக்கிய ஈயத்தில் பட்ட பொருள்போல் பதிந்தது. ஈயம்இப்பொழுது ஆறிக் கெட்டிப்பட்டுவிட்டது. அவரது மெய்ஞ்ஞான உபதேசங்களை நான் என்றும் மறவேன். அதுவே என்மனதை மாற்றியது; மாண்டு கிடந்த எனது அன்பை உனக்கு மீட்டுத் தந்தது. அவரது பொன்மொழிகள் இன்னும் பலரது மனங்களையும் மாற்றியிருக்குமென்பதிற் சந்தேகமே இல்லை.

மீசை, க்ஷௌரம், உடை இவைகளைப் பற்றியும், பொருளற்ற, பிரயோஜனமற்ற மூடப்பழக்கங்களைப்பற்றியும் வீணில் மண்டையை உடைத்துக்கொள்வது கூடாதென்றும், வாலிபர்களே முன்னேற்ற ஏணியில் ஏறுபவர்களென்றும், அவர்கள்பக்கமே இறைவனிருக்கிறாரென்றும், அவர்களை என்னைப் போன்ற வயோதிகர்கள் தடுப்பது பெரும்பாபமென்றும், அது கடவுள் செயலைத் தடுத்தலென்றும், வாலிபர்கள் மூடப்பழக்கங்களாகிய களைகளைப்பிடுங்கி முன்னேற்ற வயலில் ஆராய்ச்சி விதையை நடுகிறார்களென்றும், அதுவே நல்லறிவாம் பழத்தை நல்குமென்றும், இன்னும் தங்கத்தின் தகைமையான போற்றத்தக்க பல விஷயங்களையும் கூறினார். அதனாலேயே நான் மூடப்பழக்கங்களையும், வீண் வைதீகத்தையும், என் கண்ணே! உன்னை வெறுப்பதையும் ஈரோட்டிலேயே விட்டுவிட்டேன். மணவிஷயத்தைப் பற்றியும் அவர் உன் பக்கமே சார்ந்தார். வாழ்க்கைத் துணைவியை அவரவர் தேடுதலே சாலச்சிறந்ததென்றார். இளமனத்தின் இன்னல்களை எடுத்துரைத்தார். என் தீர்மானம் மடிந்தது. இனி நீ உனக்குத் தக்க பெண்ணைத்தேடி நீ இஷ்டப்பட்டபோது மணந்து கொண்டு கடவுளருளைப் பெற்றுச் சுகமாக வாழ்.

மகன்:—தந்தையே, தாங்கள் என்மீது காட்டும் அன்புக் களவேயில்லை. தங்கள் வாழ்த்தைப் பெற்ற எனக்குக் குறையேயில்லை. நமது மகாநாட்டின் நற்பயன் இவ்வளவு சீக்கிரமே

தெரிகிறது. நமக்குள்ளேயே இவ்வளவு நன்மை. உலகமனைத்திற்கும் பெரும் பயனையளிக்குமென்பதில் ஐயமோ? நமது தலைவர்கட்கு நாம் எவ்வாறு நன்றி செலுத்துவது? அவர்கள் முற்பட்டுள்ள வழியில் நாமும் கூடிய வரையில் ஈடுபட்டு நமது குலத்திற்குப் பாடுபடுதலையே அவர்கள் தக்க நன்றியாகப் பாராட்டுவர். நிற்க, எனது தோழனாகிய குகேசனை நீர் அறிவீரன்றோ? அவனது தங்கை தேவகுஞ்சரியையே நான் மணக்கத் தீர்மானஞ்செய்துள்ளேன். அவனது தாய் தந்தையரும் அதற்கிசைவரென வெண்ணுகிறேன். தங்கள் சித்தம் எப்படியோ அறிகிலேன்.

**தந்தை** :—அப்படியா? தேவகுஞ்சரி நல்லபெண்தான் எல்லா பாக்கியங்களும் வாய்ந்தவள்; நற்குணவதி. 'இரத்தக் கலப்பிலேயே சம்பந்தம் செய்வோம்' என்று நான் எண்ணியிருந்ததே எனது கவனத்தை அவளைப்பற்றிச் செல்லவொட்டாது தடுத்தது. அவள் பெற்றோரும் நல்லவர்களே. உன் இஷ்டப்படியே முருகனருளோடு நீ அவளையே மணந்து கொள். உன் தங்கைக்கும் நீ இஷ்டப்பட்ட வயதில் உனக்குப் பிடிக்கும் வரனைத்தேடி மணஞ்செய்துவை.

**மகன்** :—அப்பா எனது தங்கைக்குக் குகேசன் உகந்த வானவான். அவன் நற்குணங்களை நீரறிந்தே இருக்கின்றீர். பெண்களுக்கும் சுயேச்சை அவசியமாதலால், அவனை மணக்கத் தங்கை குணவதிக்கு இஷ்டமாயின் இருவருக்கும் நல்ல பொருத்தமே. இரண்டு கல்யாணங்களையும் இன்னும் இரண்டொரு வருஷத்திற்குள் ஒருங்கே முடிக்கலாம்.

**தந்தை** :—அப்படியே செய்.

இவர்களது யோசனைக்குத் தாயும் ஒத்துக்கொண்டாள். சென்ற சில நாட்களாகத் தனித்துண்ட தந்தையும் மகனும் அன்புடன் வார்த்தையாடிக் கொண்டு ஒன்றாக உணவு அருந்தினர். பின்னர் சுகுணபூஷணர் தமது தந்தையினிஷ்டத்தை யறிந்து அவரோடு கலந்து அவருக்கும் அவரது தந்தைக்கு மிருந்த மனச்சங்கடத்தை மகாநாடு நீக்கிஒற்றுமையை யுண்டாக்கியதை முன்னிட்டுத் தலைச் சங்கத்திற்கு ஏழை மாணவருதவிக்காக 1,00 ரூபாய்கள் நன்கொடை யனுப்பினர். பொருளாதாரமற்ற மாணவர்க்கு அவர் செய்த நன்றிகளில் இது முதலல்ல. இன்னும் தம் குலத்திற்காகத் தாம் நன்கு உழைக்க வேண்டுமென அவர் கொண்டிருந்த விரதத்தைப் பலப்படுத்திக்கொண்டார், தந்தையும் மகனும் ஒற்றுமையோடு குலத்தொண்டில் ஈடுபட்டனர். சுகுணபூஷணர் மனமகிழ்ச்சியால் ஆர்வமிகுதியுடன் தாம் முன்னரே நன்கு படித்து வைத்திருந்த பாடங்களைப் பலமுறை படித்துத் தெளிவான மனத்துடன் பரிக்ஷைக்குச் சென்று, கடவுளைத் தொழுது, அவரது கிருபையால் சரியாக விடைகளை எழுதிச் சந்தோஷத்தோடு தேர்ச்சியை எதிர்பார்த்துக் கொண்டுள்ளார். தமது விடுமுறை நாட்களில் பலவிடங்களுக்குச் சென்று தன்னாலியன்றவரை பிரசாரம் முதலிய வழிகளில் செங்குந்த குலத்தைச் சீர்தூக்க எண்ணங்கொண்டுள்ளார். அவரது தந்தையும் தமது தோழரிடத்தெல்லாம் மகாநாட்டைப்பற்றியும், அதன் தீவிரப் பயனைப்பற்றியும், மூடப்பழக்கங்கள் மடியவேண்டியதி னவசியத்தைப் பற்றியும் அடிக்கடி கூறுவார். செங்குந்த மகாநாட்டின் நற்பயனாகிய வெள்ளம் பெருகி, அதனை நாம் பெருமிதமாகப் பருகி, நன்மை துய்த்து, ஓங்கிக்குமாறு அறுமுகப் பெருமானுர் அருள் சுரப்பாராக!

ஜே தங்கவேலு,
இராஜதானிக் கல்லூரி சென்னை.

---

**திருவாலங்காடு கார்க்கோடக முனிவர் மடாலயம்.**

ஆன்மகோடிகளனைத்தும் பிழைக்கும் நிமித்தம் காளியோடாடிய திருவாலங்காடு என்னும் திவ்ய க்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளிய ஸ்ரீ நடராஜப் பெருமான் சந்நிதானத்தில் தென்னண்டை மாடவீதி தெற்குவாடையில் பூர்வீகமாகச் செங்குந்த பரம்பரை கார்க்கோடக முனிவர் மடம் என வழங்கிவந்த பழைய மடத்தைத் தன் சுவாதீனத்தில் வைத்திருந்த கார்வேட் நகரம் சமஸ்தானம் ம-ா-ா-ஸ்ரீ, ராஜா அவர்களிடம் எங்கள் பரம்பரை சுதந்தரத்தையெடுத்துக் காட்டி, அவர் இன்பமுடன் கொடுத்த சகல சுதந்தரத்தையும் பெற்றுக்கலமாய் இருக்கும் அம்மடத்தை ஜீர்ணோத்தாரணம் செய்ய அடியேன் முன்வந்து சில புண்ணிய கனதனவான்களின் பொருளுதவியால் கைங்கரியம் நடைபெற்று வருகிறது. இத்திருப்பணியைப் பூர்த்திசெய்ய அதிகபணம் தேவையாயிருப்பதால் இதைக் கண்ணுறும் புண்ணியக் கனதனவான்கள் மானிடர் அடையும் சதுர்வித புருஷார்த்தங்களில் அறமே பெரிது என ஆன்றோர் உரைத்துள்ளாராதலின் தங்கள் தங்களாலியன்ற பொருளுதவி புரிந்து எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமியம்மை சமேதராகிய தில்லை நடராஜப் பெருமான் திருவடிக் கமலங்களுக்கு ஆளாகும்படி பிரார்த்திக்கிறேன்.

அ. ந. முனுசாமி முதலியார்,
சமுத்திராயம்பேட்டை என்கிற
பல்லாவரம் கிராமம்.



## சுகாதாரப் பகுதி

### குடும்ப வைத்தியம்

ஆகார முறையிலேயே வியாதி வராமல் காப்பாற்றிக்கொள்ளும்படியான திருநோக்கங்கொண்டே இறைவனிந்த உலகில் பல தாவரவர்க்க மூலிகைகளை யுண்டாக்கி யிருக்கிறார். அம்முறையை அநுசரிக்காதவர்களுக்கு நோய் வந்தாலும் பல மருந்துகள் செய்வதற்கும் அந்த வகை மூலிகைகளே அவசியமாயிருக்கின்றன. தேகக் கூறுகள் வாத பித்த சிலேத்துமம் என மூன்று விதம். அந்தந்த தேகிகளுக்குரிய பதார்த்தங்க ளின்னின்ன வென்றும் வகுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

அம்முறை கண்டுபயோகிக்கும் வகையில் தவறியபோது அம்மருந்துகள் பலிதமாவதில்லை. மருந்தையோ நூலையோ பொய்யென்றுலகம் அறியாமையை மெய்ப்பிக்கிறது. சரியான முறையில் தேகக் கூறுகள் தெளிந்து கொள்ளுவதற்குரிய சாதனங்களைச் சுதேச வைத்திய உலகத்திற்குச் செய்து கொடுத்து ஆதரிக்கும் கடமையைவிட்டுச் சுதேச வைத்திய முறையில் ஆதாரமில்லை யென்று சொல்வதை நிகர்த்ததாம் புராதன நூல்கள் காலபேத நிகழ்வுகளால் அழிந்து போய் எஞ்சிய நூல்கள் கீழ்ச் சமுத்திரக் கரையிலொன்றாய் அதிலும் உடல் வேறு தலை வேராகவும் கைவேறு கால் வேறாகவும் சிதறுண்டு எண்ணிறைந்த நூல் அச்சுக்கும் வாராமல் அழிந்து ஆதரவற்றுக் கிடப்பது. உலக மக்களை நோயினறிக் காக்கும் கடமையேற்றுக் கொண்டிருக்கிற அரசாங்கம் சுதேச வைத்திய நூல்களைச் சேர்த்து அச்சிட்டு உதவி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க முற்பட வேண்டும்.

வாத சரீரம் பெற்றவர்களுக்குக் குப்பைமேனி, முள்ளை, ஆரை, வேளை, மணத்தக்காளி, முசுமுசுக்கை, அப்பை, மூக்குரட்டை, பசளை, ஆகிய கீரைகள் சமைத்து உணவோடு உண்டுவரில் நல்ல குணமுண்டாம்.

பித்ததேகிகள் புளியாரை, கோவை, முருங்கை, பசளை, பொன்முசுட்டை, அப்பை, பாலை, தூதுளம், சுரை, வல்லாரை, [illegible], மணத்தக்காளி, இவைகளின் கீரைகளைச் சமையல் செய்துபயோகிக்க நல்ல குணம் உண்டாம்.

சிலேத்தும தேகிகளுக்குக் காரை, வரிக்கோவை, கருஞ்செம்பை, புளியாரை, ஆரை, குப்பை மேனி, பொன்னாவரை, குளக்கீரை, பொன்முசுட்டை, உளுத்தங்கீரை காராமணிக்கீரை, நாய்வேளை, பொன்னாங்காணி இவைகளின் கீரைகள் மிக நன்றாம்.

வாததேகிகளுக்குரிய காய்வகை:—கலியாணப்பூஷணி, கத்தரி, வழுதுளம், முருங்கைப் பிஞ்சு, வெள்ளை அவரை, மிதிபாகல், காராக்கருணை, காட்டுக்கருணை ஆகியவையாம்.

இவை தவிர்த்து மற்றவை கூடாதன வென்பது நூல்முகம்.

பித்ததேகிகளுக்கு காய்வகைகள்.—வெள்ளரி பார்க்காய், புடலை, அவரை, பீர்க்கு, ஆற்றுமுள்ளி, முருங்கை, கத்தரி, வாழை, கிளா இவைகளாம். இவையன்றி மற்றவை புசிக்கில் பல வியாதிகளையுண்டாக்கும்; முறையேயிதை யனுசரித்தால் நோய் வராது என்பது நூல்முகம்.

சிலேத்தும தேகிகளுக்குரிய காய் வகைகளாவன:—அத்திக்காய், மிதிபாகற்காய், கொம்பு பாகற்காய், கத்தரிக்காய், அவரை, கிளாக்காய், பயித்தங்காய், கண்டங்கத்திரிக்காய், கருணைக்கிழங்கு, வாழைத்தண்டு, வாழைப்பூ, முள்ளங்கி, பீர்க்கங்காய், பூஷணிக்காய் இவை மட்டுமாம். இவையன்றி மற்றவை புசித்தால் வியாதியாம். ஆகார வேறுபாடுகளும் வியாதியுண்டாகும் முக்கிய காரணங்களிலொன்றென்பது வெள்ளிடை.

ஜீ- கண்ணுசாமி,
வைத்தியர், திருவாரூர்.

---

**செங்குந்த மித்திரன் வாழ்த்துப்பாக்கள்.**

நாலாபக்கங்களிலுமுள்ள அநேக குலாபிமானிகளிட மிருந்து வாழ்த்துக் கவிகள் வந்திருக்கிறபடியால் அவற்றை நமது மித்திரனில் பிரசுரிக்க இயலாமைக்கு மிகவும் வருந்துகிறோம். அவைகளைப் பாடியனுப்பிய அன்பர்கட்கு எமது வந்தனம் உரித்தாகுக. —(ப-ர்).

# சென்னைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் அங்கங்களாகிய கிளைச்சங்கங்களின் மாதிரிச் சட்ட திட்டங்கள்.

ஒரு சமூகம் அல்லது ஒரு நாடு மேம்பட்டு விளங்கவேண்டுமாயின் அச்சமூகத்தை அல்லது அந்நாட்டைச் சார்ந்த ஜனங்களது நோக்கம், அதை நிறைவேற்றும் முறைகள் முதலியவை ஒரேமாதிரியாக இருக்கவேண்டியது அத்தியாவசியமாகும். ஆகவே, நமது செங்குந்த சமூகம் முன்னேற்றமடைந்து சிறப்புற்று வாழவேண்டுமாயின் தென்னிந்தியாவிலுள்ள எல்லா ஜில்லாக்களிலும், இரங்கூன் இலங்கை டிரான்ஸ்வால் முதலிய வெளிநாடுகளிலும் நிறுவப்பெற்று, நம் சமூக முன்னேற்றத்திற்காக உழைத்துக்கொண்டு நமது தலைச்சங்கத்திற்கு அங்கங்களாகச் சேர்ந்துள்ள ஒவ்வொரு செங்குந்தர் சங்கமும் ஒரே தன்மையான நோக்கத்தையும், சாதனங்களையும், பிறவற்றையும் மேற்கொள்ள வேண்டியது மிகவும் அத்தியாவசியமெனப் பெறப்படுகிறது. இக்கருத்துக் கொண்டே, பொதுவாய் எல்லாக் கிளைச் சங்கங்களுக்கும் பொருந்துமாறு ஒரு மாதிரித் திட்டம் தயாரித்து நமது மித்திரன் மூலம் பிரசுரிக்கும்படி எம்மைப் பலதரம் பல கிளைச் சங்கத்தார் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அன்றியும் இதுவரையில் நிறுவப்பெற்றுள்ள கிளைச்சங்கங்கள் யாவும் ஒரே நோக்கத்தையுடையனவாயினும், அச்சங்கங்களுள் சில தத்தமக்குத் தோன்றிய சாதனங்களைக் கைக்கொண்டு ஒழுகி வருகின்றன. ஆகையால் எல்லாக் கிளைச் சங்கங்களுக்கும் உதவுமாறு கீழ்க்கண்ட மாதிரித் திட்டம் தயாரிக்கப் பெற்றுள்ளது. அவ்வச் சங்கங்களுக்கு அவசியமான பிறவற்றையும் இதனுடன் சேர்த்துக் கொள்ளலாம்.

## மாதிரித் திட்டம்.

பெயர் :—இச்சங்கம்............(ஊர் பெயர்) செங்குந்தர் சங்கம்..............(ஊர் பெயர்) அல்லது வாலிபர் சங்கம் என வழங்கப்பெறும்.

நோக்கம் :—சென்னையிலுள்ள தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் அங்கமாகச் சேர்ந்து அச்சங்கத்தின் சட்டதிட்டங்களுக்கிணங்கச் செங்குந்த சமூக முன்னேற்றதிற்காக உழைத்துவர வேண்டுமென்பதே இச்சங்கத்தின் நோக்கமாகும்.

சாதனங்கள் :—இந்நோக்கத்தைச் சாதிக்கும் சாதனங்களாவன :—

(1) (உள்ளூர் சௌகரியப்படி) வாரத்திற்கு, பக்ஷத்துக்கு அல்லது மாதத்திற்கு ஒரு முறை செங்குந்தர் பொதுக்கூட்டங்கள் கூட்டி நமது சமூகப் பிற்போக்கிற்குக் காரணமாயுள்ளவற்றை நீக்கி, முன்னேற்றத்திற்கு அனுகூலமான சாதனங்களை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வர ஏற்பாடு செய்தல் ; பல அறிஞர்களைக் கொண்டு உபந்யாசங்கள் செய்வித்துப் பொதுஜனங்களுக்கு அறிவுச்சுடர் கொளுத்தல்.

(2) கல்வி அபிவிருத்தியின் பொருட்டு இலவசப் பள்ளிக்கூடங்கள் இருக்கும் இடங்களில் அவற்றிற்கு நம் குல மக்களைக் கட்டாயப்படுத்தி அனுப்பல், இல்லாத இடங்களில் கல்விச் சாலைகள் ஸ்தாபித்து எல்லாச் செங்குந்தப் பிள்ளைகளையும், பெண்களையும் கட்டாயம் படிக்கச் செய்வதோடு வயது முதிர்ந்தவர்கள் படிப்பதற்காக இராப்பள்ளிக்கூடங்கள் அமைத்தல்.

(3) பொது விஷயங்களையும், உலகானுபவ, ராஜீய விஷயங்களையும் நம்மவர் நன்குணர வாசகசாலைகள் அமைத்துத் தினசரி வாரப் பத்திரிகைகள் தருவித்து உபகரித்தல். புத்தக நிலையம் ஒன்று திறந்து பல அரிய புத்தகங்களை அனைவரும் படிக்க உதவுதல்.

(4) செங்குந்தத் தொண்டர் படை ஒன்று சேர்த்துச் சுகாதாரம், மதுமாம்ச விலக்கு, நல்லொழுக்கம், தெய்வபக்தி, சமூக சேவை முதலியவற்றின் அவசியத்தைக் குறித்து உபந்யாசங்கள் மூலமாகவும், புத்தகம் பத்திரிகை மூலமாகவும் தொண்டர்களுக்குக் கற்பித்து, அவர்களைக்கொண்டு உள்ளூரிலும், கூடுமான வரையில் வெளியூர்களிலும் விடுமுறை காலங்களிலும், ஓய்வு நாட்களிலும், மேற்கூறிய விஷயங்களைக் குறித்துப் பிரசாரம் செய்விப்பதன்றி இதமான வார்த்தைகளால் வற்புறுத்தி நம்மினத்தவரை உயரிய ஒழுக்கங்களைக் கைக்கொள்ளச் செய்வித்தல்.



(5) செங்குந்த இளைஞர்கள் தேகாப்பியாசம் செய்ய ஏற்பாடுகள் செய்து அவர்களை நமது மகாநாடுகளிலும், உற்சவங்களிலும் முறையே சமூக சேவையும் பொதுஜனத் தொண்டும் செய்யத் தயாரித்தல்.

(6) செங்குந்தர் சங்கங்களில்லாத ஊர்களில் ஏற்படுத்தி, நமது 'மித்திர'னை ஒவ்வொரு செங்குந்தரும் தருவித்து வாசிக்கச் செய்து தலைச் சங்கப் பிரசாரகர்களுக்கு உதவியாயிருந்து சமூகத் தொண்டாற்ற முயலுதல்.

(7) நமது சமூக முன்னேற்றத்திற்குப் பெருந்தடையாயிருக்கிற கக்ஷிப் பிரதிகக்ஷிகளை அடியோடு ஒழித்து நமக்குள் ஒற்றுமையும் சகோதரப் பான்மையும் உண்டாக்கல்.

(8) சமூக முன்னேற்றத்திற்கான மற்றெல்லா விஷயங்களிலும் தலைச் சங்கத்தோடு ஒற்றுழைத்தல்.

### தலைச்சங்கத்தின் அங்கமாதல்.

நமது சமூக முன்னேற்றத்திற்காக உழைத்து வரும் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் நோக்கத்திற்கும், கொள்கைக்கும், சட்டதிட்டங்களுக்கும் உடன்பட்டுத் தலைச் சங்கத்திற்கு ரூபாய்........வருஷா வருஷம் கட்டணமாகச் செலுத்தி வரவேண்டும்.

### உத்தியோகஸ்தர்கள்

தலைவர் ஒருவர், உபதலைவர் ஒருவர் அல்லது இருவர் (சௌகரியப்படி), காரியதரிசி ஒருவர் அல்லது இருவர், (அவசியமாயின்) உப காரியதரிசி ஒருவர், பொக்கிஷதார் ஒருவர், இதர சில நிருவாக சபை அங்கத்தினர் சங்கத்தின் நிர்வாகிகள் ஆவர்.

### உத்தியோகஸ்தர்களின் வேலை.

தலைவர் :—பொதுக் கூட்டங்களுக்கும், நிர்வாக சபைக் கூட்டங்களுக்கும் தலைமை வகிப்பதன்றிப் பொதுவாய்ச் சங்கத்தின் வேலைகளை ஒழுங்குபெற நடத்தி வருதல்.

உப தலைவர் :—தலைவர் இல்லாத சமயங்களில் தலைவர் வேலையைச் செய்து வரவேண்டும்.

காரியதரிசி :—கடிதப்போக்கு வரத்துக்களைக் கவனித்தல் ; பொதுக் கூட்டங்களையும், நிர்வாக சபைக்கூட்டங்களையும் கூட்டுதல் ; கூட்ட நடவடிக்கைகளைப் பதிவு செய்து வைத்தல் ; சங்க சம்பந்தமான எல்லாத் தஸ்தாவேஜுகளையும் பாதுகாத்தல் ; பொதுவாய்ச் சங்க சம்பந்தமான எல்லாவற்றிற்கும் உத்திரவாதியாயிருத்தல் முதலியனவாம்.

உதவிக் காரியதரிசி :—சங்க சம்பந்தமான எல்லாக் காரியங்களையும் காரியதரிசிக்கு உதவியாயிருந்து செய்தல்.

பொக்கிஷதார் :—வரவு செலவு கணக்கு வைத்தல், செலவிற்குப் பணம் பட்டுவாடா செய்தல் முதலியன.

இந்த நிர்வாக சபை மாதம் ஒரு முறை கூடி வரவு செலவு கணக்குப் பரிசோதனை செய்வதன்றிச் சங்க சம்பந்தமான எல்லா விஷயங்களுக்கும் இச்சங்கப் பொதுக் கூட்டத்திற்கு உத்திரவாதியாயிருக்கும்.

### மகாநாடு.

வருஷா வருஷம் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தினால் கூட்டப் பெறும் மகாநாடுகளுக்கு நமது சமூக முன்னேற்றத்திற்குத் தேவையான தீர்மானங்களைப் பொதுக் கூட்டத்தில் தீர்மானித்து அனுப்பி வைப்பதன்றி அநேக டெலிகேட்டுகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புதல் வேண்டும். தீர்மானங்களையும் டெலிகேட்டுகளின் எண்ணையும் பெயர்களையும் ஒரு மாதத்திற்கு முன்னதாகவே தலைச் சங்கத்திற்கும் மகாநாட்டு வரவேற்புக் கமிட்டியாருக்கும் தெரிவிக்க வேண்டும்.

இச்சங்கம் அடுத்த மகாநாட்டை இவ்வூரில் நடத்தப் பிரியப்படுமாயின், இச்சில்லாவிலுள்ள மற்ற கிளைச் சங்கங்களையும் கலந்து முந்திய மகாநாட்டிலேயே வரவேற்க வேண்டும்.

மகாநாடு கூடி முடிந்த ஒரு மாதத்திற்குள் மகாநாட்டின் வரவு செலவு கணக்குக்களைப் பொதுவாய் எல்லாப் பத்திரிகைகளிலும், சிறப்பாய் நமது மித்திரனிலும் பிரசுரிக்க வேண்டும்.

### தலைச்சங்கப் பொதுக்கூட்டம்.

இக் கிளைச்சங்கம் தலைச்சங்கச் சட்டப்படி இரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து மகாநாடு முடிந்த மறுநாளிலும் இதர சமயங்களிலும் கூடும் தலைச்சங்கப் பொதுக்கூட்டதிற்கு அனுப்ப வேண்டும்.

குறிப்பு :—இவ்விதிகளோடு அவ்வவ்விடங்கட்கேற்பச் சட்டதிட்டங்களை இன்னும் அதிகப்படுத்திக்கொள்ளலாம்.

தலைச்சங்க நிருவாக சபையினர்.

# செங்குந்தர் கிளர்ச்சி

## தென் ஆபிரிகா.

### திரான்ஸ்வால் செங்குந்தர் சங்கத்தின் அங்கத்தினர்கள்.

சபாநாயகர்:—திரு. S. V. வீரபத்திர முதலியார் அவர்கள்.

கூட்டுக்காரியதரிசிகள்:—திரு. S. பாலசுந்தர முதலியார் அவர்கள், திரு. A. அமிர்தலிங்க முதலியார் அவர்கள்.

பொக்கிஷதாரர்கள்:—திரு. A. சொக்கலிங்க முதலியார் அவர்கள், க. முருகையப்ப முதலியார் அவர்கள், திரு. கொ. ஐயாசாமி முதலியார் அவர்கள்.

மெம்பர்கள்:—திரு. ஆ. பொன்னுசாமி முதலியார் அவர்கள், திரு. S. அரியபுத்திர முதலியார் அவர்கள், திரு. கோ. வீரபத்திர முதலியார் அவர்கள், திரு. A. நாராயணசாமி முதலியார் அவர்கள், திரு. M. துரைசாமி முதலியார் அவர்கள், திரு. ஆ. உ. பொன்னுசாமி முதலியார் அவர்கள், திரு சி. கந்தசுவாமி முதலியார் அவர்கள், திரு A. வெங்கிடாசல முதலியார் அவர்கள், திரு. ஆ. அப்பாசாமி முதலியார் அவர்கள், திரு. ச. ராமு முதலியார் அவர்கள், திரு. ரா. வே. துரைசாமி முதலியார் அவர்கள், திரு. ஆ. சிங்கார முதலியார் அவர்கள், திரு. சாமிநாத முதலியார் என்கிற முத்துவேல் முதலியார் அவர்கள்.

திரான்ஸ்வால் என்பது தென்னாபிரிக்காவில் நெட்டாலுக்கு மேற்கேயுள்ள ஒரு சுயேச்சைபெற்ற குடியேற்றநாடு அது ஆங்கில சாம்ராஜ்ஜியத்தைச் சார்ந்தது. அங்கு அநேக செங்குந்த குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களது குலாபிமானம் அளவு கடந்ததென்றே சொல்லவேண்டும். நமது முயற்சி ஒரு சிறிதுமின்றிய அநேக நண்பர்கள் நமது மித்திரனுக்குச் சந்தா நேயர்களாகச் சேர்ந்திருக்கிறார்கள்.

திரான்ஸ்வால் செங்குந்த சங்கத்தின் நிர்வாகிகளூர் நமது தலைச்சங்கத்துக்குக் கல்விநிதிக்காகப் பொருள் சேகரித்து வருவதையும் கேள்வியுற்றுச் சந்தோஷப்படுகிறோம். திரான்ஸ்வால், நெடால், மோரீச, கோலாலம்பூர், சிங்கப்பூர், கொயாளு முதலிய பல வெளிநாடுகளிலும் சகோதரர்கள், கிளைச்சங்கங்கள் நிறுவி அநேக சந்தாதாரர்களைச் சேர்த்து வைக்கத்தொண்டுழைத்து வருவதோடு நமது கல்விநிதிக்குப் பொருளுதவியும் செய்வார்களென எதிர்பார்க்கிறோம். நம் தாய் நாடாகிய தென்னிந்தியாவில் சென்ற இரண்டு வருஷங்களாக முயற்சி செய்தும் இன்னும் பெரும்பாலான கிராமங்களில் கிளைச்சங்கங்கள் ஸ்தாபிக்காமலும் இருக்கிறார்கள். ஆனால் பல்லாயிர மைல் தூரத்திலுள்ள சகோதரர்கள் நமது முயற்சியின்றியே காட்டிவரும் பேருக்கம் மிகவும் பாராட்டத் தக்கது.

(ப-ர்).

## சேலம் ஜில்லா.

## செங்கற்பட்டு ஜில்லா.

### திருமழிசை செங்குந்த வாலிபர் சங்கம்.

நிகழும் சுக்கிலஹு சித்திரை மாதம் 1௳ திரு. சபாபதி முதலியார் இல்லத்தில் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று. சம்மவரில் பெரும்பாலோர் ஒழுங்கான கல்வி, கடவுள் பக்தி, குலாபிமானம், தேசபக்தி முதலியவற்றில் மிகுதியும் பிற்போக்கடைந்த பொது விவகாரங்களில் சிறிதும் கவலையின்றி இருப்பதை நோக்கிப் பல விஷயங்களிலும் மேன்மையுற முயல வேண்டுமென்ற நோக்கத்தோடு வாலிபர் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப் பெற்றது. அச்சமயம் நிறைவேறிய தீர்மானங்களாவன:—

(1) இச்சங்கத்தின் பெயர் திருமழிசை செங்குந்த வாலிபர் சங்கம் என வழங்கப் பெறவேண்டும்.

(2) செங்குந்த வாலிபர்களைக் கல்வியிலும் கூடிய வரையில் நவீன நெசவுத்தொழில் முறையிலும் மேம்பாடடையச் செய்வதே இச்சங்கத்தின் முக்கிய நோக்கமாகும்.

(3) தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் கிளைச்சங்கமாகிய இச்சங்கம் வருஷம் ஒன்றுக்கு ரூபாய் 5 அதற்குக் கட்டணமாகச் செலுத்திவரவேண்டும்

(4) 'செங்குந்த மித்திரன்,' நவசக்தி, ஆனந்த போதினி முதலிய பத்திரிகைகள் தருவிக்கவேண்டும்.

(5) கீழ்க்கண்டவர்கள் உத்தியோகஸ்தர்களாக நியமிக்கப் பெற்றனர் தலைவர்: திரு. ச. மாணிக்க முதலியார். காரியதரிசி: திரு க. தணிகாசல முதலியார். உதவிக்காரியதரிசி: திரு கை. சம்பந்த முதலியார். பொக்கிஷதாரர்: திரு. ச. சுப்பிரமணிய முதலியார். இதர நிர்வாக சபை அங்கத்தினர்; திருவாளர்கள் பே. சி. குமாரசாமி முதலியார், சி. வி. பொன்னுசாமி முதலியார் : இன்னும் பல தீர்மானங்களும் நிறைவேறின வென்று காரியதரிசி திரு. க. தணிகாசல முதலியார் எழுதுகிறார்.

### செங்குந்தர் மகாஜன சங்கம்.

### அம்மாப்பேட்டை, சேலம்.

இன்று இரவு 9-மணிக்கு இச்சங்கத்தின் ஆதரவில் அம்மாப்பேட்டை ஸ்ரீசுப்பிரமணிய ஸ்வாமி கோவிலில் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று. டை கூட்டத்திற்கு சங்கத்தின் உபதலைவர் ஸ்ரீ S. P. பொன்னுசாமி முதலியார் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். அவ்வமயம் திருவாளர் சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருவனந்தல் காலை சந்திக் கட்டளை மனேஜர் தித்தா ராஜமாணிக்க முதலியார் அவர்கள் 'செங்குந்தரும் துவஜாரோகணமும்' என்ற விஷயமாகப் பேசிய பின்பு அம்மாபேட்டையில் தயார் செய்துவருகின்ற விலை உயர்ந்ததும் நாகரீகமானதுமான சேலம் வெண்பட்டு வேஷ்டிகள் அம்மாபேட்டை ஜரிகை பட்டு புடவைகள் பனாரஸ் புட்டா புடவைகள் என்று பெயர் பெற்றதுமான ஜவுளி தினுசுகளைச் சேலம் பஜாருக்குக் கொண்டுபோய் விற்று வந்த வழக்கத்தை நிறுத்தி அம்மாபேட்டையிலேயே கடைகள் வைத்துக்கொண்டு வியாபாரம் செய்யவேண்டுமென்று ஏற்கனவே சங்கத்தில் நிறைவேற்றியிருந்தபடி பெரியோர்கள் ஒன்றுகூடி ஒப்பந்தப்படி நாளது சித்திரைமீ 1-தேதி (13 4-29) காலை முதல் கொண்டு வியாபாரம் செய்து வருகின்றதனால் சவுரவமும் சிரமம் இன்மையும் ஏற்படும் நன்மையும் பற்றிச் சுயமரியாதையுடன் வாழவிரும்பும் இவ்வூர் வாசிகள் ஒவ்வொருவரும் மேல் கண்ட ஒப்பந்தப்படித் தவறுமல நடந்துகொள்ள வேண்டுமென்றும் சங்கத்தின் காரியதரிசி S. பழனியாண்டி முதலியார் ஸ்ரீ P. R. சோமசுந்தர முதலியார், ஸ்ரீ P. S. வதண்முகமுதலியார் ஸ்ரீ N. மாணிக்கமுதலியார் ஆகியோர் பேசிய பின்பு சங்கத்தலைவர் ஸ்ரீமான் K. மாரிமுத்து முதலியார் அவர்கள் மேல்கண்ட விஷயமாகவும் பேசியதுடன் இவ்வூரிலேயே கடைவைத்து வியாபாரம் செய்யஇயலாத சில்லரைத் தறிகாரர்களிடம் தயாராகும் சரக்குகளை வாங்கிக்கொள்ள கோவாபரேடிவ் சொஸைடி ஏற்படுத்தி அதில் தறிகாரர்கள் உட்பட வியாபாரிகள் வரையில் (ஷேர்) பங்கு எடுத்துக்கொண்டு அதில் கிடைக்கும் லாபத்தை ஈவித்துக்கொடுப்பதென்றும் பேசியதை எல்லோரும் ஒப்புக்கொண்டு அதன்படி நடப்பதென்று தீர்மானித்தனர். பின்பு இன்னும் சில பிரமுகர்களும் பேசியபின்பு அடுத்தவாரக்கூட்டத்தில் வர்த்தகர்கள் சங்கஉத்தியோகஸ்தர்கள் நியமிப்பதென்ற முடிவு செய்யப்பட்டது. திரளான ஜனங்கள் கூடியிருந்தும் இரவு 12-மணி வரையில் கூட்டம் கலையவில்லை. அக்கிராசனர் முடிவுரையானதும் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது எனக் காரியதரிசி S. பழனியாண்டி முதலியார் எழுதுகிறார்.

### செங்குந்தர் குலாபிமானச் சங்கம், வெண்ணைந்தூர்

(29-4-29) சுக்கிலஹு சித்திரைமீ 17௳ அன்று பிற்பகல் 4½-மணிக்குச் செங்குந்தர் குலாபிமானச் சங்கம் சுப்ரமண்யர் கோயிலில் வடகம்பாளையம் திரு. என். வேங்கடரமணன் தலைமையின்கீழ் கூடியது. அவ்வமயம் சில செங்குந்த அறிஞரும் பொது மக்களும் சுமார் 200 ஜனங்கள் வந்து குழுமினார்கள். பக்தி, கைத்தொழில், சுதந்தரவாழ்வு என்னும் விஷயங்களை எ வி. குப்புசாமி, பூ. அ ஷண்முகம், எஸ். ஆர். சின்னுசாமி ஆகியோர் முறையே விரிவாகப்பேசி முடித்தனர். பிறகு சங்கச் சட்டதிட்டங்கள் நிறைவேற்றப்பெற்றன.

#### சங்க அங்கத்தினர்.

சங்கத்தின் வளர்ச்சியை முன்னிட்டு ஆண்டு ஒன்றுக்கு 10 ரூபாய்க்குக் குறையாத சந்தா செலுத்துபவர்கள் இராஜபோஷகராகவும், 5 ரூபாய்க்குக் குறையாத சந்தா செலுத்துபவர்கள் போஷகராகவும் 3 ரூபாய்க்குக்குறைவின்றிச் சந்தா கொடுப்பவர்கள் அங்கத்தினராகவும் 1 ரூபாய்க்குக் குறையாது பண உதவி புரிபவர்கள் சங்கத்தின் அபிமானிகளாகவும் கருதப்படுவோர். சங்கத்தலைவர்கள், காரியதரிசிகள், பொக்கிஷதாரர், நிர்வாக சபை அங்கத்தினர் முதலியோர் ஆண்டுக்கொருமுறை மகாஜனக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுவர்.

#### சங்க வேலைகள்

1. மாதந்தோறும் சங்கத்தின் சார்பாகப் பொதுக்கூட்டங்களை நடத்திக்குலமுன்னேற்றத்திற்கும், பொது ஜனங்களின் மேன்மைக்கும் அவசியமான துறைகளில் தக்காரைக்கொண்டு பிரசங்கங்களை நடத்தல்.

2. சங்கத்திற்கென சில (தமிழ்) பத்திரிகைகளை வரவழைத்துப் பொது மக்களின் அறிவுவளர்ச்சிக்கு உதவி புரிதல்.

3. நல்ல புஸ்தகங்களைச் சம்பாதித்துப் புத்தகாலயமொன்றை யமைத்து அங்கத்தினருக்கும் அபிமானிகளுக்கும் பயன் படச் செய்தல்.

4. சங்க நோக்கங்களைச் சாதிப்பதற்கான துண்டுப் பிரசுரங்களையும் புத்தகங்களையும் பிரசுரித்தல் முதலியன.

5. ஆண்டுக்கு ஒருமுறை தவறுமல் மகாஜனக் கூட்டத்தை நடத்தவேண்டும்.

6. சங்கத்தின் பொருள் அனைத்தும் பொக்கிஷதாரரிடம் இருக்கவேண்டும். அவர் தம்மிடம் சேரும் ரூ. 10-க்கு மேற்பட்ட தொகையை எல்லாம் தபால சேவிங்ஸ் பாங்கியில் சேமித்து வைக்க வேண்டும்.

7. காரியதரிசிகள் சங்கத்தின் அவசியமான அவசரச் செலவுகளுக்கு நிர்வாக அங்கத்தினரின் அங்கீகாரத்தை எதிர்பார்த்து 1 மாதத்தில் 3 ரூபாய்க்கு மேற்படாமல் முன்னதாகச் செலவுசெய்யலாம்.

8. சங்கத்தின் பண விஷயமான வரவு செலவு கணக்குகளைப் பொக்கிஷதாரர் தயாரித்து வைக்கவேண்டும். காரியதரிசி சங்கத்தின் சகல ரிகார்டுகளையும் தயார்செய்து மாதமொருமுறை சங்கத் தலைவரிடம் ஆஜர்படுத்தவேண்டும்.

9. ஆண்டு கடைசியில் சங்கத்தின் வரவு செலவு விவரங்களோடு கூடிய சங்க அறிக்கைப் புத்தகம் தயாரித்து யாவருக்கும் பிரசித்தப் படுத்தவேண்டுவது நிர்வாகிகளின் கடமையாம்.

10. இச்சங்க விதிகளை மாற்றவோ திருத்தவோ நிர்வாக சபையாருக்கு உரிமையுண்டு.

11. தலைச்சங்கத்துக்கு ஆண்டுக்கு ஒருதடவை 10 ரூபாய்க்குக் குறையாமல் சந்தா செலுத்திவரவேண்டும்.

பின்பு தாம்பூலம் கற்கண்டு வழங்கப்பட்டு இராத்திரி 9-மணிக்குச் சபை இனிது நிறைவேறியது.

எல். ஆர். சின்னுசாமி, காரியதரிசி.

## சேலம் ஜில்லா

### மோகனூர் உண்மைச் செங்குந்தர் சங்கம்.

6-4-29௳ மாலை 6-மணிக்கு ஸ்ரீ மாசடைச்சியம்மன் ஆலயத்தில் சங்கத்தின் 8-வது கூட்டம் தலைவர் அவர்கள் தேக அசௌக்கியமா யிருந்தபடியால் உபதலைவர் ஸ்ரீமான் சொர்ணத்தைசாமி முதலியார் அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிற்று. கடவுள் வாழ்த்து கூறியபின் சங்கத்தின் இருப்பைத் திரு. சொர்ணத்தைசாமி முதலியார் அவர்களுக்கு ரூபாய் 1-6-0 வட்டிக்கு ஏலத்தில் விடப்பட்டது. வரவுசெலவு கணக்குப் பார்த்தல் முதலியவை ஆன பிறகு சந்தாத் தொகை வசூலிக்கப்பட்டுத் தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் இனிது கலைந்தது.

### வெள்ளிபாளையம் நன்னெறிச் சங்கம்

அவிநாசி தாலுகா வெள்ளிபாளையம் உண்மைச் செங்குந்தர்களின் சங்கம் 30-4-29-ல் மா-௱-௱ ஸ்ரீ N. ரங்கசாமி முதலியாரது வீட்டில் அன்னூரது அண்ணூர் பெரியதனம் V. வெங்கிடசாமி முதலியாரது தலைமையில் கூடிக் குள்ளத்துறை மாரியம்மன் கோவில் பாத்தியதைகளைப்பற்றி வச்சனம்பாளையம் வெள்ளிபாளையம் ஆகிய இருகிராமச் செங்குந்தர்களில் இன்னின்னருக்கு இன்னின்ன பாத்தியதை என்று நிர்ணயிக்கப்பட்டது.

பிறகு தலைவரால் தம்முள் கக்ஷிப் பிரதிகக்ஷிகள் இனி எக்காலமும் இருக்கக் கூடாதென்றும் ஒற்றுமையே நம்மவர் முன்னேற வழியென்றும் நம் சங்கத்தால் தலைச் சங்கத்திற்கு வருஷாவருஷம் செலுத்தவேண்டிய தொகை இவ்வருஷத்திற்கு 23-1-29ல் மணியார்டர் செய்யப்பட்டுள்ள தென்றும் இம்மாரியம்மன் திருவிழாவானது சுமார் 50 வருஷத்திற்கு முன் நம்மவர்களால் நடந்ததென்றும் தற்போது பிறகக்ஷிப் பிரிவுகளை நீக்கி முட்டின்றி முடிந்ததென்றும் கூறப்பட்டது. இதற்குச் சென்ற சித்தாத்திரிலுடணுயக்கன் கோட்டை தாலுகாவிலிருந்த காலத்தில் கோவிலின் சகல பாத்தியதையும் வெள்ளிபாளையம் குமாரசாமி முதலியாருக்கென்றே தீர்ப்பாகி எழுதிக்கொள்ளரிகார்டும் படித்துக் காட்டப்பட்டது. இரு கிராம பெரியதனம் நாட்டாண்மைக்காரர்களும் ஜனங்களும் காரியதரிசி E. V. தரைசாமி முதலியாருடன் கிராமசாந்தி முதல் சகல திருவிழாவும் சட்டத்தில் கண்டபடி அவரவரைக்கொண்டு திருவிழா நடந்தேறியது.

E. V. துரைசாமி முதலியார், ஆசிரியர்.

## மலையாளம் ஜில்லா

### கொல்லங்கோடு செங்குந்த வாலிபர் சங்கம்.

மலையாளம் ஜில்லாவைச்சேர்ந்த கொல்லங்கோட்டில், செங்குந்த சமூகத்தைச் சீர்திருத்துவதற்க்காகக் கங்கணம் கட்டிக்கொண்டு புறப்பட்டிருக்கும் வாலிபர்களின் நன்முயற்சியால், தமிழ்ப் புதுவருஷக் கொண்டாட்டத்தைமுன்னிட்டு, 'செங்குந்த வாலிபர் சங்கத்தின்' ஆதரவின்கீழ் ஞாயிறு, திங்கள், செவ்வாய்க் கிழமைகளில், சிறப்பாக மூன்று பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. அவ்வமயம், நமது புகழ்பெற்ற சமூகத்தைச் சேர்ந்த மாதர்களும், பெரியோர்களும், வாலிபர்களும் காட்டிய சந்தோஷமும், ஊக்கமும், முயற்ச்சியும் என்றும் மறக்க முடியாததாகும்.

முதல்நாள் கூட்டம் தெற்குப்பாவடியில், மாலை 5-மணிக்கு வயதிலும், தமிழ்க்கல்வியிலும், குணத்திலும் பெரியோரென்று போற்றப்பட்டு வரும் திரு. மு. பழனிமலை முதலியார் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. கடவுள் வணக்கமும், தலைவர் முன்னுரையும் முடிந்தபின் திரு. சு. சொக்கலிங்க முதலியார் 'சீர்திருத்தம்' என்னும் விஷயத்தைப் பற்றிப் பேசுகையில், செங்குந்தர்கள் மதுபானம் புலாலுண்ணல், பலியிடுதல், பெண் அடிமை, பாலிய விவாகம், மூடப்பழக்க வழக்கங்கள், கக்ஷிச்சண்டைகள் முதலிய தீய வழக்கங்களை இப்போதே நிறுத்த வேண்டுமென்றும், பெண்களும் ஆண்களுடன் சேர்ந்து சமூக முன்னேற்றத்திற்காகவும், தேச விடுதலைக்காகவும் உழைக்க வேண்டுமென்றும், கல்வி ஒற்றுமை இவைகளை அதிதீவிரமாக நம்மிடையில் பரவச் செய்யவேண்டுமென்றும், அப்படிச் செய்யாவிட்டால் நாமும் மற்ற சமூகத்தவரைப்போல் சகோதரபாவத்துடன் இந்நவீன நாகரீக உலகில் முன்னணியில் நிற்க முடியாதென்றும், இந்தச் சீர்திருத்தங்களைச் செய்ய வீரர்களின் வம்சத்தில்தோன்றிய வாலிபர்கள்தான் தைரியத்துடன் முன்வரவேண்டுமென்றும் சொன்னார். பின் ப. முத்துவேலு முதலியார் அவர்கள் புலாலுண்ணல், பலியிடுதல் என்னும் தீய வழக்கங்களைப்பற்றி மிகவும் தெளிவாகவும் அனேக மேற்கோள்களுடனும் பேசுகையில், திருக்குறள் வாக்கியத்தின்படி 'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்' என்று கேட்போர் உள்ளத்தில் நன்கு பதியும்படிப் பேசினார். தலைவர் முடிவுரையில் 'கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்நிற்க அதற்குத்தக' என்ற திருக்குறள் வாக்கியத்தை தமது கல்வித் திறமைக்கேற்றவாறு நன்குவிளக்கிப் பேசினார். இத்துடன் முதல்நாள் கூட்டம் முடிவுபெற்றது.

இரண்டாவது நாள் கூட்டம் வடக்குப்பாவடியில் மாலை 5-மணிக்குத் திரு. வே. பழநியப்ப முதலியார் அவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்றது. அச்சமயம் ப. முத்துவேலு முதலியார் 'கொல்லாமை' என்பதைப்பற்றிப் பேசியபின், செங்குந்த சமூக முன்னேற்றத்திற்காகத் தீவிரமாக உழைத்து வருபவரும், ஈரோட்டில் செங்குந்தவாலிபர் முதலாவது மகாநாட்டைத் திறந்து வைத்தவருமாகிய திரு. கு. முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள் 'சீர்திருத்தம்' என்னும் விஷயத்தைப்பற்றியே பேசுகையில் நமது சமூகத்தின் பண்டைக்கால பெருமையைப் பற்றியும் அதன் தற்கால நிலைமையைப்பற்றியும் காமாக்ஷியம்மன் செங்குந்தர்களுக்குக் குலதெய்வமானதற்குள்ள காரணத்தைப்பற்றியும்நமதுகீழ்மைக்குக்



(17)

காரணம் கல்வியறிவில்லாத வயோதிகர்களே என்றும், ஆனதினால் நமது குலமுன்னேற்றத்திற்காக வாலிபர்கள் சத்தியம் செய்துகொண்டு புறப்படவேண்டுமென்றும், மிகவும் ஊக்கமாகவும், காம்பீரத்துடனும் சுமார் ஒரு மணி நேரம் பேசினார். கடைசியாகத் தலைவர் அவர்கள் மதுபானம், புலாலுண்ணல் ஆகியவையும் நமது கீழ்மைக்குக் காரணமென்றும் அவற்றை நிறுத்தல் செய்தால் மேன்மையோடு வாழலாமென்றும் முடிவுரை கூறினார்.

மூன்றாவது நாள் கூட்டம் தெற்குப்பாவடியில் மாலை 5-மணிக்குத் திரு. ப. பழனிமலை முதலியார் அவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்றது. அது சமயம் சி. சொக்கலிங்க முதலியார் 'தொழில் அபிவிருத்தி' என்னும் விஷயத்தைப்பற்றிப் பேசும்போது வெளி நாடுகளோடும் உள்நாட்டு மல்களோடும் போட்டி போடவேண்டிய இக்காலத்தில் செங்குந்த மக்கள் தங்கள் தொழிலையும் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்றும் வியாபாரிகள் ஏமாற்றுதல் என்னும் பழக்கத்தைக் கைவிடவேண்டுமென்றும் கதரியக்கத்தினால் நமமவர்களுக்குண்டாகும் நன்மையைப் பற்றியும், நமது தொழிலை நாம்தான் முதலில் ஆதரிக்க வேண்டுமென்றும் சொன்னார். இரண்டாவதாக சு. சிவராம முதலியார் வாலிபர் சங்கத்தைப் பற்றிப்பேசுகையில் கூட்டங்கள் சரியாகநடத்தவேண்டியதின் அவசியத்தைப்பற்றியும் அதற்கு வாலிபர்கள் ஒத்துழைப்பு வேண்டுமென்றும், இந்த வருஷ முடிவிற்குள் நாம் கொஞ்சமாவது முன்னேற்றமடையவேண்டுமென்றும் சொன்னார். கடைசியாகத் தலைவர் அவர்கள் பெரியோர்களும் வாலிபர்களுடன் சேர்ந்துழைக்க வேண்டுமென்று முடிவுரை கூறிய பின் கூட்டம் முடிவுபெற்றது.

சு. சொக்கலிங்க முதலியார், காரியதரிசி.

## திருச்சி ஜில்லா.

### துறையூர் செங்குந்த வாலிபர் சங்கம்.

சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க அமைச்சர் உயர்திருவாளர் பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்களால் நிறுவப்பெற்ற இச்சங்கப் பொதுக்கூட்டங்கள் சென்ற பங்குனிமீ பிரதி வெள்ளிக்கிழமை இரவு 8-மணி முதல் 11மணி வரையில் நடைபெற்றன. சங்க மெம்பர்கள் எல்லோரும் அதிக ஊக்கத்துடன் வந்திருந்து ஜீவ இம்சை, புலால் உண்ணுமை, ஒற்றுமை, நமது குல முன்னோரான புலமை வாய்ந்த ஒட்டக்கூத்தர் இரட்டையர் முதலியவர்கள் சரித்திரம் ஆகிய பிரசங்கங்களை முறையே செவியேற்று ஆனந்தமடைந்தனர். இச்சங்கம் விருத்தியடையுமாறு எல்லா மெம்பர்களும ஊக்கத்துடன் இருந்து வருகிறார்கள் என்பது உண்மையே. இன்னும மேன் மேலும் விருத்தியடையவும், நமது குலமக்கள் முன்னேற்றமுறவும் திரு. வெங்கடாஜல நாயனர் அவர்கள் செய்யும் முயற்சி பாராட்டத் தக்கது. இசசங்கம் நீடூழி தளரா ஊக்கத்துடன் அபிவிருத்தியடையுமாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

ஆ. வீ. முத்தைய முதலியார், காரியதரிசி

## மதுரை ஜில்லா

### வண்டியூர் செங்குந்தர் சங்கம், மதுரை.

மதுரை தெப்பக்குளத்தை யடுத்த வண்டியூரில் 10-2-29 தேதி தை சங்கத் திறப்புவிழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இதற்கென பத்திரகாளியம்மன் கோயிலில் வாழை கமுகு, தோரணங்களால் அலங்கரிக்கபபட்டு அமைத்த சிங்காரப்பந்தலில் மாலை $7\frac{1}{2}$-மணிக்கு ஒரு பெருங்கூட்டம் கூடிற்று. அதற்கு மதுரையிலிருந்து சங்கத்துக் காரியதரிசிகள் உட்பட சுமார் 50 பேர்களும் திறப்புவிழாத் துண்டு பத்திரிகையைக் கண்டு சுற்றுக கிராமங்களிலிருந்து திரளான ஜனங்களும் அன்று மாலை வந்த வண்ணமாகவே இருந்தனர். இக்கூட்டத்திற்கு ஸ்ரீமான் N. S. நல்லதம்பி முதலியார் அவர்கள தலைமை வகித்தார்கள். தை சங்கததைத் திறந்து வைதத தலைவர் அவர்கள் தமது முன்னுரையில சங்கத்தின் அவசியத்தைப் பற்றி வற்புறுத்திப் பேசினார்கள். பிறகு நமது சமூக சம்பந்தமான அனேக சொற்பொழிவுகள் அறிஞர்களால் நிகழ்ததப பெற்றன. வந்திருநத கனவானகளுக்கு நல விருந்தளிக்கபபட்ட பிறகு கூடிய கூட்டத்தில் கீழககணட உத்தியோகஸ்தர்கள் தெரிந்தெடுக்கபபெற்றனர். தலைவர் திரு. V. S. வேலாயுத முதலியார். உபதலைவர்கள் திரு. வன்னியழகர் முதலியார், திரு. வ. சு. சுபபிரமணிய முதலியார். காரியதரிசி திரு. V. S. சௌந்தரபாண்டியன். இதர நிர்வாக அங்கத்தினர். இரவு 1-மணிககுக் குதூகுலத்தோடு கூட்டம நிறைவேறிற்று. பெணமணிகள இக்கூட்டத்திற்கு நிறைய வந்திருந்தது ஈண்டு குறிபபிடத்தசகது என்று காரியதரிசி எழுதுகிறார்.

4-4-29—தேதி இரவு 9-மணிககு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவிலில் மதுரை ஜவுளி வியாபாரம் லோ.அ.செ.கோ. & பிறதாஸ் ஏஜண்ட் திருவாளர் மா. குப்புஸாமி முதலியார் அவாகள் தலைமையின் கீழ் செஙகுநதர் பொதுக்கூட்டம ஒன்று கூடிற்று. அககூட்டததில் கீழ்க்கண்ட தீர்மானஙகள் ஏகமனதாய் நிறைவேறறப் பெறறன:—

(i) சங்கத்தின் பெயர் 'வண்டியூர் செங்குந்தர் சஙக'மென்றும

(ii) இவ்வூர் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவிலிலேயே சஙகம கூடலாமென்றும்,

(iii) இச்சங்கத்தைச் சென்னையிலுள்ள தென்னிந்திய செஙகுநத மகாஜன சஙக'த்துக்குக் 'கிளைச் சஙகமாக்கவேணடுமென்றும்.

(iv) தலைச்சங்கத்திற்கு இச்சங்கம் அனுப்பவேண்டிய வருஷக் கட்டணம் ரூ. 5 ஏற்கனவே அனுப்பியுள்ளதென்றும், அப்ளிகேஷன்பாரம் பூர்த்திசெய்து அனுப்பவேண்டுமென்றும்,

(v) சங்க அங்கத்தினர்களிடம் சந்தா வசூல் செய்வதற்கு அச்சு ரசீது புஸ்தகம் தயார் செய்ய வேண்டுமென்றும்,

(vi) இச்சங்கம் பிரதிமாதம் அமாவாசை தினம் கூடவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பெற்றன.

### சங்க உத்தியோகஸ்தர்கள்.

திருவாளர் மா. குப்புசாமி முதலியார்—தலைவர்.
,, எஸ். மாயாண்டி முதலியார்—உபதலைவர்.
,, கே. எம். முத்துவைரவ முதலியார்—பொருட்காப்பாளர்.
,, வி. எஸ். சௌந்தரபாண்டியன்—காரியதரிசி.

### நிர்வாகசபை அங்கத்தினர்.

திருவாளர் V. A. சுப்பிரமணிய முதலியார்
,, மு. வெ. அருணாசல முதலியார்
,, கே. எம். முத்துவைரவ முதலியார்
,, எஸ். நல்லுசாமி முதலியார்
,, ஆ. பழனிசாமி முதலியார்.

வந்திருந்தோரனைவருக்கும் சந்தனம் தாம்பூலம் வழங்கப்பட்டு இரவு 10-30-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது எனச் சங்ககாரியதரிசி திரு. வி. எஸ். சௌந்தரபாண்டியன் எழுதுகிறார்.

## திருநெல்வேலி ஜில்லா

### தென்காசி செங்குந்த வாலிபர் சங்கம்.

1104௵ தைமீ 1௳ மாலை 5-மணிக்குச் சொக்க விநாயகர் ஆலயத்தில் திரு. T. P. K. ஆறுமுக முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் ஒரு பொதுக் கூட்டம் கூடிற்று. அச்சமயம் 'தென்காசி செங்குந்த வாலிபர்' சங்கம் என ஒரு கிளைச்சங்கம் ஸ்தாபிக்கப்பெற்றுக் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

(1) சங்க உத்தியோகஸ்தர்கள் மாதம் ஒன்றுக்கு அணா இரண்டும் இதர அங்கத்தினர் மாதம் ஒரு அணாவுமாகச் செலுத்தவேண்டும்.

(2) டி சங்கக்கூட்டம் மாதம் ஒரு முறையாவது கடைசி வெள்ளிக்கிழமைகளில் கூடவேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட சங்க உத்தியோகஸ்தரின் விபரம்.

தலைவர்: திரு. த. தி. அருணாசல முதலியார்; உபதலைவர்: பா. சு. ஆறுமுக முதலியார், B.A., வகுப்பு மாணவர்; கூட்டுக் காரியதரிசிகள்: திருவாளர்கள் ரா. ம. திருமலை முதலியார், ஆ. அ. சங்கரபாண்டிய முதலியார்; உபகாரியதரிசி: திரு வே. சு. வேலாயுத முதலியார்; பொக்கிஷதார்: திரு ஆ. கு. சு சங்கரபாண்டிய முதலியார். 23 கனவான்கள் நிர்வாகசபையின் இதர அங்கத்தினர்.

(21-1-29) 1104௵ தைமீ 9௳ மாலை 5-மணிக்குத் திரு. சி. தா. குற்றாலலிங்க முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க்கூடிய நிர்வாக சபைக்கூட்டத்தில் சந்தா வசூல் சம்பந்தமான சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்று நடவடிக்கைக்குக் கொண்டுவரப்பட்டன.

1104௵ தைமீ 13௳ மாலை 6-மணிக்குச் சொக்க விநாயகர் கோயிலில் திரு. T. P. K. ஆறுமுக முதலியார் அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிய பொதுக் கூட்டத்தில் கல்லிடைக்குறிச்சி திரு. சு. பழனியாண்டி முதலியார் அவர்கள் 'நல்லொழுக்கம்' என்பதுபற்றி ஒரு அரிய உபந்யாசம் செய்தார்கள். வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது நிறைவேறிற்று

1104௵ தைமீ 27௳ மாலை 6-மணிக்குச் சொக்க விநாயகர் ஆலயத்தில் திரு. மு. பி. கணபதி முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று. காரியதரிசியவர்களால் வரவு செலவு கணக்கு வாசித்துக் காட்டப்பட்ட பிறகு திரு. எம். சண்முக குற்றாலலிங்க முதலியார் அவர்கள் 'நமது முன்னேற்றம்' என்பது பற்றியும் திரு. ப. கு. ஆ. சேதுராமலிங்க முதலியார் அவர்கள் கல்வி என்பது பற்றியும், திரு. மு. சா. லக்ஷ்மணப்பெருமான் முதலியார 'நமது குலப்பெருமை' என்பது பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

1104௵ மாசிமீ 5௳ மாலை 6-மணிக்கு ஸ்ரீமான் மு. பி. கணபதி முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க்கூடிய பொதுக்கூட்டத்தில் 'குலமுன்னேற்றம்', 'பொறாமை நீக்கல்' என்னும் விஷயங்களைக் குறித்து முறையே திருவாளர்கள் M. சண்முக குற்றாலலிங்க முதலியார், ஆ. கு. சு. காலாயுத முதலியார் ஆகிய இருவரும உபந்யசித்தார்கள்.

1104௵ மாசிமீ 25௳ மாலை 6 மணிக்குச் சொக்க விநாயகர் ஆலயத்தில் மாதாந்தரக்கூட்டம் ஸ்ரீமான் ஆ. வெ. சுப்பிரமணிய முதலியார் தலைமையின்கீழ்க் கூடியபோது ஸ்ரீமான் R. திருமலை முதலியார் 'பொறாமை நீகுதல்' என்பதுபற்றி உபந்யாசித்தார்.

டி பங்குனிமீ 25௳ சங்கத்தலைவர் திரு. த. தி. அருணாசல முதலியார் அவர்கள் தலைமையில கூடிய விசேஷக் கூட்டத்தில் சங்கத்திற்கு வாடகைக்குக் கட்டடம் ஒன்று வாங்கவேண்டுமென்றும் சங்கத்திற்கு 'செங்குந்தமித்திரன்' ஆனந்தபோதினி முதலிய மாதாந்தரப் பத்திரிகைகள் தருவிக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப் பெற்றன.

டி மாதம் 30-௳ மாலை 5-மணிக்குத் திரு. T. P. K. ஆறுமுக முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய மாதாந்தரக் கூட்டத்தில் வக்கீல் திரு. S. பழனியாண்டி முதலியார் அவர்கள் B.A., 'நமது தற்கால நிலைமை' என்பது பற்றி நீண்டதோர் உபந்யாசம் செய்தார்கள், தலைவர் அவர்கள் முடிவுரையின் பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது. எனக காரியதரிசி திரு. R. திருமலை முதலியார் எழுதுகிறார்.



## திருவனந்தபுரம்.

### கோட்டாறு செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்.

இச்சங்கத்தின் பொதுக்கூட்டம் ஒன்று நானது ஆண்டு மார்கழித் திங்கள் 30-ம் நாள் (13-1-29) இரவு 9-மணிக்குக் கூடிற்று. அடியிற் குறிப்பிடப்படுகிற புது நிர்வாகசபை அங்கத்தினர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

### தலைவர்.

திருவாளர் சு. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் Retired Head Clerk.

### துணைத்தலைவர்.

,, ர. வேலாயுத முதலியார் ,, ஜவுளிவியாபாரம்.

### அமைச்சர்கள்.

திரு. ஆ. சு. முத்தைய முதலியார், B.A. அவர்கள் ஜவுளி வியாபாரம்
,, வே. பகவதிமுருக முதலியார் ,, முதல் பீடி.
,, மா. இராமசுவாமி முதலியார் ,,

### இதர அங்கத்தினர்கள்.

,, வ. சு. மாடசுவாமிமுதலியார் ,,
,, ஆ. சிற்றம்பல முதலியார் ,,
,, சு. ஆறுமுக முதலியார் ,,
,, அ. இராமசுவாமி முதலியார் ,,

கோட்டாறு 4-2-29. } ஆ. சு. முத்தையா முதலியார், பி.ஏ, காரியதரிசி.

# திருபங்கள்.

### கல்வி நிதிக்கு நன்கொடை

ம-ா-ா-ஸ்ரீ கனம் தலைச்சங்க அமைச்சர் அவர்களுக்கு,

ஈரோட்டு மகாநாட்டிற்கு விஜயஞ்செய்த நம் குலப பிரதிநிதிகளுக்கு விருந்தளிக்கும் பெரும் புண்ணியத்தைத் தாமும் பங்கிட்டுக்கொள்ள எண்ணிய அவிநாசி தாலூகா வெள்ளைப்பாளையம் பெரியதனம் திரு. V. N. ரங்கசாமி முதலியார் அவர்கள் என்னிடம் ரூபாய் 10 கொடுத்து என்னைக் கிளைச்சங்கப் பிரதிநிதியாக ஈரோட்டிற்கு அனுப்பினார்கள். அதுபோல் நானும் 18-1-29 மாலை ஈரோட்டிற்கு வந்து அங்கு நிருமாணித்திருந்த செங்குந்த நகரை ஆனந்த பரவசனாய்க்கண்டு டி ரூபாய் பதனைச் செலுத்தப் பலரைக் கேட்டுத் தங்களை நேரில் காண்பதரிதெனத் தெரிந்து டி நகருக்கு வெளியில் இடதுபுறம் இருந்த ஆபீசில் டியாரின் நன்கொடையைச் செலுத்தப் புத்தகத்தில் பதிவு செய்து கொண்டார்கள்.

19-20 தேதிகளில் தலைவர்கள் முதல் அருந்தொண்டாற்றிவரும் திரு. ம. சண்முகசுந்தரமாகிய தங்களுடன் பல பக்கத்து நமது சகோதரர்களையும் ஒருங்கே கண்டதோடு தாங்கள் இரண்டாம் நாள் பகல் கல்லுங்கரையுமாறு கசிந்துருகி கண்ணீர் ததும்பச் சொரிந்த பெருங்கருணைச சொற்களையும் கேட்டு ஆனந்தவாரியில் அழுந்தினேன். இதை என் வாழ்நாளில் மறவாதவனானேன். திரு. T. N. சபாபதி முதலியார் அவர்களும தாங்களும காஞ்சிமுதல் கன்னியாகுமரி வரையில் நம்மவர்களின் கல்வி அபிவிர்த்திநிதிக்காகச் செய்துள்ள முயற்சியை முன்னிட்டு, எம் முன்னோர்கள் கூத்தர்பிரான் காலந்தொட்டு வீரசிங்காதன மடத்தில் லிங்காயத்தர்களாய்ச் சைவ நெறி பூண்டு வருஷா வருஷம பங்குனி யுத்திரந் தொட்டு அக்கினி நக்ஷத்திரம் முடியும் 36-நாள் வரையில் உல்வாஸ நிஸ்வாஸ உணர்வோடு விஞ்சா உபவாசமிருந்து வருஷத்தில் சேரும் உண்டிப் பணத்தைக்கொண்டு ஸ்ரீ முருகப்பெருமானது ஆறுபடை வீடுகளிலொன்றைத் தரிசித்து வருவதாயுள்ள பழைய வழக்கத்தை, இம்மகாநாட்டிற்றோன்றிய பத்துணர்ச்சியால், சற்று விட்டு, அக்காணிக்கையில் வருஷா வருஷம் சித்திரை பௌர்ணமியன்று உண்டியைத் திறந்து பன்னிரண்டு ரூபாய் நமமவர் கல்விநிதிக்காக வருஷாவருஷம் என் ஆயுளுள்ளபரியந்தம் தலைச்சங்கத்திற்கு அனுப்புவதாக விரதம்பூண்டு இதனால் வாக்களித்தவனாகிறேன்.

வருஷா வருஷம் மகாநாட்டிற்குத் தூரத்தைப் பொறுத்து நான் வரத்தவறினால், வாலண்டியர்களாக என் மக்களையாவது அனுபபத் தீர்மானித்துள்ளேன்.

E. V. துரைசாமி முதலியார்,
மூலத்துறை.

### ஒரு வேண்டுகோள்

சென்றமீ மித்திரனில் வெள்ளிபாளையத்தைப் பற்றி வெளியிட்டபடி N. ரங்கசாமி முதலியார் நன்கொடை ரூ. 10-0-0-ஐயும் ஈரோட்டில் மகாநாட்டு வாலெண்டியர் ஆபீஸில் செலுத்தி ரசீது கேட்க, மித்திரனில் வெளியாகுமென்று கணக்கில் பதிவு செய்துகொண்டார். இதுவரை கணக்கு வெளியிட்டதாகத் தெரியவில்லை. விவரமறிந்துகொள்ள நான் விரும்புவதால் இதை மித்திரனில் தயவு செய்து வெளியிட வேண்டிக்கொள்ளுகிறேன்.

E. V. துரைசாமி முதலியார்,
பிரதம ஆசிரியர், மூலத்துறை.

## பவானிச் செங்குந்தரின் வெற்றியும் போலியரின் தோல்வியும்.

சென்ற மாசித் திங்களில் பவானியில் நடந்த "செல்லாண்டியம்மன்" பண்டிகைக் காலத்து வழக்கம்போல் கொடியேற்றும் பொருட்டு நம்மவர்கள் கொடி கொண்டு சென்றனர். அதற்கு மாறாக, சென்ற தைத்திங்களில் ஈரோட்டில் நடந்த நம்மவர்களின் மகாநாட்டைக் கண்டு அஞ்சி வயிறெரிந்து மானமிழந்து திரியும் மேளக்காரர்கள், நம்மவர்களிடத்தத தங்களினத்தவர் மேளம் வாசித்தல் முதலியன செய்யக்கூடாதெனத் தங்களுக்குள் கட்டுப்பாடு செய்துகொண்டு; துவஜாரோகண விழவன்று "நாங்கள்தான் கொடி கட்டுவோம் எங்களுக்கும் உரிமையுண்டு" எனக் கோவிற் பிரமுகர்களிடத்துக் கூறினர். திரண்டு வந்த நம்மவர்கள் இவ்விஷயமறிந்து, "இவ்வழக்கம்எங்களுக்கே யுரித்" தெனப் பல ஆதாரங் காட்டினர். கோவிற் பிரமுகர்கள் மேளக்காரரை நோக்கி, 'புதிதாக நீங்கள் கூறும் வார்த்தையை ஒப்புக்கொள்ளோம். இதுவரை எவர்கள் கொடிகட்டி வந்தார்களோ அவர்களே அதற்குரியவர்' எனக்கூற மீண்டும் மேளக்காரர்கள் "அவர்கள் கொடியேற்றும் போது நாங்கள் வாத்தியம் வாசிக்கமாட்டோம்" என்றனர். நம்மவர்கள் உடனே கோவிற் பிரமுகர்களை நோக்கி "2-மணி அவகாசம் கொடுங்கள். நாங்கள் வாத்திய முழக்கத்துடன் கொடியேற்றுகிறோம்" எனத் தர்மகாததா முதலியோர் மேளக்காரரை நோக்கி அயலூரிலிருந்து மேளக்காரர்களை வரவழைத்துக்கொள்ள எங்களுக்குத் தெரியும், உங்கள் இஷ்டமென்ன?" என்று வினவ, 'வகையின்றி "தங்களபிப்பிராயப்படியே" என்றதும், மேளக்காரர் வாத்திய முழக்கத்துடன் துவஜாரோகண விழா இனிது முடிந்தது. பின்னர் அப்பண்டிகைக்கு நம்மவர்கள் 'பொங்கல்' கொண்டு செல்லவும், அலகு குத்தி மாவிளக்குடன் செல்லவும் ஈரோட்டிலிருந்து மேளவாத்தியக்காரர்களை வரவழைத்து ஆர்ப்பாட்டத்துடன் சென்று வந்தனர்.

பங்குனித் திங்களில் உத்திரத்தன்று நங்குல தெய்வமாகிய எல்லாம்வல்ல எம்பெருமா னறுமுகவனைப் பத்திபூர்வமாய்க் காவடியெடுத்து அவனருட் பெற்றுய்யுமாறு ஈரோட்டிலிருந்து வாத்தியக்காரர்களை வரவழைத்து இவ்வூர் வாலிப சங்கத்தினர் வாத்திய கோஷத்துடன ஊர்வலஞ்செய்து வைபவம் கொண்டாடினர். இவ்வூரை யடுத்த ஐம்பையில் நங்குல வாலிப சங்கத்தினரும் 'ஆப்புக்குடல்' என்னுமூரிலுள்ள மேளக்காரரை வரவழைத்து ஆனந்தத்துடன் காவடி யெடுத்து அறுமுகவனுக் கருமபத்தி செய்து அவருடைய அருள் பெற்றனர். இதுபோலவே பவானியிலுள்ள நங்குலப் பெரியோர்களே! வாலிபரே! சிறுவர்களே! நீங்கள் உமது குலத்தை முன்னேற்றமடையச் செய்யும் வழிகளை மனவூக்கத்துடன் முடன்று வருமாறு மன்றாடுகிறேன். செந்தில் மேய வள்ளி மணாளன் சேவற் கொடியோன் நாமென்று மீடேற இன்னருள் பாலிப்பானாக. சுபம்.

இலட்சுமண முதலியார், பொருட் காப்பாளர்,
செங்குந்த வாலிபர் சங்கம், பவானி.

## ஈரோடு பள்ளிபாளையம் செங்குந்த மகாஜனங்களுக்கும் வாலிபர்களுக்கும ஒரு வேண்டுகோள்.

நமது 'செங்குந்த மித்திரன்' நம் குலமுன்னேற்றங் கருதி 2½ வருடகாலமாக நமக்குப் போதித்தும் நாம் 'என் கடன் பணி செய்துகிடப்பதே' என்னும் ஆன்றோர் வாக்கை மறந்து இருப்பது ஏனோ?

நம மித்திரன் பெருதவியால் அநேக இடங்களிலுமுள்ள நம்மவர்கள் குலச் சீர்திருத்தங்களைக் கையாண்டும் குறைபாடுகளைக் களைந்தும பொது நலங்கருதி தேச சேவை புரிந்தும் வருவதாக நம் மித்திரனால் கண்கூடாகப் பார்க்கிறோம் மேலும் 50 குடித்தனமுள்ள ஒரு கிராமத்தில நம்மவர்கள் சங்கம நிறுவி, தலைச்சபைதோடு சேர்ந்து அதன் சார்பாக குலநல முறைகளை அனுஷ்டித்துத் தொண்டாற்றி வருவதை பார்த்தும் சுமார் 100 தலைக்கட்டுள்ள (விவாகமானவர்கள்) நீங்களும் 40 வாலிபர்களும் சும்மா இருப்பது ஏனோ?

உங்களுக்குப் போதிய அளவு படிப்பில்லையா? தனைமையில்லையா? அலலது சக்தியில்லையா? என்று உங்களை கேட்குமுன் என் சிற்றறிவில் ஆராயுமிடத்து எங்கள் சிவபெருமான் கருணையாலும குன்றுதோறாடிய நம தலைவனோர் குகப்பிரானை துணை வலியாலும கல்வி, தனைமை, சக்தி இவை மூன்றுமே அமைந்திருக்கின்றன என்பதைச சில முகாந்தரங்களால்விளக்கிக் காட்டுகிறேன்.

அதாவது நம் சுற்றுக் கிராமத்திலுள்ள நம்மவர்களின் தகராறுகள் உங்களால் தீர்க்கப்பட்டு உங்கள் முடிவை மேற்கொண்டு அவர்கள் நடந்துவந்திருப்பதும், நம் குலவிளக்காம் ஸ்ரீலஸ்ரீ பரஞ்சோதி சுவாமிகளிடத்தில சில துர்மதி நம்மவர்கள், பள்ளிப்பாளையத்தில் காணிக்கை பெற்று 'இவ்விடத்துக்குக் காணிக்கைக்கு வாருங்கள்' என உரைக்க, அவ்வாறே சுவாமிகளும் நம் ஊருக்கு விஜயம் செய்து காணிக்கை பெறுஞ் செல்லும வழக்கம இன்னும் இருப்பதும் உங்கள் குருபக்தியையும் அறிவின் ஆற்றலையும் விளக்கிக் காட்டவில்லையா?

சமீபத்தில் ஈரோட்டில் நடைபெற்ற நம்மவர்கள் மகாநாட்டின் தொண்டர்படை உபதலைவர் (வைஸ் கேப்டன்) பதவியை நமது ஊர் ஸ்ரீமான K. வெங்கடாசல முதலியார் அவர்கள் வகித்து, செவ்வனே நடத்தி உங்கள் வாலிபத் திறமையைக் காட்டவில்லையா?

படர்ந்த பகைவர்கள் பணிந்து போற்றும் பெரியீர்!
அடர் வன்தெப்பதினும் இடம விடாதுழைக்கும இளைஞர்காள்!

இனியேனும் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பதை ஞாபகத்திருத்தி நம் குல முன்னேற்றங் கருதி நம் ஊரிலும ஒரு சங்கம நிறுவித் தலைசபைக்கு அங்கமாகச் சேர்ந்து மகாநாட்டின தீர்மானத்தைப பின்பற்றிச் சென்னையில் நம குலாபிமானிகளால் ஏற்படும் செங்குந்தர் கல்விநிதிக்கு மகமை



ஈன்கொடை உண்டியல் முதலிய உதவிகள் புரிந்து நம் மக்களைக் கல்வியில் மேன்மையுறச் செய்வதுடன் நமது கிராமப் பொதுநலச் சங்கத்திலும் பிரதிநிதித்துவம் ஏற்று, கிராமப் பொதுநலன்களுக்கும் தொண்டாற்றுமாறு உங்களைப் பன்முறையும் வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

ப. நஞ்சப்ப முதலியார்,
பள்ளிபாளையம்.

---

## மதிப்புரை

### தெய்வீகன்

திரு. மே. வே. துரைசாமி உடையார் அவர்களை ஆசிரியராகக்கொண்டு பார்க்கவகுலத்தினரின் முன்னேற்றங் கருதி மேற்கண்டார் கோட்டையினின்றும் வெளியிடப்பெறும் தெய்வீகன் என்னும் மாத வெளியீட்டின் முதலாண்டு சும் இதழ் கிடைக்கப்பெற்றோம். இதில் தற்கால முறையில் சீர்திருத்தம் பெற்று பார்க்கவகுலம் முன்னேறுதற்கான அநேக வழிகளும் முறைகளும் விளக்கப்படுவதோடு அக்குலச் சம்பந்தமாக ஆங்காங்கு நடைபெறும் கிளர்ச்சிகளும் எழுதப்படுகின்றன. ஏனைய பொதுஜனத் தலைவர்களின் பொன்மொழிகளும், சீர்திருத்தக் கட்டுரைகளும் வெளியிடப்படுகின்றன. ஒவ்வொரு சமூக முன்னேற்றத்திற்காக உழைக்கத் தனித்தனி சமூகப் பத்திரிகைகள் அவசியமாதலின் பார்க்கவ குலத்தனைவரும் தெய்வீகனை ஆதரிக்க வேண்டுகின்றோம்.

கிடைக்குமிடம்,
'தெய்வீகன்' மேற்கண்டார் கோட்டை போஸ்டு,
பொன்மலை மார்க்கம்

### முன்னேற்றம்.

சிங்கப்பூரில் வெளியிடப்படுகின்ற முன்னேற்றம் என்னும் வாரப்பத்திரிகையின் 11-வது மலர் வரப்பெற்றோம். புத்தகத்தைத் திறந்ததும் சிறந்த தேசபக்தரும், சமீபத்தில் நடைபெற்ற வங்காள மாகாண தேசிய மகாநாட்டில் தலைமை வகித்தவருமான வங்கவீரர் திரு. சுபாஷ்சந்திர போஸ் அவர்களின் திருவுருவப்படம் அழகுறப் பொலிந்து அனைவர் கண்களையும் கவர்கின்றது. இதில் பல அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளும் சமுதாய சீர்திருத்தக் கட்டுரைகளும் சுயமரியாதை இயக்கத் தத்துவங்களும் கொள்கைகளும் வெளியிடப்பட்டுள்ளன. சுயமரியாதை இயக்கக் கொள்கைகளைச் சிங்கப்பூரில் பரவச் செய்யும் நோக்கத்தோடு இப்பத்திரிகை நடைபெறுகின்றதென உணர்கின்றோம். இதன் ஆசிரியர் திரு வே. சி. நாராயணசாமி.

கிடைக்குமிடம்,
மானேஜர் "முன்னேற்றம்" ஆபிஸ்,
152, சிலிகிரோட், சிங்கப்பூர்.

## அறிஞரின் அமுதமொழிகள்

ஸர் ஜான் லப்பக் என்னும் அறிஞர் தம் வாழ்வின் பயன் என்ற நூலின் இறுதியில் ஒரு குடும்பத்தில் சமாதானமும், சந்தோஷமும், நிறைந்த இன்பமும் குடி கொண்டிருக்க வேண்டுமானால் பின்வரும் போதக வசனங்களைக் கடைப்பிடித்து ஒழுகல் வேண்டுமென்று கூறுகிறார்:—

1. நமது எண்ணங்களுக்கும், காரியங்களுக்கும் எதிரானவற்றையும், ஏமாற்றத்தையும் ஒவ்வொரு நாளும் வரும் என்றே எதிர்பார்க்கவேண்டும். அதனால் அவற்றைத் தாங்குவதற்கு நாம் தயாராய் இருக்கவேண்டும்.
2. ஒரு சிறிதும் குற்றமில்லாத, பூர்ணத் தன்மையை யெய்திய மனிதன் ஒருவனும் இவ்வுலகில் இல்லை. ஆதலின் பிறரிடத்தில் அதிகமாகத் தூய்மையை எதிர்பார்க்கக் கூடாது.
3. ஒவ்வொருவருடைய குணத்தையும், சுபாவத்தையும், தெரிந்துகொண்டு அதற்குத் தக நடத்தல் நலம்.
4. துன்பம் வந்துற்ற ஒருவரிடத்து அநுதாபமும், இன்பம் வந்துற்றவரிடத்துச் சந்தோஷமும் காட்டல் நலம்.
5. சிக்கிரத்தில் கோபத்தை யடையக் கூடியவனு விருப்பின் படபடென எதையும் பேசுதல் கூடாது; விசனத்துடன் இருக்கும்போது எதையும் அவசரப்பட்டுச் செயயக்கூடாது. கோபம் மிகுதியாயிருக்கும்போது மௌனம் சாதித்தல் நன்று.
6. நம்மால் கூடியவரை பிறருக்கு இன்பம் தருவனவற்றைச் செயதல் வேண்டும்.
7. வாழ்க்கையைச் சந்தோஷத்தோடே நடத்தக் கொள்ளல்வேண்டும்
8. பெரியோரிடத்தில் மரியாதையாகவும், சிறியோரிடத்தில் மென்மையாகவும், பக்ஷமாகவும், வேலைக்காரரிடம் பிரியமாகவும் பேசுதல் வேண்டும்.
9. பகிரங்கத்தில் பிறர் செய்த நன்மைகளைப் புகழ்தலும், மனதில், அந்தரங்கத்தில் வேண்டுமானால் அவர்கள் குற்றங் குறைகளைச் சிந்தித்தலும் சரி. எப்போது கூடுமானாலும் புகழலாம். ஆனால் கட்டாயம் செயயவேண்டுமென்ற அவசிய மேற்பட்ட போது மாத்திரம்தான் குறைகூறவேண்டும்.
10. இன்சொலான மிருதுவான பதில் கோபத்தை மாற்றும்.
11. உண்மையாகவே குற்றத்தின் பேரில் கோபத்தை அடைந்திருப்பின், நாமும் பல தடவைகளில் தவறிழைத்திருப்பதை நினைக்கவேண்டும்.
12. சந்தோஷ சமாசாரங்களில் பிறருக்குப் பிரதானம் கொடுத்தலும், பிறரை முன்னுக்குக் கொண்டுவரச் செய்தலும், தன்னைப் பெருமைப் படுத்திக்கொள்ள முயற்சி செய்யாதிருத்தலும் நன்று.
13. பிறர் செய்கைகளுக்குக் கூடுமானவரை நல்ல கருத்துக்களையே கூறுதல் வேண்டும்.

ஈ. வே. சோமசுந்தர முதலியார்,
கோட்டை, ஈரோடு.

# வர்த்தமானங்கள்

நாளது சுக்கிலஹு சித்திரைமீ 22, 23, 24உகளில் ஆம்பூர் சுந்தர விநாயகர் ஆலயத்தில் ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூஜை வெகு விமரிசையாய் நடைபெற்றது.

## சென்னைக்குப் புதிய கவர்னர்.

இதுவரை சென்னை கவர்னராக இருந்த வைகவுண்டு கோஷன் இப்போது இங்கிலாந்து செல்லும் லார்டு இர்வின் துரைக்குப் பதிலாக ஆறு மாதம் வைசிராய் வேலை பார்த்துப் பின் இங்கிலாந்து செல்வார். சென்னைக்குக் கோஷன் துரை ஸ்தானத்திற்கு டெர்பி பிரபுவின் சகோதரர் லப்டினண்ட் கர்னல் ரைட் ஆனரபில் ஜார்ஜ் பிரடரிக் ஸ்டேன்லி பி. ஸி., ஸி. யம் ஜி. என்பவர் கவர்னராக நியமிக்கப்பட்டிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. புதிதாக வருபவர் பதினாறுவது டெர்பி பிரபுவின் ஆறுவது புத்திரர்; வெல்லிங்டனிலும் உல்விச்சிலும் கல்வி பயின்றவர். இராணுவத்தில் பல உயர்ந்த உத்தியோகஸ்தர்களை வகித்திருந்தவர். 1910–12 ல் பிரஸ்டன் தொகுதியில் கன்ஸர்வேடிவ் கட்சியின் பிரதிநிதியாகப் பார்லிமெண்டில் இருந்தார். 1927-ல் பிரிவி கவுன்ஸில்லராக நியமிக்கப்பட்டார். அவர் வேட்டையாடுவதிலும், விளையாட்டுக்களிலும் நிபுணராம். அவர் தேவியார் தோட்டம் போடுவதில் நிபுணராம், புதிய கவர்னர் வரும் வரையில் ரெவின்யூ மெம்பர் கனம் மார்ஷல் பேங்க்ஸ் துரை அவர்கள் கவர்னர்வேலை பார்த்து வருவார்.

## பெண் போலீஸ்.

போல்ஷ்விக் ருஷியாவில் ஆண்களைப் போலே பெண்களையும் போலீஸார் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். போலீஸ் உத்தியோகத்துக்கு 25-க்குமேல் 30-க்குட்பட்ட வயதுடைய பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். போலீஸ் நடை முறைகளைப்பற்றி அவர்களுக்கு ஒன்பது மாதம் கற்பிக்கப்படுகின்றது இளைஞர்கள் பிச்சை யெடுப்பதைத் தடுத்தல், தெருவியாபாரத்தை மேற்பார்வையிடல், சுகாதாரக் காப்பு விதிகள் கைக்கொள்ளப் படுவதைக் கவனித்தல், வாலிபர்களுடைய உடலுக்கும், ஒழுக்கத்திற்கும் ஊறு நேராதபடி பாதுகாத்தல். இளைஞர்கள் குற்றஞ் செய்யாது தடுத்தல், பொதுவிழாக்களில் கலந்து கொள்ளல் முதலிய வேலைகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

## உஷ்ணத்தைத் தணிக்கும் தந்திரம்.

பம்பாய் மாகாணத்தில் பீஜப்பூர் ஜில்லாவில் இருப்பத கலெக்டர் விட் எஸ் நாயக் என்பவர் மரம் வளர்ப்பதில் பெரிதும் ஊக்கமுள்ளவராயிருக்கிறார். அந்த ஜில்லாவில் பஞ்சம் வராது தடுத்தற்கு ஒரு சங்கம் நிறுவப்பட்டு விவசாய வளர்ச்சிக்குரிய பல துறைகளிலும் வேலை செய்து வருகிறார்கள். ஜில்லா பூராவும் மரம் நட்டு வளர்த்தலைக் கைக்கொண்டிருக்கிறது. மிராசுதாரர்கள், உத்தியோகஸ்தர், மாணுக்கர் முதலிய யாவரும் உயிர்த்துத் துணை புரிகின்றனர் இதுவரை 10 லட்சத்திற்கு மேற்பட்ட மரங்களை நட்டு வளர்த்திருக்கிறார்களாம். மரங்களிருப்பதால் நாட்டில் வெப்பம் குறைந்திருக்கிறது. சீதோஷ்ணமும் ஆரோக்கியமானதாக இருக்கிறதாம். மழையும் மரங்கள் நிறைந்த சாலைகளிலும் பலைகளிலுமே அதிகமாக வருஷிக்கின்றது. மரங்கள் வளர்ப்பதால் மழையும் நன்றாகப் பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## இங்கிலாந்தில் விவாக ரத்து.

இங்கிலாந்தில் விவாகரத்து அதிகப்படுகின்றது. மணம் புரிந்த ஐந்தாண்டின் பின்னர் ஏழில் ஒரு பாகமும், பத்தாண்டிற்குப் பின்னர் பாதிபாகமும் விவாக விலக்கு செய்யப்படுகின்றது. விவாகவிலக்கு செய்து கொள்வோரில் பாதிபேர் குழந்தையற்றவர்கள். மூன்றிலொரு பாகத்தினர் ஒரு மகவுடையவர்.

## பெண்கள் அதிகம்.

பசிபிக் மகா சமுத்திரத்திலுள்ள தாவா என்னும் தீவில் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் பதினன்கு மடங்கு அதிகமாக இருக்கின்றனராம்.

## உத்தியோகச் செலவு.

லண்டனிலுள்ளவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் உத்தியோகசாலைகட்குப் போகவர மட்டும் 3 கோடி பவுன் (45 கோடி ரூபாய்) செலவழிக்கின்றனராம்.

## ஜெயிலில் பாரிஸ்டர் படிப்பு.

பதினைந்தாண்டு தண்டனை பெற்று 1914-ம் ஆண்டில் சிறையிடப்பட்ட டேவிஸ் என்பவர் சிறைபடிப்பினராயிருந்தும் கடிதமூலமாகவே சட்டக் கல்வி முழுதும் கற்று முடித்துள்ளாராம். விடுதலையுற்றது சட்டப் பரீட்சையில் தேறிப் பெரிய பாரிஸ்டராக விளங்குவராம்.

## கெடியாரத் தொழிலாளர் தந்தை

கெடியாரம் செய்பவர்க்குத் தகப்பன் (Father of English watch makers) என்றழைக்கப்பட்ட தாமஸ் தாம்பியன் 1676-ம் வருடம் செய்த கெடியாரம் ஒன்று பிரிட்டிஷ் மியூசியத்தில் இன்னும் வேலை செய்து வருகின்றதாம்,



(20)

## சத்துவாச்சாரி. (வடஆற்காடு ஜில்லா)

கிராம பஞ்சாயத்துத் தேர்தல் :— சத்துவாச்சாரி கிராம பஞ்சாயத்தின் காலியான ஆறு ஸ்தானங்களுக்கு 8-2-29-ல் தேர்தல் நடைபெற்றது. ஆறு ஸ்தானங்கள் தேர்தலான பிறகு தலைவர் (பிரசிடெண்டு) பதவி தேர்தல் துவக்கமாயிற்று. இதற்கு இவ்வூர் செங்குந்த மரபில் பிரபலஸ்தரும் சென்ற மூன்று வருடங்களாக பஞ்சாயத்தின் தலைவராயிருந்து வந்தவருமான ம-m-m-ஸ்ரீ. தி. கா. சுக்கிரமணிய முதலியாரே மறுபடியும் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## நளாயணி வெண்பா அரங்கேற்று விழா.

வடஆற்காடு ஜில்லா திருப்பத்தூர் முனிசிபல் சேர்மனும், செந்தமிழ்ப் புலவரும், அருப்பெருங் குணங்கள் வாய்ந்த நம் குலப்பெரியாரும், பிரபல வியாபாரியுமாகிய திரு. கா. அ. சண்முக முதலியார் அவர்கள், பாரதத்தின் ஒரு பாகமாகிய, கற்பரசியாம் நளாயணி காதையை பல நீதிகளும், கற்பனைகளும் அமையப்பெற்ற அழகிய 411 வெண்பாக்களால் இயற்றிய 'நளாயணி வெண்பா' என்னும் நூல் நிகழும் விபவஹு சித்திரைமீ 6உ முதல் திருப்பத்தூர் 'இராம மந்திர'த்தில்குடியேற்றம் முனிசிபல் ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதரும், தர்க்க வேதாந்த போதகாசிரியருமாகிய திரு செங்கல்வராய முதலியார் அவர்கள் தலைமையில் அரங்கேற்றம் செய்யப்பெற்றது.

போளூர் வித்வான் அரங்கசாமி நாயகர் அவர்களால் விரிவுரைசெய்து பலமேற்கோள்களுடன் நன்றாய் விளக்கப் பெற்றது. தினந்தோறும் உள்ளூர் அறிஞர்கள் (ஆண் பெண் இருபாலரும்) சுமார் 500 பேர்களும், வெளியூர்களிலிருந்து அநேக வித்வ சிரோன்மணிகளும், நமது தலைச்சங்கப் பிரதிநிதியாக திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்களும் விஜயஞ் செய்திருந்தார்கள்.

பல வித்வ சிரோன்மணிகள் ஷை நூல் சம்பந்தமாக அரிய சொற்பெருக்குக்கள் நிகழ்த்தினர்கள். நமது தலைச்சங்கப் பிரதிநிதி அந்நூலில் பொதிந்து கிடக்கும் சொல்நயம், பொருள்நயங்களில் சிலவற்றை வெகு அழகாக எடுத்துக்காட்டி இக்கற்புநூல் ஒரு வகையில் மகாவிஷ்ணுவின் அவதாரத்தையும், மற்றொருவகையில் திருக்குறளையும் ஒத்திருக்கிறதென்றும், விளக்கிக் காட்டியதன்றி உத்தம கவியின் இலக்கணங்கள் இதற்கு அமைந்திருக்கின்றன வென்றும் இந்நூலை ஆழ்ந்து படிப்போர்க்கு நூலாசிரியராகிய முதலியார் அவர்களது பரந்தகல்வியும்; விரிந்த அறிவும், தூயஒழுக்கமும் விளங்காமற் போகாதென்றும், நூலும் நூலாசிரியர் புகழும் என்றும்நிலைத்திருப்பதற்கான இலக்கணங்கள் நூலில் அமைந்திருக்கின்றன வென்றும் கூறி அரங்கேறிய நூலின் அருமையை யாவரும் உணருமாறு விளக்கிக் காட்டினர்.

அரங்கேற்றம் பூர்த்தியான 19உ யன்று நூற்றுக்கணக்கானவர்கள் விருந்தளிக்கப்பெற்று நூலும், ஆசிரியர் அவர்களும், நீடூழி வாழ்கவென வாயார வாழ்த்தினர்கள்.

## கவர்ன்மெண்ட் நெசவுச் சாலையைப் பற்றிய அறிவிப்பு.

ஒரு சமூகத்தின் சிறப்பிற்கும் தேசமுன்னேற்றத்திற்கும் கல்வியே பிரதானம். மேல் நாடுகள் நம் நாட்டைவிட முன்னேற்றத்தை அடைந்தவை எனக் கருதுவதற்கு அந்நாடுகளின் மக்களது கல்வி அறிவுத் தேர்ச்சியும், வர்த்தகம் கைத்தொழில் முதலியவற்றில் அவர்கள் அடைந்துள்ள விருத்தியுமே காரணமாகும். நம் நாடு வலிமை குன்றி அடிமைத்தனத்தில் ஆழ்ந்திருப்பது மேற்குறித்தவற்றில் நம்மவர் பிற்போக்கடைந்திருந்தலாலேதான். போராட்டமும் போட்டியும் நிறைந்த இக்காலத்தில் மற்றச் சமூகங்களுடன் நமது சமூகமும் ஒன்றாகப் பலத்துடனும் பெருமையுடனும் நிற்க வேண்டுமாயின் விரிந்து கொண்டேபோகும் ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றத்திற்கான சிறந்த நவீன முறைகளை நாமும் கையாளுதல் வேண்டும். அங்ஙனமின்றி, 'எது எப்படியாயினும் நமக்கென்ன? நாம் செய்து வருவதுதான் 'சிறந்தது' என்று நினைத்துப் பழைய முறைகளையே வைத்திருத்தல் நம்மவரது தாழ்விற்கும் அழிவிற்கும் ஏதுவாகும்.

நமது குலத்தவரின் பிரதான தொழில்களான நூல்நூற்றல், சாயமேற்றல், நெய்தல் முதலியவைகளில் எவ்வளவோ நூதனமான யந்திரங்களும் மேலான முறைகளும் மேல்நாடுகளில் உபயோகிக்கப்படுகின்றன. நம் நாட்டிலும் தற்போது அவைகளைப் பழக்கத்துக்குக்கொண்டு வருகின்றனர். அவை நம்மவரிடையே பரவுவதற்கு நம் வாலிபர்கள் அவற்றைக் கற்றுணர்த லவசியம். இதற்குதவியாக அரசாங்கத்தாரும் ஒரு பெரிய நெசவுச்சாலையைச் சென்னையில் வைத்திருக்கிறார்கள். கொஞ்சம் கொஞ்சமாக ஜில்லா, தாலுக்கா, தலைநகரங்களில் நெசவுக்குரிய படிப்பைப் போதிப்பதற்கு வேண்டிய பிரயத்தனங்களையும் செய்து வருகிறார்கள். அவற்றைப் பிரயோஜனப் படுத்திக்கொள்வது நமது கடமையல்லவா? நாம் தொழிலில் விருத்தி யடையவேண்டுமானல் நம் குலமும் முற்போக்குற்றிருக்கும் மற்ற குலங்களுக்குச் சமமானது என்று எண்ணப்பட வேண்டுமானல், நம்மவர் இராஜீய தேசிய விஷயங்களில் முதன்மைபெற வேண்டுமானல், நம்மவர்கள் வேலைக்குத் திண்டாட்டம், வறுமை முதலிய துன்பங்கட்கு ஆளாகாதிருக்கவேண்டுமானல், நாட்டுப் புறங்களிலும், நகரங்களிலும் கண்ணிய மானவர்கள், தனவந்தர்கள் என்று நம்மவர் கருதப்படவேண்டுமானல் சமூகத்திற்கு ஜீவநாடியான கல்வியையும் செல்வத்தையும் நங்குலத்தினர் அடைதல் வேண்டும். ஜீவனத்துக்குக் கஷ்டப்படுவோரின் பெருமிதமான எண்ணிக்கைக்குக் காரணம் நம்மவர் உத்தியோக வேட்டையில் உழன்று தொழிற்கல்வியை அசட்டை செய்வதே என்பது வெள்ளிடைமலை.

வாலிப நண்பர்களே! கோடைகால விடுமுறைக்குப்பின் ஜூன் ஜூலை மாதங்களில் சிலர் செகண்டரி வகுப்புக்களிலும் சிலர் பத்தாவது வகுப்பிலும் தேர்ச்சி பெறுவீர்கள். உயர்தரப் படிப்புக்காகச்

சென்னை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி முதலிய இடங்களிலுள்ள கல்லூரிகளுக்குச் செல்லச் சிலர் உத்தேசித்திருப்பீர்கள். மற்றுஞ் சிலர் தறிகளில் புகுந்து நெசவுத் தொழிலைக் கவனிக்க முற்படுவீர்கள். அத்தகையோர் நெசவுத்தொழிலில் முன்னேற்றமான நவீன முறைகளைக் கையாளுதற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். கவர்ன்மென்ட் நெசவுச் சாலை (Textile Institute) யில் சேர்ந்து சிறந்த முறைகளைக் கற்கவிரும்புவோர் அதற்குத்தவறாமல் மனுச்செய்து கொள்ளவேண்டும். மனுப்பாரத்தை டை நெசவுச் சாலைக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். மனுப்பாரத்தைப் பூர்த்தி செய்து தலைச்சங்கத்துக்கு அனுப்பவேண்டும்.

இந்த நெசவுச் சாலையில் ஆர்டிசான் கோர்ஸ் (Artisan Course), சுபர்வைசர் கோர்ஸ் (Supervisor Course) என இருவித படிப்புகளுண்டு. முதல் பிரிவு ஒரு வருஷத்தில் முடிவடையும். அதற்குத்தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்திருந்தால் போதும். இரண்டாவதற்கு S.S.L.C. பரீக்ஷையில் தேறியிருக்கவேண்டும். அது முடிய இரண்டு வருஷங்களாகும். இவற்றில் சேரவிரும்புவோர் 13 வயதுக்கு மேற்பட்டவர்களாயிருக்கவேண்டும்.

அங்குப் பொதுவாகக் கற்பிக்கப்படும் விஷயங்கள்:--

1. பஞ்சை நூலாகக் கையாலும், யந்திரங்களிலும் நூற்றலும், கைத்தறியில் நெய்தலும், யந்திரக் கைத்தறியில் நெய்தலும், நீராவியால் இயக்கப்படும் தறியில் நெய்தலும், பட்டுப்பூச்சி வளர்த்தலும், பட்டுக்கூடுகளிலிருந்து நூலெடுத்தலும், பட்டுச் சுற்றலும், கம்பளம் நூற்றலும், பின்னல் வேலைசெய்தலும், சாயமடித்தலும், நெசவின் நுட்பம் பார்த்தலும்;

II. நெசவுச் சம்பந்தமான யந்திரங்களைச் செய்தலும்,

III. புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட யந்திரங்களையும் சக்தியால் இயக்கப்பட்ட தறிகளையும் யாவருக்கும் காண்பித்து அவற்றைப் பரவச்செய்தலும், இன்னும் சரியாகக் கண்டறியப்படாத நெசவுச் சம்பந்தமான விஷயங்களைப்பற்றி யாராய்தலும் இதன் நோக்கங்களாகும்.

இது சென்னை ஜார்ஜ்டவுன் மூக்கர் நல்ல முத்துத் தெருவில் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த நெசவுச் சாலையில் பருத்தி, பட்டு, கம்பளம், சணல், நார்க்கயிறு, கோரை முதலியவை நூற்பதற்கும், துணி, கம்பளம், சமுக்காளம் போர்வை, பாய் முதலியன நெய்தற்கும் நூதன யந்திரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

## மனுப்பாரம்.

DEPARTMENT OF INDUSTRIES, MADRAS.
GOVERNMENT TEXTILE INSTITUTE.
*Form of Application for Admission.*

1. Course desired.
2. Name (in full).
3. Father's or guardian's name (in full).
4. Caste.
5. Father's profession.
6. Address.
7. Age and date of birth.
8. Particulars of general education and certificates. (Students for the Supervisor's Course should furnish the marks obtained by them at the S. S. L. C. Public Examination.)
9. Date of leaving school.
10. Particulars of technical education and certificates held.
11. Occupation, if any, since leaving school.
12. Language spoken.
13. Object with which entrance in the school is desired.

STATION

*Dated* (*Signature of applicant*).

(*Counter signature of parent or guardian.*)

### கவர்மேண்ட் நேசவுச்சாலை.

மூக்கர் நல்லமுத்துதெரு, சென்னை.

1. சேர விரும்பும் கோர்ஸ்:
2. பூராப் பெயர்:
3. தந்தை அல்லது கார்டியன் பூராப்பெயர்:
4. ஜாதி:
5. தகப்பன் தொழில்:
6. மேல்விலாசம்:
7. வயதும் பிறந்த தேதியும்:
8. எவ்வளவு படித்திருப்பது (S. S. L. C. இருப்பின்) பரீக்ஷையில் பெற்ற மார்க்குகள்:
9. பள்ளிக்கூடத்தை விட்ட தேதி:
10. வேறு எந்தத் தொழிற் கல்வியாவது பயின்றிருப்பது:
11. பள்ளிக்கூடத்தை விட்டபின் வேலையிலிருந்தால் என்ன வேலை:
12. பேசும் பாஷை:

பள்ளிக்கூடத்தில் சேர்வதின் கருத்து:

இடம்:

தேதி:

தந்தை அல்லது கார்டியன் கையெழுத்து

*மனுச்செய்யும் மாணவர் கையெழுத்து:



# தலைச் சங்கத்தின் வேனிற்கால விடுமுறைப் பிரசாரம்.

## திருமாற்பேறு.

கல்வி, அறிவு, ஒழுக்கங்களிற் சிறந்த குலாபிமானிகள் பலர் நம்மவர் வதியும் பல ஜில்லாக்களிலும் ஜில்லாவுக்கு இருவர் அல்லது மூவராகப் பிரிந்து வேனிற்கால விடுமுறையில் பிரசாரம் செய்ய ஒத்துக்கொண்டு புறப்படுகிற விபரத்தை மித்திரனில் மற்றோரிடத்தில் காணலாம். இப்பிரசாரம் நாளது மேமீ 4உ ஆரம்பிக்கப்பெற்றது. அதாவது திருவாளர்கள் மா. அ. கனகசபை முதலியார், பி. செ. மாணிக்கவாசக முதலியார் ஆகிய இருவரும் டை 4உ மாலை சென்னையிலிருந்து புறப்பட்டுத் திருமாற்பேறு என்னும் கிராமத்திற்குச் சென்றனர். பளூர் ரெயில்வே ஸ்டேஷனில் அவர்கள் பல பிரமுகர்களால் அன்புடன் வரவேற்று அழைத்துச் செல்லப்பெற்றனர்.

மறுநாள் மாலை 6-மணிக்கு மணிகண்ட முதலியார் சத்திரத்தில் தேவஸ்தான தர்மகர்த்தர் திரு. காளத்தி முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் ஒரு கூட்டம் கூடிற்று. அக்கூட்டத்திற்கு உள்ளூர்ச் சகோதரர்கள் அனைவரும், வெண்பாக்கதுச்சகோதரர்கள் சிலரும் ஸ்ரீலஸ்ரீ நாகலிங்க ஸ்வாமிகளும், தேவஸ்தானத் திருப்பணி ஸ்வாமிகளும் விஜயஞ் செய்திருந்தார்கள். அச்சமயம் பிரசாரகர்கள் இருவரும் 'நமது குலாசாரம்' 'சங்கத்தின் அவசியம்' முதலிய விஷயங்களைக் குறித்து அரிய உபந்யாசங்கள் செய்தனர். பின்னர் அவ்வூரில் அநேக வருஷங்களாக மிகவும் அருமையாக அமைந்திருந்த கட்டுப்பாடு ஏதோ சில காரணங்களால் கலைய' அதனால் அக்கிராமவாசிகள் அனைவரும் அடைந்தநஷ்டத்தையும்கஷ்டத்தையும்எடுத்துரைத்து அதை ஒருவாறு பைசல் செய்து கொடுக்கும் படிக்கேட்டுக் கொண்டதற்கிணங்க அவ்விஷயம் யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய முறையில் பைசல் செய்யப்பெற்றது ' உடனே புதிய காரியஸ்தர்களும் கிராமணிகளும் ஏற்படுத்தப் பெற்றனர். இவ்விஷயங்களில் அவ்வூர்ச் சகோதரர்கள் ஊர் ஒற்றுமையோடும், கட்டுப்பாட்டோடும் இருத்தலே சாலச்சிறப்புடைத்தெனக் கருதி விவகாரங்களை வளர்த்திக்கொண்டே போகாமல் பெருந்தன்மையாக ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்தது கக்ஷிப் பிரதிகக்ஷிகளைப் பிடிவாதத்தோடு வேரூன்றச் செய்து கஷ்டத்தையும் நஷ்டத்தையும் அடைந்து வரும் செங்குந்தர்கள் அனைவரும் பின்பற்றத் தக்க ஒரு அரிய எடுத்துக் காட்டாகும். பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன:

1. திருமாற்பேறு செங்குந்தர் சங்கம் என ஒரு சங்கம் நிறுவப்பெறல் வேண்டும்.

2. இச்சங்கம் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்குக் கிளைச் சங்கமாய் வருஷாவருஷம் அதற்கு ஊர்ப் பொதுப் பணத்திலிருந்து ரூபாய் 10 கட்டணமாகச் செலுத்தி வரவேண்டும்.

3. இச்சங்கத்தின் கூட்டம் கிருத்திகை தோறும் நடைபெறல் வேண்டும்:

4. கீழ்க்கண்ட கனவான்கள் டை சங்கத்தின் உத்தியோகஸ்தர்களாவார்கள்.

தலைவர்: திரு. காமாக்ஷி மணிகண்ட முதலியார், உபதலைவர்: திரு. எல்லப்ப முதலியார், காரியதரிசி: திரு. வெங்கடாசல முதலியார், பொக்கிஷதாரர்: திரு. குப்பாண்டி முதலியார், இதர நிர்வாக சபை அங்கத்தினர்கள்: திருவாளர்கள் நாராயண முதலியார், தர்ம காளத்தி முதலியார், மணியம் அருணாசல முதலியார், ராமாத்தை முதலியார், ப. தர்ம முதலியார், சு. முனிசாமி முதலியார், கணேச முதலியார், பூங்காவன முதலியார், மண்டி பெரியமுத்து முதலியார், கோ. முருகேச முதலியார்.

இரவு 1½-மணிக்கு வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

---

### பெண்களுக்கு இலவசக் கல்வி.

இந்த வருஷம் ஆரம்பம் முதல் சென்னை மாகாணத்தில் பெண்களுக் கெல்லாம் மூன்றாவது பாரம் (iii Form) வரையில் இலவசக் கல்வி யளிப்பதாகச் சர்க்காரார் தீர்மானித்திருக்கின்றனர். கல்வியில் பெரிதும் பின்னடைந்துள்ள நமது பெண்மக்கள் இதனால் பலனடைவார்களாக. பெண்களின் பெற்றோரும் இதைக் கவனித்துப் பிரயோஜனப் படுத்திக் கொள்ளவேண்டும்.

### மண்டலமாணிக்கத்தில் கும்பாபிஷேகம்

சென்ற சித்திரைத் திங்கள் 14உ சுக்கிரவாரம் கரும்பை நகரெனும் மண்டல மாணிக்கம் கைலாசநாதர் அரும்பவள நாயகி கோயில் நடேசர், தண்டாயுதபாணி, நவக்கிரக பிரதிட்டா கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக திருவாளர் கயிலாச பண்டித முதலியார் குமாரன் முத்துப்பண்டித முதலியாரால் நடத்தப்பட்டது.

144446

# 'செங்குந்த மித்திரன்' பஞ்சாங்கம்

**சுக்கிலஷு வைகாசிமீ (1929ஷு மேமீ—ஜூன்மீ) உத்திராயணம், வசந்தருது.**

| ஆங்கிலேயத். | தமிழ். | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | நேத்திரம். | ஜீவன். | வாக்கிய திதி. | யோகினி. | விசேட நாட்கள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14 | 1 | செவ் | சஷ் 28-43 | பூ 46-38 | சி 60 | 1 | ½ | குன் | மேற்கு | |
| 15 | 2 | புத | சப் 23-43 | ஆ 43-58 | சி 60 | 1 | ½ | குன் | வடமே | கங்கோற்பத்தி |
| 16 | 3 | வியா | அஷ் 20-3 | ம 42-35 | அ 42-35 சி | 1 | ½ | அஷ் | வடகிழ | சுபகாரியங்கள் |
| 17 | 4 | வெ | நவ 17-48 | பூ 42-40 | சி 60 | 2 | ½ | நவ | ஆகாசம் | மாடுவாங்க |
| 18 | 5 | சனி | தச 17-0 | உ 44-5 | ம 60 | 2 | 0 | தச | பூமி | |
| 19 | 6 | ஞா | ஏகா 17-35 | அ 47-5 | அ 47-5 சி | 2 | 1 | ஏகா | கிழக்கு | சுபமுகூர்த்தம் |
| 20 | 7 | திங் | துவா 19-25 | சி 51-10 | பி 51-10 அ | 2 | 1 | துவா | வடக்கு | பிரதோஷம் |
| 21 | 8 | செவ் | திர 22-28 | சு 56-50 | சி 56-20 ம | 2 | 1 | திர | தென்கி | நரசிம்ம ஜயந்தி |
| 22 | 9 | புத | சது 26-53 | வி 60 | சி 60 | 2 | 1 | சது | தெமே | |
| மே 23 | 10 | வியா | ○ 31-28 | வி 1-58 | சி 60 | 2 | 1 | பௌ | தெற்கு | திருவள்ளுவ |
| 24 | 11 | வெ | பிர 36-35 | அ 9-35 | சி 9-35 ம | 2 | 1 | பிர | மேற்கு | [நாயனார் திரு |
| 25 | 12 | சனி | துதி 43-5 | கே 16-30 | சி 60 | 2 | 1 | துதி | வடமே | [நக்ஷத்திரம் |
| 26 | 13 | ஞா | திரி 49-18 | மூ 24-3 | அ 24-3 சி | 2 | 1 | திரி | வடகிழ | விவாகம் |
| 27 | 14 | திங் | சது 55-20 | பூ 31-38 | ம 60 | 2 | 1 | சது | ஆகாசம் | |
| 28 | 15 | செவ் | பஞ் 60 | உ 38-50 | அ 38-50 சி | 2 | 1 | பஞ் | பூமி | |
| 29 | 16 | புத | பஞ் 1-15 | தி 45-13 | சி 45-13 பி | 2 | 0 | சஷ் | பூமி | கரிநாள் |
| 30 | 17 | வியா | சஷ் 5-25 | அ 50-30 | சி 50-30 ம | 2 | ½ | சப் | கிழக்கு | கரிநாள் |
| 31 | 18 | வெ | சப் 8-43 | ச 54-35 | சி 60 | 1 | ½ | அஷ் | வடக்கு | சர்வ முகூர்த்தம் |
| 1 | சுக்கிலஷு—வைகாசிமீ 19 | சனி | அஷ் 10-23 | பூ 56-20 | ம 56-20 சி | 1 | ½ | நவ | தென்கி | |
| 2 | 20 | ஞா | நவ 10-13 | உ 56-30 | அ 60 | 1 | ½ | தச | தெமே | கதிரறுக்க |
| 3 | 21 | திங் | தச 8-3 | ரே 54-45 | சி 60 | 1 | ½ | ஏகா | தெற்கு | |
| 4 | 22 | செவ் | ஏகா 4-5<br>துவா 58-28 | அ 51-35 | சி 60 | 0 | ½ | துவா | மேற்கு | |
| 5 | 23 | புத | திர 51-23 | ப 46-18 | சி 46-18 அ | 0 | ½ | திர | வடகிழ | பிரதோஷம் |
| ஜூன் 6 | 24 | வியா | சது 43-8 | கி* 40-10 | ம 60 | 0 | 0 | சது | ஆகாசம் | கிருத்திகை |
| 7 | 25 | வெ | ●அ 34-13 | ரோ 33-15 | ம 33-15 சி | 0 | 0 | அமா | பூமி | அமாவாசை |
| 8 | 26 | சனி | பிர 24-53 | மி 25-58 | சி 60 | 0 | 0 | பிர | கிழக்கு | |
| 9 | 27 | ஞா | துதி 15-33 | தி 18-45 | சி 60 | 0 | 0 | துதி | வடக்கு | |
| 10 | 28 | திங் | திரி 6-43<br>சது 58-55 | பு 12-5 | அ 12-5 சி | 0 | ½ | திரி<br>சது | தென்கி | சேக்கிழார்சுவாமி<br>[கள் திருநக்ஷத் |
| 11 | 29 | செவ் | பஞ் 52-18 | பூ 6-15 | சி 60 | 0 | ½ | பஞ் | தெற்கு | [திரம் |
| 12 | 30 | புத | சஷ் 47-3 | ஆ 1-45<br>ம 58-55 | சி 60 | 1 | ½ | சஷ் | மேற்கு | |
| 13 | 31 | வியா | சப் 43-38 | பூர 57-45 | சி 57-45 ம | 1 | ½ | சப் | வடமே | |

# அன்பருக்குச் சில விளம்பரங்கள்.

## குலதிலகரின் புகைப்படங்கள்.

'செங்குந்தமித்திரன்' ஆபீஸில் நமது குலதிலகரின் புகைப்படங்கள் கீழ்க்கண்ட விலைகளுக்குக் கிடைக்கும்:—

| | ரூ. அ. பை. |
|---|---|
| ஒட்டக்கூத்தர் | 1—8—0 |
| தலைச்சங்கத்தின் நிருவாக அங்கத்தினர் (22 பேர் கொண்ட படம்) | 2—8—0 |
| ம. சண்முகசுந்தர முதலியார், 'செங்குந்தமித்திரன்' பத்திரிகாசிரியர் | 1—8—0 |
| தலைச்சங்கப் பிரசாரகர்கள் | 1—8—0 |

இத்தொகையில் படத்தின் கிரயம் பாக்கிங் தபால்செலவு முதலிய அனைத்தும் அடங்கியுள்ளன. வேண்டுவோர் முன்பணமனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

## 'மகாநாட்டு மலர்

ஈரோட்டில் விபவஞ ஸ்ரீ தைமீ" கூடிய தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாட்டின் வைபவங்களும், நிகழ்ச்சிகளும், தலைவர்களின் பேருரைகளும், தீர்மானங்களும், அறிஞரின் அபிப்பிராயங்களும், தலைச்சங்கத்தின் முயற்சிகளும் வெளுத்த வளவளப்பான தாளில் வெகு அழகாக அச்சிடப்பெற்று, நூற்றுக்கு மேற்பட்ட ஆப்டோன் படங்களுடன், இம் 'மகாநாட்டு மலரில் அடங்கியிருக்கின்றன. நமது 'மித்திரன்' செல்லாத ஒவ்வொரு செங்குந்த குடும்பத்திலும் இப்புத்தகமேனும் ஒன்று இருக்கவேண்டியது அவசியம். இதன் விலை அணு 8 தான். தபாற்செலவு அணு 3. வேண்டுவோர் முன்பணமாக அணு 11 அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

## விளம்பர விகிதங்கள்.

'செங்குந்த மித்திர'னில் விளம்பரஞ் செய்ய விரும்புவோர் கீழ்க்கண்ட விகிதம் முன்பணமாகக் கட்டணஞ் செலுத்தவேண்டும். மாதம் மாதம் 5,000 பிரதிகள் அச்சாகின்றன. ஜாதிப் பத்திரிகைகளுள் இதற்கு மேலான பத்திரிகை யில்லை. இதில் விளம்பரஞ் செய்வோர்க்கு அதிக பலனுண்டு:—

| | | ஒரு வருஷம். | ஆறு மாதம். | மூன்று மாதம். | ஒரு மாதம். |
|---|---|---|---|---|---|
| ஒரு பக்கம் | ரூ. | 100 | 50 | 26 | 10 |
| ½ பக்கம் | ,, | 60 | 33 | 16 | 6 |
| ¼ பக்கம் | ,, | 40 | 20 | 11 | 4 |

## செங்குந்த மித்திரன் 2-வது ஆண்டு பைண்டு புத்தகம்.

சென்ற ஆண்டின் செங்குந்த மித்திரன் வேண்டுமென்று அநேகர் விரும்பியபடியால் செலவழிந்துவிட்ட முதல் மூன்று மாதப்பத்திரிகைகளையும் மீண்டும் பதிப்பித்து மொத்தமாக 12 சஞ்சிகைகளையும் மிக அழகாகப் பைண்டு செய்துள்ளோம். செங்குந்தர் ஒவ்வொருவர் வீட்டிலும் இவ்விலை புத்தகம் இருக்கவேண்டுவது அவசியம். சொற்ப புத்தகங்களே கைவசமுள்ளன.

விலை தபாற் செலவு உள்பட ரூபா 2—0—0.

இங்ஙனம்:

மானேஜர், 'செங்குந்த மித்திரன்' ஆபீஸ்,

8½, அரண்மனைக்காரன் தெரு, [illegible]

# " செங்குந்த மித்திரன் "

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

**ஆசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.**

இது உண்மைச் செங்குந்தர்கள் முன்னேற்றமடையும் வண்ணம் வெளிவரும் ஒரு மாதப் பத்திரிகை. இதில், செங்குந்தர்களின் பண்டைப் புகழைப் பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புக்களும், குலதிலகர் சரித்திரங்களும், விரதாதி பண்டிகைகளின் ஐதீகங்களும், பொதுவில் அறிவையும் நல்லுணர்வையும் புகட்டும் சிறந்த கட்டுரைகளும், வியாபார விவசாய வைத்தியக் குறிப்புக்களும், தொழில் முறைகளும், உலகவர்த்தமானங்களும், ஆங்காங்கே செங்குந்தரிடையே நிகழும் முன்னேற்றக் கிளர்ச்சிகளின் விருத்தாந்தங்களும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரசாரம் முதலிய தொண்டுகளின் விவரங்களும், வேடிக்கைத் துணுக்குக்களும், விநோதக் கதைகளும் சம்பாஷணைகளும், செங்குந்தர் பஞ்சாங்கம் முதலியவைகளும் வெளிவருகின்றன. அன்பர்களின் ஆதரவு அதிகமாகக் கிடைக்குமாயின், பத்திரிகையைத் துவக்கும் ஆண்டில் முன்னிலும் அழகாகவும், இன்பகரமாகவும், பலசுவையுந் ததும்புமாறு சித்திரங்களோடு கூடிய சிறிய விஷயங்களைக் கொண்டதாகவும், பொதுவில் நம்மவர் அறிவும் ஒழுக்கமும் ஓங்கி உன்னத வாழ்க்கைக்குரிய சாதனங்களை அடையும் நெறியிலும் வெகு சிறப்பாகத் தோற்றுவிக்க உத்தேசிக்கிறோம். ஆகவே, நமது குலப்பத்திரிகைக்கு அன்பர்கள் ஆதரவு அதிகமும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஒவ்வொரு செங்குந்த குடும்பமும் 'செங்குந்த மித்திர'னை வரவழைக்கவேண்டுமென்னும் கொள்கை நம்மவருள் பரவுமானால் நமது 'மித்திர'னுக்கு வலுவேற்பட்டு அதன் வாயிலாக நமது குலமுன்னேற்றம் சீக்கிரம் சித்தியடையுமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. இக்கொள்கையையே நமது குலப்பிரமுகர்கள் தமது வாக்குச் செல்லுமிடங்களிலெல்லாம் நாட்டி வருவார்களென நம்புகின்றோம்.

| | | |
|---|---|---|
| தபாற்கூலி உள்பட வருஷச் சந்தா | ரூ. அ. பை. | |
| இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்கட்கு | 1—8—0 | தனிச்சஞ்சிகை ஒன்றுக்கு |
| பினாங்கு, சிங்கப்பூர், ஆப்பிரிகா ,, | 2—0—0 | 0—2—6. |

# " செங்குந்தர் பிரபந்தத் திரட்டு '

என்னும் அரிய பெரிய நூல் வெளிவந்து விட்டது. இது கவிச்சக்ரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் செய்தருளிய 'ஈட்டி எழுபது', 'எழுப்பெழுபது', மற்றைய பெரும்புலவர் பலர் செய்தருளிய களிப்பொருபது, திருக்கை வழக்கம், பிள்ளைத் தமிழ், கலித்துறை மாலை, தசாங்கம், ஊசல், லாலி, கட்டியம், எச்சரிக்கை, மங்களம் முதலியன செங்குந்த விநாயகர் மாலை, செங்குந்த சிலாக்கியர் மாலை, செங்குந்த வேற் பதிகம், செங்குந்த மரபு விளக்கம், சூறுவளி, திருக்கை வழக்கத்தந்தாதி, செங்குந்த குலமாட்சி ஆகிய 15 பிரபந்தங்களும் அடங்கியது.

இப்புத்தகத்தைச் செங்குந்த குலமக்கள் ஒவ்வொருவரும் வாங்கி விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாதலால் இதனைக் கண்ணுறும் சகோதரர்கள் இப்பிரபந்தத் திரட்டை ஆதரிக்க வேணுமாய்க் கோருகிறோம்.

[illegible] பதிப்பு காலிகோபயிண்டில் பொன் கிலிட் செய்தது விலை ரூ. 2-8-0.

தபாற் கூலி பிரத்தியேகம்.

புத்தகம் கிடைக்குமிடம் :—

மானேஜர், 'செங்குந்த மித்திரன்' ஆபீஸ்,

நெ. 31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை

This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the **South Indian Sengundha Mahajana Sangam Madras**, at 31 Armenian Street, Madras and is printed by T. C. Nataraja Mudaliar at the Cambridge Press 8/19-A. Armenian Street, Madras.